
# க.பொ.த.உயர்தரம்

## தமிழ்

# கவிதைகள்



தென்புலோலியூர் பரா.ரதீஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த. உயர்தரம்
## தமிழ்



# கவிதைகள்



தென்புலோலியூர் பரா.ரதீஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- க.பொ.த உயர்தரம் கவிதைகள்
- ஆசிரியர் தென்புலோலியூர் பரா.ரதீஸ் (பதிப்புரிமையுடையது)
- அகில இலங்கை இளங்கோ கழக வெளியீடு . தென் புலோலி . யாழ்ப்பாணம்.
- பருத்தித்துறை S.P.M அச்சுப் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டது.
- முதற்பதிப்பு - 2015. ஆனி




தொடர்புகளுக்கு :

க.ப.பரராஜசிங்கம்,
"கலைக்கோயில்"
சின்னத்தாய் ,
புலோலி தெற்கு . புலோலி.
021 - 3734402


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்



**பேராசிரியர் க.அருணாசலம்**

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கடந்த முப்பத்து மூன்று ஆண்டுகளாக விரிவுரையாளராகவும், பேராசிரியராகவும் கடமையாற்றி வருகின்றேன். இந்நீண்ட காலப்பகுதியில் எந்த ஒரு மாணவனையோ, மாணவியையோ ஓர வஞ்சகமாக நடத்தியதில்லை. மாணவர்களது ஊர், மாவட்டம், பிரதேசம், குலம், கோத்திரம் முதலியன பற்றி விசாரிப்பது மில்லை.

**-பேராசிரியர் க.அருணாசலம்-**

(பரா ரதீஸ் அவர்களின் சிலப்பதிகாரமும் ஈழத்து இசை நாடகங்களும் என்ற நூலுக்கான அணிந்துரையின் ஒரு பகுதி. கார்த்திகை, 2004இல் வழங்கப்பட்டது.)

பேராசிரியரின் மேற்படி கூற்று எவ்வளவு உண்மையானது என்பதை அவரது மாணவர்கள் அனைவரும் உணர்ந்து கொள்வர். தனது வாழ்க்கை முறையினால் பலருக்கும் முன்னோடியாக விளங்கியவர். சொல்லையும், செயலையும், சிந்தனையையும் ஒன்றாக்கி தமிழ் வளர்த்த செம்மல். மாலைகளையும், மேடைகளையும் தேடிப் போகாது தமிழ்த் தாய்க்கு புகழ் மாலை சூட்டிய தமிழ்ச் சான்றோன். என்மீது அன்பு பூண்டு என்னைத் தமிழ் கொண்டு ஆளாக்கிய பிதாமகன். அப்பெருந்தகை பேராசிரியர் க.அருணாசலத்திற்கு இந்நூல் சமர்ப்பணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களோடு ...

**தென்புலோலியூர் பரா.ரதீஸ்**

**அனைவருக்கும் வணக்கம் ,**

இன்னொரு இலக்கிய முயற்சியோடு உங்களை மீண்டும் சந்திக்கின்றேன். க.பொ.த.உயர்தரம் தமிழிற்கான தேர்ந்தெடுக்கப்பட்ட கவிதைகளை உள்ளடக்கியதாக இந்நூல் அமைந்துள்ளது. கவிதைகளுக்கான வினாக்களும், விடைக் குறிப்புக்களும் வழங்கப்பட்டுள்ளன. மிக நுட்பமான முறையில் வினாக்களைக் கண்டறிந்து விடை அளித்துள்ளமை இந்நூலிற்கான சிறப்பம்சம் என்று நம்புகின்றேன்.

இந்நூல் வெளிவருவதற்கு மூலகாரணம் என் அன்புத் தம்பி ச.அன்ரனி தான். அவனுக்கு எனது நன்றிகள். என் சிந்தனைகளுக்கு வரிவடிவம் கொடுத்தவர் எங்களது அன்பு மாணவி செல்வி ஜெனனி திருமால் அவர்கள். அவர்களுக்கும் அவரது பெற்றோர்க்கும் என் நன்றிகள். கூடவே செல்வி ச.டறினா லெம்பேட் (மாணவ ஆசிரியர், வவுனியா, தேசிய கல்வியியற் கல்லூரி) அவர்களுக்கும் செல்வி வாசுகி சிவசக்திவேல் அவர்களுக்கும் எனது நன்றிகள். படியினை ஒப்புநோக்கி சீர் செய்து தந்த தம்பி அன்ரனிக்கும், மாணவி ஜெனனிக்கும் மீண்டும் நன்றிகள். இந் நூலினை அழகுற கணனி வடிவமைப்புச் செய்து தந்த **S.P.M** அச்சுப் பதிப்பகத்தினருக்கும் எனது நன்றிகள்.

இந்நூலினை அண்மையில் அமரத்துவம் அடைந்த எனது ஆசான் பேராசிரியர் க.அருணாசலம் அவர்களுக்கு சமர்ப்பணம் செய்வதில் மன நிறைவடைகின்றேன்.

எனது இலக்கிய அறுவடைகளை அங்கீகரித்த தமிழுலகம் இம் முயற்சியையும் ஏற்றுக்கொள்ளும் என்ற உயர்ந்த நம்பிக்கையோடு இன்னொரு முயற்சியில் சந்திக்கும் வரை உங்களிடமிருந்து விடைபெற்றுக் கொள்கின்றேன்.

நிறைவாக கலையின் அரசனாக இருந்து எம்மையெல்லாம் வாழ்வித்துக் கொண்டிருக்கும் ஆதிமூல நாதனாம் சிவன் தாள் பணிந்து அவனருள் வேண்டி அமைகின்றேன்.

**வாழ்க *தமிழ்*! வளர்க கலை!!**

**என்றும் அன்புடன்**

**கவிஞர், மொழியும் வள்ளல்,**
**இலக்கியச்செம்மல்**
**தென்புலோலியூர் பரா ரதீஸ்**

ஆசிரியர்,
யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை,
பருத்தித்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதியார் கவிதைகள் (1882 – 1921)

தமிழ்க்கவிதையின் உருவத்திலும் உள்ளடக்கத்திலும் பாரிய பெறுமதி வாய்ந்த மாற்றங்களைச்செய்தவன் பாரதி. நவீன தமிழ்க்கவிதையின் பிதாமகன் என்று போற்றப்படுபவன். நெஞ்சிலே உரமுமின்றி சிந்தனைத்திறனுமின்றி வாய்ச்சொல்லில் வீரர்களாக இருந்த மக்களைத் தட்டியெழுப்பி விடுதலை வேட்கையை ஊட்டியவன். கண்ணன்பாட்டு, பாஞ்சாலி சபதம், குயிற்பாட்டு என்பன பாரதியால் தமிழுக்கு வழங்கப்பட்ட முப்பெரும் இலக்கியங்கள். கடந்த காலத்தினுடைய பெருமையையும், நிகழ்காலத்தினுடைய குறை நிறைகளையும், எதிர்காலத்தினுடைய போக்கையும் பாடிய கவிஞர் மரபில் நின்று புதுமையைப்பாடிய பெருங்கவிஞன்.

## பாரதமாதா திருப்பள்ளியெழுச்சி

துயிலிடை நிலை என்பதைத் திருப்பள்ளியெழுச்சி என்பர். அரசன், போர்வீரன் போன்றோரை இனிமையான, உணர்ச்சி மிக்க பொருத்தமான சொற்களைப்பயன்படுத்தி காலையில் எழுப்புகின்ற மரபு ஆரம்பத்தில் எம்மிடமிருந்தது. பின்னர் இம்மரபு தெய்வங்களை எழுப்புவதற்காகப் பயன்படுத்தப்பட்டது. மாணிக்கவாசகர், தொண்டரடிப்பொடியாழ்வார் ஆகியோரால் பாடப்பெற்ற திருப்பள்ளியெழுச்சிகளைக் குறிப்பிடலாம். இவ்வடிவத்தை மக்களுக்கு விடுதலை வேட்கையை ஊட்டுவதற்காகப் பாரதியார் பயன்படுத்தினார்.

பொழுது புலர்ந்தது; யாம் செய்த தவத்தால்
புன்மை இருட்கணம் போயின யாவும்;
எழுபசும் பொற்சுடர் எங்கணும் பரவி
எழுந்து விளங்கியது அறிவெனும் இரவி;
தொழுதுனை வாழ்த்தி வணங்குதற்கு இங்குன்
தொண்டர்பல் லாயிரர் சூழ்ந்து நிற்கின்றோம்.
விழிதுயில் கின்றனை இன்னும் எம்தாயே!
வியப்பிதுகாண்! பள்ளி எழுந்தருளாயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புள்ளினம் ஆர்த்தன; ஆர்த்தன முரசம்;
பொங்கியது எங்குஞ் சுதந்திர நாதம்;
வெள்ளிய சங்கம் முழங்கின; கேளாய்!
வீதியெலாமணு குற்றனர் மாதர்
தெள்ளிய அந்தணர் வேதமும், நின்றன்
சீர்திரு நாமமும் ஓதிநிற் கின்றார்;
அள்ளிய தெள்ளமுது அன்னைஎம் அன்னை!
ஆருயிரே பள்ளி எழுந்தருளாயே!

பருதியின் பேரொளி வானிடைக் கண்டோம்;
பார்மிசை நின்னொளி காணுதற்கு அலந்தோம்;
கருதிநின் சேவடி அணிவதற்கு என்றே
கனிவுறு நெஞ்சக மலர்கொடு வந்தோம்;
சுருதிகள் பயந்தனை; சாத்திரம் கோடி
சொல்லரு மாண்பினை ஈன்றனை அம்மே!
நிருதர்கள் நடுக்குறச்சூல்கரத்து ஏற்றாய்!
நிர்மலையே! பள்ளி எழுந்தருளாயே!

நின்னெழில் விழியருள் காண்பதற்கு எங்கள்
நெஞ்சகத்து ஆவலை நீயறிவாயோ?
பொன்னனை யாய்வெண் பனிமுடி இமயப்
பொருப்பினன் ஈந்த பெருந்தவப்பொருளே
என்ன தவங்கள் செய்து எத்தனை காலம்
ஏங்குவம் நின்னருட்கு ஏழையம் யாமே?
இன்னமும் துயிலுதி யேல் இது நன்றோ!
இன்னுயிரே! பள்ளி எழுந்தரு ளாயே!

மதலையர் எழுப்பவும் தாய்துயில் வாயோ?
மாநிலம் பெற்றவள் இஃதுண ராயோ?
குதலை மொழிக்கிரங் காதொரு தாயோ?
கோமகளே! பெரும் பாரதர்க்கரசே!
விதமுறு நின்மொழி பதினெட்டும் கூறி
வேண்டியவாறு உனைப் பாடுதல் காணாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதமுற வந்தெமை ஆண்டருள் செய்வாய்!
ஈன்றவளே பள்ளி எழுந்தருளாயே!

i) **பாரதி கூறவந்த விடயம்.**

திருப்பள்ளியெழுச்சி என்ற கவிதையினூடாகப் பாரதி தாய்நாட்டினுடைய பற்றையும், சுதந்திர வேட்கையையும் வலியுறுத்துகிறார். தேசத்தினுடைய அறியாமையாகிய இருளை அகற்றி அறிவாகிய ஒளியினை உண்டு பண்ணி சுதந்திரத்தை எட்டுவதற்கு மக்களுக்கு வேட்கையை ஊட்டுகின்றான். தாய் நாட்டினைத் தெய்வத்தினுடைய வடிவமாகக் காட்டி வந்தனைக்குரியது என்ற உணர்வை ஊட்டித் தாய்நாட்டின் மீதான பற்றை வலியுறுத்துகிறான்.

ii) **பாரதமாதாவின் / பாரத நாட்டின் சிறப்பு.**

பாரதி பாரதத்தாயைப் பார்த்து விழிக்கின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவன் பாரத நாட்டின் மீது கொண்ட மதிப்பையும், பெருமையையும் நாம் கண்டு கொள்கிறோம்.

எம் தாயே, அள்ளிய தெள்ளமுது, அன்னைஎம் அன்னை, ஆருயிர், இன்னுயிர்

**"சுருதிகள் பயந்தனை சாத்திரங்கோடி**
**சொல்லரு மாண்பின ஈன்றனை அம்மே!"** என்ற அடிகளினூடாகப் பாரத நாட்டினுடைய பழம்பெருமையை அறிந்து கொள்கிறோம். அதாவது வேதங்கள், தத்துவங்கள் எல்லாம் தோன்றி வார்த்தைகளால் சொல்ல முடியாத பெருமைக்குரியது இந்த மண் என்று கூறுவதனூடாக இதன் பெருமையைக் கண்டு கொள்கிறோம்.

**"விதமுறு நின்மொழி பதினெட்டும் கூறி**
**வேண்டியவாறு உனைப் பாடுதும் காணாய்.."** என்ற தொடர்களினூடாகப் பதினெட்டு மொழிகளுக்குச் சொந்தமான / பேசப்பட்ட நாடு பாரதநாடு என்பதைக்கண்டு கொள்கிறோம். பாரத நாட்டைப் பெண்ணாகக் கண்டது மட்டுமன்றி தெய்வமாகவும் காண்கிறான் பாரதி. இவ்விடத்திலும் பாரத நாட்டினுடைய பெருமையை நாம் கண்டுகொள்கிறோம்.

**"நிருதர்கள் நடுக்குறச் சூல் கரத்தேற்றாய்!..."**
**"வெண் பனிமுடி இமயப் பொருப்பினன் ஈந்த பொருளே..."**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iii) **காலைக்காட்சி**

பொழுது புலர்தல்
இருள் அகன்று சூரியன் தோன்றுதல்
பறவைகள் ஓசை எழுப்புதல்
முரசுகள், சங்குகள் ஒலித்தல்
மக்கள் வீதிகளிலே கூடுதல்
அந்தணர்கள் வேதங்களை ஓதுதல்.

iv) **காலைக்காட்சியைப் பாரதி பாடியதில் உள்ள சிறப்பு.**

பாரதி இக்கவிதையினூடாக வெறுமனே காலைக்காட்சியை மட்டும் பாடவில்லை. அதனூடாக இன்றைய பாரதநாட்டினுடைய நிலையையும் பாரத நாட்டில் ஏற்பட வேண்டிய மாற்றங்களையும் சுதந்திர வேட்கையையும் வெளிப்படுத்துகிறான்.

பாரதி கூறும் இருள், சாதாரண இருளல்ல. அது அறியாமையாகிய இருள். அது தான் நீங்கியது என்கிறான் பாரதி. பாரதி கூறும் சூரியன் சாதாரண சூரியன் அல்ல, அறிவாகிய சூரியன். முரசினூடாகக் கேட்ட ஓசை சாதாரண ஓசை அல்ல, சுதந்திர நாதம். அந்தணர்கள் அதிகாலையில் வேதத்தை மட்டும் ஓதவில்லை, பாரதத்தாயினுடைய பெருமைகளையும் ஓதுகிறார்கள். அதிகாலையில் வீதியில் பெண்கள் நெருங்கி வந்து விட்டார்கள். காரணம் பாரத நாட்டின் விடுதலைக்காக போராட வந்து விட்டார்கள். இப்படிப் பார்க்கும் போது பாரதி காலைக்காட்சியினூடாக சுதந்திர வேட்கையை, தமிழ் நாட்டினுடைய பற்றினை வெளிப்படுத்துகிறான்.

v) **பாரதி பாரத நாட்டின் மீது கொண்ட பற்று / மதிப்பு.**

* பாரத நாட்டைத் தாயாகப் பாரதி காணும் இடத்து அவன் நாட்டின் மீது கொண்ட பற்றைக் காண்கிறோம்.
* பாரத நாட்டைத் தெய்வமாகவும் அங்கு வாழுகின்ற மக்களை அடியவர்களாக /தொண்டர்களாகப் பாரதி பாடுமிடத்தும் பாரதி நாட்டின் மீது கொண்ட பற்றைக் காண முடிகிறது.
* பாரதத்தாயைப் பாரதி விளிக்கின்ற ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் அவன் நாட்டின் மீது கொண்ட பற்றை நாம் கண்டு கொள்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* பாரதி கையாண்ட பின்வரும் தொடர்கள் அவன் நாட்டின் மீது கொண்ட பற்றை /மதிப்பை வெளிப்படுத்துகின்றன.

**"நின் சேவடி அணிவதற்கு என்றே**
**கனிவுறு நெஞ்சக மலர்கொடு வந்தோம்"**

vi) **தான் கூற வந்த விடயங்களை வெளிப்படுத்திய விதம் / உத்திகள்.**

* பள்ளியெழுச்சி என்ற மரபார்ந்த வடிவத்தைப் பயன்படுத்திப் பாரத நாட்டின் மீது தான் கொண்ட பற்றையும் அந்நாடு விடுதலை பெறவேண்டும் என்ற தனது அவாவையும் வெளிப்படுத்தியமை.
* **"பொழுது புலர்ந்தது யாம் செய்த தவத்தால்**
**புன்மை இருட் கணம் போயின யாவும்**
**எழுபசும் பொற்சுடர் எங்கணும் பரவி**
**எழுந்து விளங்கியது அறிவெனும் இரவி"**

அறியாமை அகன்று அறிவொளி வருவதற்கு முன்னரே அறியாமை அகன்று விட்டதாகவும் அறிவொளி வந்து விட்டதாகவும் விடுதலை வேட்கையைப் பாடுவது ஒரு உத்தியாகும்.
* **"தொண்டர் பல்லாயிரர் சூழ்ந்து நிற்கின்றோம்**
**விழி துயில்கின்றனை இன்னும் எந்தாயே"** என்று பாடி போராட்டத்தியாகிகளை உற்சாகப்படுத்துகின்றமையும் ஒரு உத்தி ஆகும்.
* பாரத நாட்டினைத் தாயாகவும், தெய்வமாகவும் உருவகித்துப் பாடியமையும் ஒரு உத்தி ஆகும்.
* பாரத நாட்டைத் தாயாகவும் அங்கு வாழுகின்ற மக்களைப் பிள்ளையாகவும் பாவித்துப் பாடியுள்ளமையும் ஒரு உத்தியாகும்.

**"மதலையர் எழுப்பவும் தாய் துயில்வாயோ?**
**மாநிலம் பெற்றவள் இஃது உணராயோ?**
**குதலை மொழிக்கு இரங்கா தொரு தாயோ?"**

## அணிப்பிரயோகம்

### அ) உவமையணி

"பசும் பொற்சுடர்.." - பொன் போன்ற ஒளி
"பொன்னனையாய்.." பொன் போன்றவள் /திருமகள் போன்றவள்
"தெள்ளமுதன்னை.." - அமிர்தம் போன்ற தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆ) மாணிக்கவாசகர் பாடிய பள்ளியெழுச்சிக்கும் பாரதி பாடிய பள்ளி யெழுச்சிக்குமிடையிலான ஒற்றுமைகளும் வேற்றுமைகளும்.**

துயிலிடை நிலை என்பதைத் திருப்பள்ளியெழுச்சி என்றும் அழைப்பர். அரசர், போர்வீரர் போன்றோர் துயில் கொள்ளும் போது அவர்களை இனிமையான, உணர்ச்சி மிக்க சொற்களைப் பயன்படுத்தி எழுப்புகின்ற மரபு தமிழில் நீண்டகாலமாக இருந்தது. இதனை சமயநிலைக்குள் கொண்டு போனவர்கள் இருவர். ஒருவர் மாணிக்கவாசகர் மற்றவர் தொண்டரடிப்பொடியாழ்வார். இவர்கள் இறைவனது பெருமைகளைக்கூறி அவனைத் துயில் எழுப்பினார்கள். பின்னர் தமிழ்நாட்டினுடைய பற்றை வலியுறுத்த, விடுதலை வேட்கையை வலியுறுத்த திருப்பள்ளியெழுச்சியைப் பயன்படுத்தினான் பாரதி. மாணிக்கவாசகரது திருப்பள்ளியெழுச்சிக்கும் பாரதியினுடைய திருப்பள்ளியெழுச்சிக்கும் ஒற்றுமைகள், வேற்றுமைகள் இருப்பதை நாம் காண்கிறோம்.

இருவரும் பள்ளியெழுச்சி என்ற வடிவத்தைப் பயன்படுத்தி தாம் கூறவந்த கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளனர்.

இருவரும் தாம் படைத்த பள்ளியெழுச்சிகளினூடாகக் காலைக் காட்சிகளைப் பாடியிருக்கிறார்கள்.

மாணிக்கவாசகர் ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் எம்பெருமான் பள்ளியெழுந்தருளாயே என்று பாடியது போலப் பாரதியும் பள்ளியெழுந்தருளாயே என்று தான் முடிக்கிறான்.

இவ்வாறு இருவரது பள்ளியெழுச்சிகளுக்கு இடையேயும் ஒற்றுமை காணப்பட்டாலும் அடிப்படையில் ஒரு வேறுபாடு காணப்படுகிறது.

மாணிக்கவாசகர் திருப்பள்ளியெழுச்சி என்ற வடிவத்தைப் பயன்படுத்தித் திருப்பெருந்துறையில் இருக்கின்ற சிவனுடைய பெருமைகளைப் பேசி இருக்கின்றார். எனவே சமயச்செய்தி கூற மாணிக்கவாசகர் பள்ளியெழுச்சியைப் பாடினார். ஆனால் பாரதியோ பள்ளியெழுச்சி என்ற வடிவத்தைப் பயன்படுத்தி சுதந்திர வேட்கையை நாட்டுப்பற்றைப் பாரத நாட்டினுடைய நிலையை வெளிப்படுத்தியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ) உருவக அணி.

- ✱ பாரத நாட்டைத் தாயாக உருவகித்தமை.
- ✱ "புன்மையிருட் கணம்.." என்ற தொடரிலே அறியாமையை இருளாக உருவகித்தமை.
- ✱ "அறிவெனும் இரவி..." அறிவை சூரியனாக உருவகித்தல்.
- ✱ பாரதத் தாயைக் காளியாக, ஐமவதியாக உருவகித்தல்.

**பாரதி கையாண்ட மொழிநடை.**

✱ பாரதி தான் படைத்த கவிதையில் அணிப்பிரயோகத்தைப் பயன்படுத்தி உள்ளான்.

✱ சுதந்திர வேட்கையை ஊட்டுகின்ற சொல்லாட்சியைப் பயன்படுத்தியமை.

**"பொங்கியது எங்கும் சுதந்திர நாதம்"**
**"தொண்டர் பல்லாயிரர் சூழ்ந்து நிற்கிறோம்."**

✱ அன்னைக்கு, தெய்வத்திற்குப் பயன்படுத்துகின்ற சொல்லாட்சியைப் பாரத நாட்டிற்குப் பயன்படுத்திப் பாடியுள்ளமை.

**"அள்ளிய தெள்ளமுது அன்னை எம் அன்னை....."**
**"ஆருயிர்...."**
**"நிர்மலை..."**
**"இன்னுயிர்.."**
**"இதமுற வந்து எமை ஆண்டு அருள் செய்வாய்.."**

✱ காலைக்காட்சியை எம்மனக்கண் முன் கொண்டு வருகின்ற அற்புதமான மொழிநடை.

**"புள்ளினம் ஆர்த்தன ஆர்த்தன முரசம்..."**

✱ தான் கூற வந்த விடயங்கள் கற்போரை சென்றடைய வேண்டும் என்ற நோக்கில் கையாளப்பட்டுள்ள எளிமையான மொழிநடை.

**"விதமுறு நின்மொழி பதினெட்டும் கூறி**
**வேண்டியவாறு உனைப் பாடுதும் காணாய்!**
**இதமுற வந்து எமை ஆண்டு அருள் செய்வாய்!**
**ஈன்றவளே! பள்ளி எழுந்தருளாயே"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பாரதி பாரதமாதாவைத் துயிலெழுப்பியமைக்கான காரணம்.**

பாரதமக்கள் அடிமை வாழ்வினை அகற்றிச் சுதந்திரமாக வாழ வேண்டும் என்பது பாரதியின் பேரவா. ஆனால் அவன் வாழ்ந்த காலத்துப் பாரத மக்களோ விடுதலை உணர்வற்றவர்களாக இருந்தார்கள். ஆங்கில அரசின் அடிமைகளாக வாழ்ந்தார்கள். இந்நிலையில் மக்களுக்கு விடுதலை உணர்வை ஊட்டி சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட வைப்பதற்காகப் பாரதி திருப்பள்ளியெழுச்சியைப் பாடினான்.

அறியாமையாகிய இருள் அகன்று விட்டது. அறிவாகிய சூரியன் வந்து விட்டான். தொண்டர்கள் கூடி நிற்கிறார்கள். சுதந்திர நாதம் கேட்கிறது. பெண்கள் விடுதலைப் போராட்டத்திற்காக நெருங்கி விட்டார்கள் என்றெல்லாம் பாடி விடுதலை உணர்வற்று இருந்த மக்களைத் தட்டியெழுப்பி விடுதலை உணர்வை ஊட்டவே பாரதி திருப்பள்ளியெழுச்சியைப் பாடினான்.

# பெண்கள் விடுதலைக்கும்மி

கும்மியென்பது பெண்கள் கைகொட்டிப்பாடியாடும் ஆடல் வகையாகும். “வட்டமிட்டுப்பெண்கள் வளைகரங்கள் தாம் ஒலிக்கக் கொட்டி இசைத்திடுமோர் கூட்டமுதப்பாட்டு” என்று கும்மிக்கு விளக்கமளிப்பார் பாரதி. கும்மியென்ற கலைவடிவம் பெண்களிடத்திலே பெற்றிருந்த செல்வாக்கை உணர்ந்து கொண்ட பாரதி பெண் விடுதலை பற்றிய கருத்துக்களைக் கும்மி வடிவத்திலே வெளிப்படுத்தியுள்ளார்.

**காப்பு**

பெண்கள் விடுதலை பெற்ற மகிழ்ச்சிகள்
பேசிக் களிப்பொடு நாம் பாட
கண்களிலே யொளி போல வுயிரில்
கலந்தொளிர் தெய்வம் நற்காப்பாமே.

கும்மியடி தமிழ்நாடு முழுவதுங்
குலுங்கிடக் கைகொட்டிக்கும்மியடி
நம்மைப்பிடித்த பிசாசுகள் போயின
நன்மை கண்டோமென்று கும்மியடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்
றெண்ணி யிருந்தவர் மாய்ந்துவிட்டார்;
வீட்டுக்குள்ளே பெண்ணைப்பூட்டி வைப்போமென்ற
விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்.

மாட்டையடித்து வசக்கித்தொழுவினில்
மாட்டும் வழக்கத்தைக்கொண்டு வந்தே.
வீட்டினிலெம்மிடம் காட்டிவந்தார். அதை
வெட்டி விட்டோமென்று கும்மியடி.

நல்ல விலைகொண்டு நாயைவிற்பார். அந்த
நாயிடம் யோசனை கேட்பதுண்டோ?
கொல்லத்துணிவின்றி நம்மையும் அந்நிலை
கூட்டிவைத் தார்பழி கூட்டிவிட்டார்.

கற்பு நிலையென்று சொல்லவந்தார் இரு
கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்
வற்புறுத்திப்பெண்ணைக் கட்டிக்கொடுக்கும்
வழக்கத்தைத்தள்ளி மிதித்திடுவோம்.

பட்டங்கள் ஆள்வதுஞ் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்தவந்தோம்;
எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே பெண்
இளைப்பில்லை காணென்று கும்மியடி!

வேதம் படைக்கவும் நீதிகள் செய்யவும்
வேண்டி வந்தோமென்று கும்மியடி
சாதம் படைக்கவும் செய்திடுவோம்; தெய்வச்
சாதி படைக்கவும் செய்திடுவோம்.

காதலொருவனைக் கைப்பிடித்தேயவன்
காரியம் யாவினும் கைகொடுத்து
மாதர் அறங்கள் பழமையைக் காட்டிலும்
மாட்சி பெறச்செய்து வாழ்வமடி!

i) **பாரதியாரின் பெண் விடுதலைக்கும்மி என்ற கவிதையில் கூறப்படும் விடயம் யாது?**

பெண் அடிமைத்தனத்திலிருந்து விடுபட்டு எழுச்சியும் பெருமையும் பெற்றுப் பெண்கள் வாழ வேண்டும் என்பதே இக்கவிதையின் உயிர். இதையே இக்கவிதையினூடாகக் கவிஞர் கூற முற்படுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ii) **இக்கவிதையினூடாக வெளிப்படுத்தப்படும் பாரதியின் தெய்வநம்பிக்கை.**

பெண் விடுதலைக்கும்மி என்ற கவிதையைப் பாட வந்த பாரதி தெய்வத்தின் மீது காப்புப் பாடுகின்றான்.

**"தெய்வ நற் காப்பாமே.."** என்று பாடுகின்றார். இதிலிருந்து இவனது தெய்வநம்பிக்கையை நாம் காண்கிறோம். கண்களில் ஒளி போல தன் உயிரோடு இறைவன் கலந்திருப்பதாகப் பாடுகின்றான்.

**கண்களிலே ஒளி போல உயிரில்**
**கலந்து ஒளிர் தெய்வ நற்காப்பாமே.**

iii) **பாரதி வாழ்ந்த காலப் பெண்களின் நிலை.**

- பெண்களினது கல்வி உரிமை மறுக்கப்பட்டிருந்தது. ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமை என்று எண்ணினர்.
- வீட்டிற்குள்ளே பெண்ணைப் பூட்டி வைத்தனர்.
- மாட்டை அடிப்பதைப் போல பெண்களை அடித்துத் துன்பப்படுத்தினர்.
- பெண்களின் விருப்பமின்றி அவர்களைக் கட்டாயப்படுத்தித் திருமணம் செய்து வைத்தனர்.
- கற்பு என்று கூறிக்கொண்டு வற்புறுத்தித் திருமணம் செய்து வைத்தார்கள்.

iv) **பாரதி காண விழைந்த பெண்களின் நிலை / பாரதி கண்ட சுதந்திரப்பெண் / பெண்கள் பற்றி பாரதியின் நோக்கு / பெண்கள் எத்தகைய நிலையை அடைய வேண்டும் எனப் பாரதியார் விரும்புகிறார்.**

- பெண் அடிமைத்தனத்திலிருந்து விடுபட்டு அவர்கள் சுதந்திரமாக வாழ வேண்டும்.
- நூல்களை எல்லாம் கற்று அறிவிலே மேம்பட்டுத் திகழ வேண்டும்.
- பெண்கள் வீட்டிற்குள் அடிமைப்பட்டு இருக்கும் நிலை மாறிச் சுதந்திரமாக வெளியே வர வேண்டும்.
- பெண்கள் தான் விரும்புகின்றவனைத் திருமணம் செய்து மகிழ்ச்சியாக வாழ வேண்டும்.
- பட்டங்கள் பெற்றுச் சட்டங்கள் வகுத்துப் பாரில் வாழ வேண்டும்.
- அறிவிலே ஆணுக்குச் சமமாகத் திகழ வேண்டும்.
- வேதங்களைப் படைத்து நீதிகளைச் செய்து உலகில் வாழ வேண்டும்.
- உணவு சமைத்துக் குடும்பத்தினரைப் பேணித் தெய்வப்பிள்ளைகளை உற்பவித்தும் உலகில் வாழ வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢ காதலன் ஒருவனைக் கைப்பிடித்து அவன் காரியங்களுக்கு எல்லாம் துணையாக நின்று மாதர் அறங்களை மாட்சியுறச் செய்ய வேண்டும்.

**v) பாரதி மரபில் நின்று புதுமையைப் பாடினான். இக்கூற்றை ஏற்றுக்கொள்வீரா? விளக்குக.**

➢ மரபில் நின்று புதுமையைப் பாடியவன் பாரதி. இதை அவனது பல கவிதைகளில் நாம் காணலாம். பெண் விடுதலைக்கும்மியிலும் இதனைத் தரிசிக்க முடிகிறது. பெண் விடுதலை என்ற புதுமையைப் பேச வந்த பாரதி கும்மி என்ற வடிவத்தைப் பயன்படுத்தி உள்ளார்.

➢ பாரம்பரியமாகப் புலவர்கள் காப்புப் பாடுவதைப் போல பாரதியும் காப்புப் பாடியுள்ளான்.

➢ "சாதம் படைக்கவும் செய்திடுவோம் - தெய்வச்
சாதி படைக்கவும் செய்திடுவோம்" போன்ற வரிகளும் மரபில் நின்று அவன் புதுமையை சிந்தித்ததை வெளிப்படுத்துகின்றன.

**vi) பாரதி கையாண்ட உத்திகள்.**

➢ கும்மி என்பது பெண்கள் கைகொட்டிப் பாடி ஆடும் ஆடல் வகை ஆகும். "வட்டமிட்டுப் பெண்கள் வளைகரங்கள் தாம் ஒலிக்கக் கொட்டி இசைத்திடுமோர் கூட்டமுதப் பாட்டு" என்று கும்மிக்கு விளக்கம் கொடுத்தான் பாரதி. இக்கும்மி என்ற வடிவத்தைப் பயன்படுத்திப் பெண் விடுதலை சார்ந்த கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளமை மிகச்சிறந்த உத்தி ஆகும்.

➢ பெண்கள் விடுதலை பெற்று வாழ வேண்டும் என்பதே பாரதியின் அவா. பெண்களே தாம் விடுதலை அடைந்து விட்டதாகப் பாடுவதாகப் பாடல்களைப்பாடி அவர்களுக்கு விடுதலைசார் உணர்வை ஊட்டி இருக்கின்றமை சிறந்த உத்தி ஆகும்.

➢ காப்புப் பாடி பெண் விடுதலையைப் பாடுகிறான். பெண்கள் விடுதலை அடைவதற்குத் தெய்வம் துணை செய்ய வேண்டும் என்பதைக் குறிப்பால் உணர்த்துகின்றான். இதுவும் சிறந்த உத்தியாகும்.

➢ தன்னுடைய கருத்துக்களைப் பின்வரும் மூன்று விதங்களில் பாரதி வெளிப்படுத்துகின்றான்.

i) வெளியிலிருந்து போதனை செய்வது போலப் பாடுகின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ii) பெண்களினுடைய உணர்வுகளைக் கிளறி விட்டு அவர்கள் உண்மைகளை உணரச்செய்வது போலப் பாடுகின்றான்.

iii) தானும் அவர்களோடு கூட நின்று அவர்களை உற்சாகப்படுத்துவது போலப் பாடுகிறான்.

➢ ஆழக்கருத்துக்களை வெளிப்படுத்தும் அற்புதமான சொற்பிரயோகம்.

"நம்மைப்பிடித்த பிசாசுகள்"

"விந்தை மனிதர்"

"மாதர் அறங்கள்"

➢ **அணிப்பிரயோகம்**

i) பெண்ணடிமைத்தனத்தை நம்மைப்பிடித்த பிசாசுகள் என்று உருவகித்துள்ளமை.

ii) நாயிடம் எந்தவிதமான கேள்விகளுமின்றி நல்ல விலைக்கு விற்பதைப் போல பெண்களையும் அவர்களது விருப்பமின்றித் திருமணம் செய்து கொடுத்தார்கள் என்கிறார். (உவமை)

vii) **பெண்களுக்கு இருக்க வேண்டிய உரிமைகள் எனப் பாரதி கூறுவன யாவை?**

கல்வி கற்கும் உரிமை

தான் விரும்பியவனைத் திருமணம் செய்யும் உரிமை

ஆண்களுக்குச் சமமாக வாழும் உரிமை

வெளியில் சுதந்திரமாக வாழும் உரிமை

# ஞாயிறு

**பா**ரதியார் தமிழில் வசன கவிதைக்கு முன்னோடியாகத்திகழ்ந்தவர். இவர் வசன கவிதையைப் பாடியமைக்கு பின்வரும் காரணங்களைக்கூறுவர். பாரதி ஒரு பிராமணன் ஆதலால் வேதச்சூழலில் வாழ்ந்து சமஸ்கிருத சுலோகங்களின் தாக்கத்திற்குட்பட்டமை. சமஸ்கிருத சுலோகத்திலேயுள்ள சிறிய சிறிய சொற்களால் கவரப்பட்டமை, "ஷெல்லி" என்ற ஆங்கிலக்கவிஞனின் வசனக் கவிதையின் தாக்கம். ஞாயிறு என்ற இக்கவிதையானது பாரதிக்கு இயற்கை மீதிருந்த ஈடுபாட்டை வெளிப்படுத்துகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒளிதருவது யாது? தீராத இளமையுடையது யாது?
வெய்யவன் யாவன்? இன்பம் எவனுடையது?
மழை எவன் தருகின்றான்? கண் எவனுடையது?
உயிர் எவன் தருகின்றான்?
புகழ் எவன் தருகின்றான்? புகழ் எவனுக்குரியது?
அறிவு எதுபோல் சுடரும்?
அறிவுத்தெய்வத்தின் கோயில் எது?
ஞாயிறு
அது நன்று.

நீ ஒளி, நீ சுடர், நீ விளக்கம், நீ காட்சி
மின்னல், இரத்தினம், கனல், தீக்கொழுந்து
இவையெல்லாம் நினது நிகழ்ச்சி
கண் நினது வீடு
புகழ், வீரம் - இவை நினது லீலை
அறிவு நின்குறி, அறிவின் குறி நீ
நீ சுடுகின்றாய், வாழ்க, நீ காட்டுகின்றாய், வாழ்க
உயிர் தருகின்றாய், உடல் தருகின்றாய்
வளர்க்கின்றாய், மாய்க்கின்றாய்,
நீர் தருகின்றாய், காற்றை வீசுகின்றாய், வாழ்க.

i) **ஞாயிறு என்ற கவிதையினூடாகப் பாரதி கூற வந்த விடயம் யாது?**

பாரதியின் இக் கவிதையூடாகப் பாரதி இயற்கையில் கொண்ட ஈடுபாட்டினை எம்மால் தரிசிக்க முடிகிறது. சூரியனுடைய சிறப்புக்கள், அவனுடைய பயன்கள் என்பவற்றை இக் கவிதை வெளிப்படுத்துகிறது.

ii) **சூரியனுடைய பெருமைகள் / மாட்சிமைகள்.**

- என்றும் இளமையோடு இருப்பவன்.
- உலகிற்கே ஒளி கொடுப்பவன்
- இறைவனது கண்ணாக விளங்குபவன்
- புகழுக்கு உரியவன்
- அறிவுத் தெய்வத்தின் கோயிலாக விளங்குபவன்
- ஒளி, சுடர், விளக்கம், காட்சி இவை எல்லாமாகவும் விளங்குகின்றவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அறிவின் குறியாக விளங்குபவன்.
- இன்பம் , மழை , புகழ் , உயிர் , மின்னல் எனப் பலவற்றையும் அளிக்கின்றவன்.

iii) **சூரியனது செயற்பாடுகள்.**

- உலகிற்கு ஒளி கொடுத்தல்.
- இறைவனுடைய கண்ணாக இருந்து உலக செயற்பாட்டை அவதானித்தல்.
- உயிர், புகழ் என்பவற்றை அளித்தல்
- மின்னல், இரத்தினம், கனல், தீக்கொழுந்து போன்ற செயற்பாடுகளைக் கொண்டிருத்தல்.
- சுடுகின்ற கதிர்களை வீசுதல்
- இருளகற்றி ஒளி கொடுத்து உலகத்தைக் காட்டுதல்.
- நீர், காற்று போன்றவற்றை உலகிற்கு கொடுத்தல்.
- உயிர் வாழ்தல், உடல் வளர்ச்சி, அழிவு போன்றவற்றிற்குக் காரணமாக இருத்தல்.

iv) **"கண் எவனுடையது?", "கண் நினது வீடு" ஆகிய வரிகள் கவிதையில் பெறும் முக்கியத்துவம் யாது?**

பாரதி வேதச்சூழலில் வாழ்ந்தவன், சமஸ்கிருத சுலோகங்களின் தாக்கத்திற்குட்பட்டவன், வேதங்களில் இறைவன், சூரியனைக் கண்ணாகக் கொண்டு உலகைப் பார்க்கின்றான் என்று கூறப்படுகிறது. இக்கருத்தினையே பாரதி இங்கு வெளிப்படுத்துகின்றார்.

v) **"புகழ், வீரம் இவை நினது லீலை. அறிவு நின்குறி அறிவின் குறி நீ" என்ற வரிகள் இக்கவிதையில் பெறும் முக்கியத்துவம் யாது?**

சூரியன் மிக்க புகழுக்குரியவன் என்பதையும் அவன் மிகச் சிறந்த வீரன் என்பதையும் பாரதி இங்கு வெளிப்படுத்துகிறான். மேலும் அறிவு சூரியனுடைய அடையாளம் என்பதையும் அறிவின் அடையாளமாகச் சூரியன் விளங்குகிறான் என்பதையும் எடுத்துக்கூறுவதனூடாக அறிவிற்கும் சூரியனுக்கும் இடையிலான தொடர்பை வெளிப்படுத்துகிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

vi) **இக்கவிதையின் எடுத்துரைப்பு முறை.**

- மிகச்சிறிய சிறிய சொற்களைப் பயன்படுத்தியமை
- வசன அமைப்பினைப் பயன்படுத்தியமை
- சூரியனுடைய பெருமைகளை வினாக்களாக்கி அவ்வினாக்களுக்கு எல்லாம் சூரியன் என்று விடையளிக்க வைத்தல்.

# உமர்கய்யாம் பாடல்கள்

**பா**ரசீகத்தைச் சேர்ந்த (தற்போதைய ஈரான்) பெருங்கவிஞர்களில் ஒருவா் உமர்கய்யாம். கி.பி 1048ல் பிறந்தவர். பாரசீகத்தின் தென்கிழக்குப் பகுதியிலுள்ள நிஷாப்பூர் என்னும் இடத்தில் பிறந்தவர். இவரது இயற்பெயர் கியாதுடீன் அபுல்பாத் உமார் என்பதாகும். கூடாரம் செய்பவன் என்ற பொருளைத் தருகின்ற கய்யாம் என்ற பெயரைத் தன் பெயரோடு இணைத்து உமர்கய்யாம் எனத் தனக்குப் பெயர் சூட்டிக் கொண்டார். வாழ்க்கை பற்றியும் அதன் பயனற்ற வறிய தன்மை பற்றியும் பாடியுள்ள உமர்கய்யாம் இன்றும் மக்களால் போற்றப்படுகின்றார்.

**கவிஞர் ச.து.சு.யோகியார் கவிதை (1904-1963)**

வளம்மிகு கவிதைகளைப் படைத்து தமிழ் மொழிக்குப் பெறுமானம் அளித்தவர்களில் ச.து.சு.யோகியாரும் ஒருவர். துரைச்சாமி ஐயருக்கும் மீனாட்சி அம்மாளுக்கும் மகனாக 1904ம் ஆண்டு பிறந்தார். தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் ஆற்றல் மிக்கவர். கவிதை, சிறுகதை, உரைநடை, காவியம், மொழிபெயர்ப்பு எனப் பல்துறைகளிலும் தன்னை அடையாளப்படுத்தியவர்.

சுற்றி நடம் புரியும்
சுடர்ரோஜா கூறுதல்காண்;
குற்றமிலாச்சிரிப்போடு இக்
குவலயத்தே பிறந்தேன்; என்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டிதழின் மூடு மொட்டுப்
பெட்டி திறந்து உள்ளவெலாம்
கொட்டினேன் மணம் வீசக்
குளிர்காவில் முழுவதுமே.

பொன்னை விளைத்துப்
புதைப்போரும், மழைத்துளிபோல்
பொன்னைப் பெருங்காற்றில்
பறக்கவிட்டுப்போவோரும்
என்ன பயன் கண்டார்?
இறந்தார்; பின் மண்புதைந்தார்;
பொன்னேனும் பேர்த்தெடுப்பர்
பொன் புகழும் பெற்றிலரே.

காணும் கன வெல்லாம்
கரியாகப்போகுமன்றிப்
பேணிப்பெருமை தரும்
பெருங்கனவும் எல்லாமும்
பாலை வனாந்தரத்துப்
பனி ஒளிபோல் சின்னேரம்
கோலம் விளக்கிப்பின்
குமைவது காண் - காணோமே!

## கவிஞர் அப்துல்காதர் லெப்பை கவிதை (1913-1984)

கிழக்கிலங்கை காத்தான்குடியைச் சேர்ந்தவர். 1913ம் ஆண்டு பிறந்தவர். 1965ஆம் ஆண்டு 'டுபாய்யாத்' என்ற பெயரில் உமர்கய்யாமின் கவிதைகளை மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளார். இம் மொழிபெயர்ப்பிற்கு இலங்கை சாகித்திய மண்டல பரிசு கிடைத்தமையும் குறிப்பிடத்தக்கது. இவரது படைப்பாகிய செய்நம்பு நாச்சியார் மாண்மியம் இவருக்கு மிகுந்த புகழைத் தேடிக் கொடுத்ததோடு இன்றும் இவர் பெயரைப் பேச வைத்துக் கொண்டிருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராய் அந்த ரோஜாவைப்
பார்த்து நகைக்கும் அதனழகைத்;
தேராய் அதுசொல் வார்த்தையிது
"திகழும் இந்த உலகினிடை
நேராய் வந்து மலர்ந்துளதாம்,
நிறைந்த பட்டுப் பைகீறிச்
சீராய் நிதியைப் படிமீது
சிதறி விதைத்துச்சென்றிடுமாம்"

நெடிதே எண்ணி வருந்துவதேன்?
நினைத்த எல்லாம் உலகினிலே
முடிவாய் வெந்த சாம்பரென
முடிவ தன்றி வேறில்லை;
படியும் தூசி மணல் மீது
பாலை வனத்தின் பனி என்றும்
நொடிதே தோன்றி ஒளிவீசி
நொய்தாய் ஈற்றில் மறைவது போல்

மழைபோல் வாரி யளித்தவரும்,
மறைவாய்ப்பூட்டி யொளித்தவரும்,
பிழையே யின்றி ஈற்றினிலே
பிரிந்து மண்ணாய்ப்போனதனால்,
விழைவோ டாரும் அவருடலம்
விலை பொன்னாக மாறியதாய்
அழையார் தோண்டியெடுத்ததனின்
அளவும் உரையும் காணாரே.

**கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை கவிதை**

பாரதி, பாரதிதாசனுக்கு அடுத்ததாகப் போற்றப்படுகின்ற ஒரு கவிஞர் கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை. உமர்கய்யாமின் கவிதைகளை மொழிபெயர்த்து 1951ஆம் ஆண்டு உமர்கய்யாம் பாடல்கள் என்ற பெயரில் வெளியிட்டுள்ளார். கவிமணியின் மொழிபெயர்ப்பு எளிமையும், இனிமையும் உடையதாகக் காணப்படுகின்றது.

சிரித்தரோஜா மலரைப்பார்;
செப்பும் இனிய மொழியைக்கேள்;
'அருத்தி யோடிவ் உலகில் வந்து
அழகார் நந்த வனமதிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரித்த பட்டுப் பைகீறிப்
பைம்பொன் நிதியைப்படிமீது
விரித்துவீசி எங்கெங்கும்
விதைத்துச் செல்வேன்' என்றிடுமே.

நினைப்பு நீண்டு தழைத்துவரும்;
நீறிவெந்து சாம்பருமாம்;
அனைத்தும் பாலை வனத்திலே
அமையும் பனிபோல் அரைநொடியில்
மனத்தில் தோன்றி நிலையாது
மாண்டு மறைதல் உண்மையதாம்;
எனைத்து நூலின் வலியாலும்
இதனை மறக்க இயலாதே.

வாரி வாரிக் கொடுத்தவரும்
வழங்கி டாது வைத்தவரும்
பாரில் மண்ணாய்ப்போனதனால்
பசும்பொன்னானது அறியோமே!
ஊரில் அவர்தம் உடலையெடுத்து
உரையும் நிறையும் காணாரே;
ஓரும் உள்ளத்துன்மையிதை
ஊன்றி நோக்கி உணர்வாயே!

**i) உமர்கய்யாம் கவிதையில் கூறப்படும் விடயங்கள் யாவை?**

மனித வாழ்வினுடைய நிலையாமையை வலியுறுத்துகின்ற ஒரு கவிதை இது. எங்களது எண்ணங்கள், கற்பனைகள் யாவுமே நிலையற்றவை. வள்ளலாக இருந்தால் என்ன உலோபியாக இருந்தால் என்ன எல்லோருடைய வாழ்வும் மண்ணாவது தான் முடிவு. இதனை உமர்கய்யாம் ரோஜாமலர், பாலைவனம், பனித்துளி போன்ற குறியீடுகளினூடாக வெளிப்படுத்தியிருக்கக் காண்கிறோம்.

**ii) உமர்கய்யாம் பாடல்களில் நிலையாமைக் கருத்துக்கள்.**

உமர்கய்யாமின் கவிதைகளில் பொதுவாக நிலையாமை, துயரம், கண்ணீர் என்பன விஞ்சி நிற்பதாகக் கூறுவர். இக்கவிதையும் நிலையாமையை வலியுறுத்தி நிற்பதைக் காண்கிறோம். பெருமிதத்தோடும் விருப்பத்தோடும் மலர்ந்த ரோஜா மலர் கருகி விழுகிறது. இது தான் எமது மனித வாழ்வு. நாமும் பெருமையோடும் கர்வத்தோடும் ஆயிரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணங்கள் கற்பனையோடும் வாழ்கின்றோம. ஆனால் நிறைவிலே எம் வாழ்வு அழிந்து போகிறது. இங்கே ரோஜாவைக் குறியீடாகக் கொண்டு மனித வாழ்வின் நிலையாமையைக் கூறுகிறார்.

மனிதனுடைய எண்ணங்கள், கற்பனைகள் யாவுமே நிலையற்றவை. சிலவேளை எம் எண்ணங்கள் நிறைவேறினாலும் அவை நிலைத்திருப்பதில்லை. இதனை பாலைவனத்தின் பனித்துளியோடு ஒப்பிட்டு வலியுறுத்துகிறான் கவிஞன். பாலைவனத்தில் தோன்றும் பனித்துளி நிலைத்து நிற்பது கிடையாது. அந்தக்கணமே அற்றுப்போய் விடும். அதுபோல தான் எம் வாழ்வின் கற்பனைகள், எண்ணங்கள் இங்கு கூறப்படுகின்றது.

## மொழிபெயர்ப்புக்களிலுள்ள வேறுபாடு

| கவிமணி சி.தேசிகவிநாயகம்பிள்ளை | ச.து.சு.யோகியார் | அப்துல் காதர் |
|---|---|---|
| தமிழ்க்கவிதைப் பண்பாட்டுப் பின்புலத்தை அடிப் படையாகக் கொண்டு மொழிபெயர்த்துள்ளார். | தமிழ்க்கவிதை மரபை விட சமய பண்பாட்டிற்கு முக்கியத் துவம் கொடுத்து மொழி பெயர்த் துள்ளார். | இஸ்லாமிய பாரம்பரியத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து மொழிபெயர்த்துள்ளார். |
| ''சிரித்த ரோஜா மலரைப்பார் செப்பும் இனிய மொழியைக் கேள்'' என்று கவிதையை ஆரம்பிக்கிறார். | ''சுற்றி நடம் புரியும் சுடர் ரோஜா கூறுதல் காண்'' என்று கவி தையை ஆரம்பிக்கிறார். | ''பாராய் அந்த ரோஜாவைப் பார்த்து நகைக்கும் அதழகை'' என்று கவிதையை ஆரம்பிக் கிறார். |
| மொழிபெயர்ப்பில் எளிமையை தரிசிக்க முடிகிறது. | ஓரளவு கடினமான மொழிநடை பயன்படுத்தப்பட்டுள்ளது. சொற்சுருக்கம் காணப்படுகிறது. | நிலையாமைக் கருத்தை வலியு றுத்தத் தர்ககரீதியான நியாயங் களை முன்வைத்துள்ளார். சற்று நீட்டி மொழிபெயர்த்துள்ளார். |
| ''அருத்தியோடு இவ்வுலகில் வந்து'' என்று மலரைப் பாடுகிறார். | ''குற்றமிலாச் சிரிப்போடு இக் குவலயத்தே பிறந்தேன்'' என மலரைப்பாடுகின்றார். | ''திகழும் இந்த உலகினில்'' என்று உலகைப் பாடுகின்றார். |
| பாலைவனம் என்றார் | பாலைவனாந்தரம் என்றார். | பாலைவனம் என்றர். |
| உவமை பயன்படுத்தாது ''வாரி வாரிக் கொடுத்தவரும்'' என்றார். | ''மழைத்துளி போல் பொன்னைப் பெருங்காற்றில் பறக்கவிட்டுப் போவோரும்'' என்றார். | ''மழைபோல் வாரி அளித்த வரும்'' என்றார். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வெளிப்படுத்திய விதம்**

| கவிமணி சி.தேசிகவிநாயகம்பிள்ளை | ச.து.சு.யோகியார் | அப்துல் காதர் |
|---|---|---|
| மனித நிலையாமையைப் பேச ரோஜா மலரைக் குறியீடாகப் பயன்படுத்தியுள்ளமை. | மனித நிலையாமையைப் பேச ரோஜா மலரைக் குறியீடாகப் பயனப்டுத்தியுள்ளமை. | மனித நிலையாமையைப் பேச ரோஜா மலரைக் குறியீடாகப் பயன்படுத்தியுள்ளமை. |
| "பாலைவனத்தினிலே அமையும் பனிபோல் அரைநொடியில் மனத்தில் தோன்றி நிலையாது மாண்டு மறைதல்." உதாரணங்காட்டி விளக்குதல். பாலைவனத்தில் படிகின்ற பனியைப் போன்று எமது வாழ்வு நிலையற்றது என்பதை வலியுறுத்தல். | "பாலைவனாந்தரத்துப் பனி ஒளி போல் சின்னேரம் கோலம் விளக்கிப் பின் குமைவது காண்" உதாரணங்காட்டி விளக்குதல். | "படியும் தூசி மணல் மீது பாலை வனத்தின் பனி என்றும் நொடிதே தோன்றி ஒளிவீசி நொய்தாய் ஈற்றில் மறைவது போல்". உதாரணங்காட்டி விளக்குதல். |
| ஒப்பீட்டு முறையைக் கையாண்டு வெளிப்படுத்தியமை. பொன்னைச் சேர்த்து வைப்பவராக இருந்தால் என்ன பொன்னைப் பிறருக்கு கொடுத்தவர் என்றாலும் எல்லோரும் மண்ணாய்ப போவது முடிவு. | ஒப்பீட்டு முறையைக் கையாளுதல். | ஒப்பீட்டு முறையைக் கையாளுதல். |
| எளிமையான முறையில் மொழி பெயர்த்தார். | சொற்சுருக்கத்தைக் கையாண்டு மொழிபெயர்த்துள்ளார். கவிமணியோடு ஒப்பிடும் போது இவருடைய மொழிநடை சுருக்கமாக இருப்பது குறிப்பிடத் தக்கது. | கற்போர் விளங்க வேண்டும் என்பதற்காக நீட்டி மொழி பெயர்த்துள்ளார். |
| தமிழ்க்கவிதைப் பாரம்பரியத் திற்கு முக்கியத்துவம் கொடுத்து மொழி பெயர்த்துள்ளார். | சமய பண்பாட்டிற்கு முக்கியத துவம் கொடுத்து மொழி பெயர்த்துள்ளமை. | இஸ்லாமியப் பாரம்பரியத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து மொழி பெயர்த்துள்ளமை. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| ரோஜா மலரைப் பேச வைத்தமை. | ரோஜா மலரைப் பேச வைத்தமை. | |
| சில தனித்துவமான சொல்லாட்சிகள் "அருத்தியோடு இவ்வுலகில் வந்து அழகார் நந்தவனமதிலே" | சில தனித்துவமான சொல்லாட்சிகள்.<br>"பாலைவனாந்தரம்".<br>"பொன்னை பெருங்காற்றில் பறக்க விட்டுப் போவோர்" | சில தனித்துவமான சொல்லாட்சிகள்.<br>"திகழும் இந்த உலகினிடை"<br>"மழை போல் வாரி அளித்தவர்". |
| கற்போருக்கு விளித்துக் கூறுதல்.<br>"சிரித்த ரோஜா மலரைப் பார் செப்பும் இனிய மொழியைக்கேள்" | | கற்போருக்கு விளித்துக் கூறல்<br>"பாராய் அந்த ரோஜாவை" |
| உலக நிலையாமையை அழுத்திக் கூறல்.<br>"ஓரும் உள்ளத் துண்மையிதை ஊன்றி நோக்கி உணர்வாயே" | | |

# கம்பதாசன் கவிதை
# (1916 – 1973)

சுப்பராயர், பாலம்மாள் தம்பதிகளுக்கு மகனாக திண்டிவனம் அருகேயுள்ள உலகாபுரம் என்ற கிராமத்தில் பிறந்தார். இவரது இயற்பெயர் அப்பாவு. சி.எஸ்.இராஜப்பா, கம்பதாசன் ஆகிய புனைபெயர்களில் எழுத்துலகில் தன்னை அடையாளப்படுத்தினார். "புதுக்குரல்", "பாட்டு முடியுமுன்னே", "கனவு", விதியின் விழிப்பு", "அருணோதயம்", "முத்துச்சிமிக்கி", "ஆதிகவி", "சிற்பி" போன்றன இவரது படைப்புக்கள்.

## தொழில்

கீழ்த்திசையின் இருட்கீறி கிளர் உஷைநுதலில்
கிளிமூக்கு நிறப்பொட்டு தீட்டும் கிரணன்
ஆழ்கடலின் அலைகளிடம் ஆடல்கற்றே
அனற்சுவாலை யிடத்தோடி அருளும் காற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீழ்புனலில் ஏழ்வர்ணம் விளைத்து புலத்தை
விளைவேற்றி வினையின் திறன் விளம்பும் நதிகள்
சூழ் மதுவை விருந்தீந்து சுரும்பு பாட
சுகந்தத்தைத் தூவுகுளிர் சோலை மலர்கள்.

அந்தரத்தே இருட்சாணம் மெழுகி உடுவாம்
அரும்புள்ளிக்கோலமிடும் அந்திவானம்
விந்தையதாம் வேழமென விண்ணில் பறந்து
வெண்முத்து நேர்திவலை சிந்தும் மேகம்
செந்துளிராம் புல்நுனியில் வைரச்சிரிப்பைத்
தெளித்திரவி அணைப்பினிலே சேர் பனித்துளிகள்
சுந்தரமாய் காதலர்கள் தூக்கம் நீங்கிச்
சொல்லாடத்தூண்டவரும் சோதி மயம்.

மண்ணுழுது பொன்நெல்தரும் தாய்நேர் உழவர்,
மானமொடு வாழக்கலை நெய்கை கோளர்,
விண்ணதிர முரசார்த்துப் பகைமை வீழ்த்தி,
வெற்றியின்சங் கூதுகின்ற யுத்த வீரர்,
கண்துயிலை நேர்மரணம், கண்ணின் விழிப்பு
காட்சிநிகர் ஜனனம் மொழிகாக்கும் கவிஞர்,
உண்மை என உள்ளதெனும் தெய்வம் இந்த
உலகதனைப் படைக்க முதல் உற்றது தொழிலே.

தொழில் இன்றேல் அழிவாகும், அழிவதும் தொழிலே,
தொழிலில்லா இடமில்லை, சுதந்திரம் தொழிலே
அழகில்லா ஒன்றினை அழகாக்கும் தொழிலே,
அச்சமில்லா உச்சிதத்தின் ஆக்கம் தொழிலே
கழிவில்லாப் பெருமையதன் கருத்துத்தொழிலே
காலத்தால் களங்கமுறா கற்புத்தொழிலே
தொழிலாளர் ஓங்கிடுக, அவர் பசி துடைக்கத்
தொண்டாற்றல் நமது தொழில் கவிதைத்தொழிலே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

i) **கம்பதாசனின் தொழில் என்ற கவிதையினூடாகக் கூறப்படும் விடயம் யாது?**

கம்பதாசனின் தொழில் என்ற இக்கவிதையானது தொழிலினுடைய மேன்மையையும் முக்கியத்துவத்தையும் எடுத்துச் சொல்கிறது. மனிதன் ஆற்றுகின்ற தொழில்களை மட்டுமன்றி இயற்கை நிகழ்த்துகின்ற தொழில்களையும் கவிஞர் கற்பனையினூடாக வெளிப்படுத்தியுள்ளமை சிறப்பம்சம் ஆகும்.

ii) **இக்கவிதையில் கவிஞர் கூறும் தொழில்களைப் பட்டியற்படுத்துக.**

- இருளகற்றி ஒளி கொடுத்தல் (சூரியன்)
- பூமியிலுள்ள வெப்பத்தைத் தணித்தல் (காற்று)
- விளைச்சலுக்குத் தேவையான நீரை வழங்குதல் (நதி)
- தேனையும் வாசனையையும் உலகிற்கு அளித்தல் (மலர்கள்)
- அழகிய காட்சியோடு மக்களின் மனங்களை மகிழ்வித்தல் (அந்திவானம்)
- மழையைக் கொடுத்தல் (மேகம்)
- புற்களின் நுனியில் வைரச்சிரிப்பினை அழித்துச் சூரியனோடு சேருதல்.
- காதலர்கள் தூக்கம் மறந்து பேசுவதற்கு ஆவன செய்தல் (சந்திரனது ஒளி)
- நிலத்தை உழுது பண்படுத்தி உணவை விளைவித்தல் (உழவன்)
- எம் மானத்தைக் காக்க எமக்கு ஆடை வழங்குதல் (நெசவாளன்)
- பகையை வென்று நம் நாட்டைக் காத்தல் (வீரன்)
- எம்மொழியைக் காத்தல் (கவிஞன்)

iii) **இயற்கை ஆற்றுகின்ற தொழில்களாகக் கவிஞர் எவ் எவற்றை எல்லாம் குறிப்பிடுகிறார்?**

iv) **மனிதர் ஆற்றுகின்ற தொழில்களாகக் கவிஞர் எவ்எவற்றையெல்லாம் குறிப்பிடுகின்றார்?**

v) **இக்கவிதையில் கவிஞர் குறிப்பிடும் தொழிலாளர்கள் யாவர்?**

vi) **தொழிலினுடைய சிறப்பு / மாட்சிமை / முக்கியத்துவம்.**

உலகத்தைப் படைக்க முதலில் தோன்றியது தொழில் தான். தொழில் இல்லையென்றால் உலகம் அழிந்து விடும். அவ்வாறு அழிதல் கூடத் தொழில் தான். தொழில் இல்லாத இடமே கிடையாது. நாம் அச்சமின்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்ந்து நாம் பெற்றுக்கொண்ட உயர்வுகள் எல்லாம் தொழில் தான். அழகில்லாத ஒன்றை அழகாக்குவது தொழில். காலத்தினால் கறைபடாத கற்பு தொழில்.

vii) **கம்பதாசனின் கவிதையில் தொழிலாளர் மேம்பாடு / உரிமை சார்ந்த கருத்துக்கள்.**

இவ்வுலகத்திற்கு மூலமாக இருக்கின்ற தொழிலாளர்கள் வாழ்வில் ஓங்கிச் சிறப்படைவதற்கு நாம் எல்லோரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். அவர்களினது பசியினைப் போக்க நாம் அவர்களுக்குத் தொண்டினைச் செய்ய வேண்டும். இது தான் தொழிலாளர்களுடைய வாழ்வை மேம்படுத்த நாம் செய்யக்கூடிய செயல்கள் ஆகும்.

**"தொழிலாளர் ஓங்கிடுக அவர் பசி துடைக்க**
**தொண்டாற்றல் நமது தொழில்"**

viii) **கம்பதாசனின் கவிதையில் இயற்கை வர்ணனை.**

ix) **கவிஞர் கையாண்ட உத்தி**

இயற்கைக் காட்சிகள் / வர்ணனைகள் ஊடாகத் தாம் கூற வந்த கருத்தை வெளிப்படுத்தியுள்ளமை.

கற்பனை வளத்தினூடாகத் தான் கூற வந்த கருத்தை வெளிப்படுத்தி யுள்ளமை.

**"கீழ்த்திசையின் இருள் கீறி கிளர் உசை நுதலில்**
**கிளிமூக்கு நிறப் பொட்டு தீட்டும் கிரணன்**
**ஆழ்கடலின் அலைகளிடம் ஆடல் கற்று**
**அனல் சுவாலையிடத்தோடி அருளும் காற்று..."**

**அணிப்பிரயோகம்**

அ) உருவகம்

- இருளைச் சாணமாக உருவகித்தல் - இருட்சாணம்
- நட்சத்திரங்களைக் கோலத்தின் புள்ளியாக உருவகித்தல் - உடுவாம் அரும்புள்ளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ) உவமையணி

- கிளி மூக்கு நிறப்பொட்டு
- யானையைப் போல விண்ணில் பறக்கும் மேகம்
- பொன் போன்ற நெல்
- தாய் போன்ற உழவன்

- இயற்கை ஆற்றும் தொழில்கள். மனிதன் ஆற்றும் தொழில்கள். தொழிலின் சிறப்பு. தொழிலாளர்களின் வாழ்வை மேம்படுத்துவதற்கான வழிகள் எனத் திட்டமிட்டுக் கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளமை.

# பூக்காரி

**க.பிச்சைமூர்த்தி**

தஞ்சாவூர் மாவட்டத்தில் கும்பகோணத்தில் பிறந்தவர். (1900-1976) வேங்கடமகாலிங்கம் என்பது இவரது பெயர். தமிழ் இலக்கியத்துறையில் பிச்சைமூர்த்தி என்ற பெயரே நிலைத்து விட்டது. தந்தை நடேசையர், தாய் காமாட்சியம்மை. தமிழ் நவீனகவிதை எனும் பொழுது பாரதி எவ்வளவு முக்கியம் பெறுகின்றாரோ அதே போல் புதுக்கவிதை எனும் போது பிச்சைமூர்த்தி முக்கியம் பெறுகிறார். சிறுகதை, கவிதை, கட்டுரை . குறுநாவல் எனப் பல்துறைகளிலும் தன்னை அடையாளப்படுத்தியவர். இயற்கை . சமூகம், பொருளாதாரம் , காதல், அறிவியல், தத்துவம் முதலியவற்றை தன் கவிதைகளின் பாடுபொருளாக்கியவர். உவமை, உருவகம், படிமம், குறியீடு என்பன இவர் கவிதையின் சிறப்பம்சங்கள்.

1. மழைக்காலின் மையிருட்டில்
மேகம்குனிய இடிமுழங்க
வீடுவந்த மழையின் கண்ணீர்.
பூக்காரி பொங்கும் குரல்
மையிருட்டில் மேவி ஓங்கி
மழைநீரின் குரலினொடு
பரவிற்று திசை எங்கும்
"மல்லிகை வேணுமா?
ஜாதி மல்லிகை."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. மழை இருட்டில்
தெருவி லொரு
ஈ குருவி பறக்கவில்லை
மேகம் வலுத்தது
மழை மீன்கள் துள்ளின
மின்னல்கள் சிரித்து
மேகத்தைக் கொளுத்தின
கூதலெனும் நாகம்
குடையோடு சீறிற்று
அஞ்சி ஒடுங்கிய அழகிய பெண்கள்
அடுப்பங்கரை சேர்ந்து
கணப்பை மருவினர்.

'மல்லிகை ரத்தினம்,
மருக்கொழுந்து பச்சை
ஏறிமணக்கும் கூந்தலோர் வாரீர்,
மல்லிகை வேணுமா?
ஜாதி மல்லிகை"
என்றழுதாள் பூக்காரி!
பூக்காரி பொங்கும் குரல்
பெண்களை எழுப்பவில்லை
சாரலின் கடுஞ்சினத்தில்
பூ மோகம் ஆடவில்லை
பூக்காரி குரலினோடு
கூடிற்று மழையின் கண்ணீர்
பூக்காரி பொட்டுக்கூடை
திரும்பிற்று வீடு நோக்கி.

3. உலகெங்கும் உற்பத்தியாய்
நாடெல்லாம் சந்தைமேடாய்
வியாபாரத்தில் போட்டி மூள
சந்தைக்குரலிடையே
போர் விதைகள் கருவடைந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனவுத்தெய்வம் கடைத்தெருவில்
கொட்டின்றி முழக்கமின்றி
அருஞ்சரக்கை விரித்து வைத்து
வாங்குவோர்க்கேங்கிற்று.

'அன்புச்சரக்கு
அழியாத சரக்கு
தின்றாலும் எக்காலமும்
தித்திக்கும் சரக்கு
வேண்டுவோர் வாரீர்!
வாங்குவோர் கூவீர்!
சந்தைக்கலவரத்தில்
தெய்வக்குரல் கேட்கவில்லை
சந்தைக்கடை கலைந்ததும்
கனவுத்தெய்வம் போகவில்லை.

4. சூலம் எழுந்தது
அண்டம் அதிர்ந்தது
உலகெங்கும் கூடாரம்
ஊரெங்கும் விஷப்புகை
வானெங்கும் பிளேனிரைகு
தெருவெங்கும் பிணமலை
பீரங்கிக் குரல்பேச
கேட்டதொரு வேறு குரல்
'அன்பும் அஹிம்சையும்
விற்று வந்தேன் ஆதிமுதல்
பூக்காரி பூவைப்போல
கண்ணெடுப்பார் யாருமில்லை
ருத்திரனின் வெறிக்கூத்தில்
கடுமோகம் கொண்டுவிட்டார்
காமனை எரித்த ருத்திரன்
கண்சிமிட்டில் தணிந்து போவான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பே சிவமாவான்
மங்கலமாய் மலர்தருவான்
வேண்டுவோர் வாரீர்!
வாங்குவோர் கூடீர்.

பிளேனிறகின் உயரம்
தெய்வக்குரல் ஏறவில்லை
நெஞ்சுடையாக் கனவுத்தெய்வம்
கூவுதலைக் குறைக்கவில்லை.

"அன்பே சிவமாவான்
மங்கலமாய் மலர்தருவான்
வேண்டுவோர் வாரீர்
வாங்குவோர் கூடீர்"

**i) கவிஞர் கூறவந்த விடயம்.**

இரண்டாம் உலகமகாயுத்தத்தினது அனுபவத்தை இக[illegible] வெளிப்படுத்துகிறது என்பர். யுத்தத்தில் மோகம் கொண்ட ஒரு ச[illegible]றகு அல்லது போர் ஆர்வம் கொண்ட ஒரு சமூகத்திற்கு அன்பு, அகிம்சை, சமாதானம். என்பனவற்றை வலியுறுத்துவதாக இக்கவிதை அமைந்துள்ளது. கூடவே கோபம். போர் என்பன நிலையற்றன என்பதையும் அன்பே நித்தியமானது என்பதையும் இக்கவிதை வலியுறுத்துகிறது.

**ii) கவிஞர் கையாண்டுள்ள உத்திகள்**

**அ) உரையாடற்பாங்கு**

பூக்காரி, கனவுத்தெய்வம் ஆகிய பாத்திரங்களைப் படைத்து அவற்றை உரையாட விடுகின்றார் பிச்சைமூர்த்தி.

**"மல்லிகை வேணுமா?**
**ஜாதி மல்லிகை"**

பூக்காரி மக்களைப் பார்த்துக் கேட்கிறாள்.

**"வேண்டு வோர் வாரீர்**
**வாங்குவோர் கூடீர்"**

கனவுத்தெய்வம் போர் ஆர்வம் கொண்ட மக்களைக் கேட்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ) வாசகர்களுக்கு விளங்கக்கூடிய இசைவான சொல்லாட்சி.

"அன்புச் சரக்கு
அழியாத சரக்கு
தின்றாலும் எக்காலும்
தித்திக்கும் சரக்கு
வேண்டுவோர் வாரீர்
வாங்குவோர் கவலீர்"

**இ) காட்சிப்படுத்தல் உத்தி.**

பிச்சைமூர்த்தி தான் கூற வந்த விடயத்தை வெளிப்படுத்த காட்சிப்படுத்தல் என்ற உத்தியை பயன்படுத்தி இருக்கக் காண்கிறோம். பிரதானமாக இக்கவிதையில் நான்கு காட்சிகள் இடம்பெறுகின்றன.

i) மழை இருட்டிலே பூக்காரி ஒருத்தி பூ விற்பதற்காக அலையும் காட்சி.

ii) மழை, குளிர், மழை இரைச்சல் இவற்றின் காரணமாகப் பூக்காரியின் குரல் பெண்களிடத்தில் எடுபடவில்லை. இதனால் பூக்காரி பூக்கூடையோடு திரும்பிச் செல்லும் காட்சி.

iii) யுத்த பூமியிலே அன்பை விற்பதற்காக கனவுத்தெய்வம் வருதல்.

iv) யுத்தத்தில் மோகம் கொண்ட மக்களிடத்தில் அன்பை/அஹிம்சையை/ சமாதானத்தை விதைப்பதற்கு நம்பிக்கையோடு செயற்படல்.

**ஈ) அணிப்பிரயோகம்.**

பிச்சைமூர்த்தி இக்கவிதையில் உவமை, உருவகம் போன்ற அணிகளைப் பயன்படுத்தி இருக்கக் காண்கிறோம்.

"அன்பும் அஹிம்சையும்
விற்று வந்தேன் ஆதிமுதல்
பூக்காரி பூவைப் போல..." இங்கு உவமையணி கையாண்டிருக்கக் காண்கிறோம்.

**உருவகம்**

கனவுத்தெய்வம் – கனவு தெய்வமாக உருவகித்தல்
மழைமீன்கள் – மழையை மீன்களாக உருவகித்தல்
கூதல் எனும் நாகம் – குளிர் நாகமாக உருவகித்தல்
பிணமலை – பிணத்தினை மலையாக உருவகித்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உ ) குறியீட்டுப்பிரயோகம்.**

பிச்சைமூர்த்தி இக்கவிதையில் குறியீடுகளைப் பயன்படுத்தியிருக்கக் காண்கிறோம்.

i) பூக்காரி - இக்கவிதையில் பிச்சைமூர்த்தி பூ விற்பவளாக இவளைக் காட்டினாலும் இவள் அன்பை விதைக்கும் சமாதான விரும்பிக்கான குறியீடு ஆகும்.

ii) மழைக்காட்சி - யுத்த சூழ்நிலைக்கான, யுத்த விளைவுகளுக்கான குறியீடு.

iii) சூலத்தின் எழுச்சி - யுத்தத்தின் எழுச்சிக்கான /யுத்தத்தின் விளைவுகளின் உச்சத்திற்கான குறியீடு.

iv) கனவுத்தெய்வம் - அன்பு/ சமாதானம்/ அஹிம்சை இதனை சமுதாயத்தில் விதைக்க முற்படுபவரின் குறியீடு.

**ஊ ) படிமம்.**

இக்கவிதையிலே பிச்சைமூர்த்தி படிமங்களைக் கையாண்டுள்ளமையைக் காண்கிறோம். உக்கிர தெய்வமான உருத்திரன் யுத்தத்தையும், அன்பின் வடிவமான சிவன் சமாதானத்தையும் படிமமாகக் கொண்டுள்ளமை.

போருக்கும் சமாதானத்திற்கும் இடையிலான போட்டி சந்தைக் காட்சியாய் படிமப்படுத்தப்பட்டுள்ளது.

எ) பல்வேறு உணர்ச்சி வெளிப்பாடுகளினூடாகத் தான் கூறவந்த விடயங்களை வெளிப்படுத்தியுள்ளமை ஒரு உத்தியாகும்.

iii) **புராணச்செய்தி.**

கோபம், கோபத்தின் விளைவு நிலையற்றவை என்பதையும் அன்பு/ அஹிம்சை/ சமாதானம் என்பன நிலையானவை என்பதையும் வலியுறுத்துவதற்கு கவிஞர் ஒரு புராணச்செய்தியினைக் கூறியுள்ளார்.

**"ருத்ரனின் வெறிக்கூத்தில்**
**கடுமோகம் கொண்டுவிட்டார்**
**காமனை எரித்த ருத்ரன்**
**கண் சிமிட்டில் தணிந்து போவான்**
**அன்பே சிவமாவான்**
**மங்கலமாய் மலர் தருவான்"**

இவ்வரிகளினூடாக சிவபெருமான் மன்மதனை எரித்த செய்தியும் ரதியின் வேண்டுகோளை ஏற்று அவனை எழுப்பிய செய்தியும் இங்கு கூறப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iv) **உணர்ச்சி வெளிப்பாடுகள்.**

**அ) அவலம்**

இக்கவிதையிலே அவல உணர்வு வெளிப்படுத்தப்படுவதைக் காண்கிறோம். மையிருட்டில் பூ விற்கச்சென்ற பூக்காரி பூ விற்க முடியாது தோற்றுத் திரும்புகிறாள். இதனூடாக யுத்தத்தினால் அச்சம் கொண்ட மக்கள் ஒதுங்கி விடுவதையும் அன்பு, அகிம்சை போன்றன செல்வாக்கு அற்றுப்போவதையும் நாம் காண்கிறோம். இவை அவல உணர்வினை வெளிப்படுத்துகின்றன.

கனவுத்தெய்வம் வந்து அன்பை சமூகத்தில் விதைக்க முற்படுகிறது. ஆனால் யாருமே அதில் ஈடுபாடு கொள்ளவில்லை. இங்கே நாம் அவல உணர்வினை தரிசிக்கிறோம்.

**ஆ) வெறுப்பு**

யுத்தத்தினால் தெருவெங்கும் பிணமலை கிடக்கிறது. மக்களெல்லாம் உருத்திரனின் வெறிக்கூத்திலே ஆர்வம் காட்டுகிறார்கள். அன்பு, அகிம்சை என்பவற்றில் யாருக்குமே ஆர்வம் இல்லை. இவை போரின் மீதும், மக்கள் மீதும் எமக்கு வெறுப்பை உண்டாக்குகின்றது.

**இ) நம்பிக்கை**

**"காமனை எரித்த ருத்ரன்**
**கண் சிமிட்டில் தணிந்து போவான்"**

**"அன்பே சிவமாவான்**
**மங்கலமாய் மலர் தருவான்.."**

ஆகிய வரிகள் யுத்தம் அழிந்து போகும், சமாதானம் நிலைத்து நிற்கும் என்ற நம்பிக்கையை ஊட்டுகின்றன.

**மழைக்காட்சி**

பிச்சைமூர்த்தி இக்கவிதையில் ஒரு மழைக்காட்சியை காட்டுகிறார். எங்கும் இருள், ஒரே மழை, மின்னல், முழக்கம், குளிர் இதனால் பெண்கள் அடுப்பங்கரையிலே ஒதுங்கி குளிர்காய்கிறார்கள். இதுதான் கவிஞர் காட்டும் மழைக்காட்சி. இதனூடாக கவிஞர் போர்ச்சூழலை, போரினால் மக்களடைந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சத்தை, அன்பு சமூகத்தில் செல்வாக்கு இழந்த நிலையை எமக்கு வெளிப்படுத்துகின்றார்.

**"மின்னல்கள் சிரித்து**
**மேகத்தைக் கொளுத்தின**
**சூதலென்னும் நாகம்**
**குடையோடு சீறிற்று.."** என்ற வரிகள் யுத்தம் எல்லா இடங்களிலும் பரவியிருந்த நிலையை வெளிப்படுத்துகின்றன.

**"அஞ்சி ஒடுங்கிய அழகிய பெண்கள்**
**அடுப்பங்கரை சேர்ந்து**
**கணப்பை மருவினர்..."** என்ற வரிகள் போரினால் மக்கள் அடைந்த அச்சத்தை வெளிப்படுத்துகின்றன.

**"பூக்காரி பொங்கும் குரல்**
**பெண்களை எழுப்பவில்லை**
**சாரலின் கடுஞ்சினத்தில்**
**பூமோகம் ஆடவில்லை..."** என்ற வரிகள் யுத்த சூழ்நிலையில் அன்பு வலுவிழந்து போனமையை வெளிப்படுத்துகின்றது.

### vi) போர்க்கோலம் / போர்க்காட்சி.

பிச்சைமூர்த்தி மழைக்காட்சியினூடாக போர்க்காட்சியினை வெளிப்படுத்துகிறார். இதைவிட நேரடியாகவும், குறியீடுகள் படிமங்களினூடாகவும் போர்க்காட்சியை வெளிப்படுத்தியிருப்பதைக் காண்கிறோம். சூலம் எழுந்து, அண்டம் அதிர்ந்தது. ஊரெங்கும் விஷப்புகை, தெருவெங்கும் பிணமலை. பீரங்கியின் குரல் போன்ற தொடர்கள் போரினது உக்கிரத்தை வெளிப்படுத்தி இருக்கின்றன. "வெறிக்கூத்தில் கடுமோகம் கொண்டு விட்டார்.." போன்ற வரிகள் மக்களுக்கு இருந்த போர் ஆர்வத்தை வெளிப்படுத்துகின்றன.

### vii) அன்பு, அகிம்சை, சமாதானம் பெறும் முக்கியத்துவம்.

இக்கவிதையில் அன்பின் முக்கியத்துவத்தை கவிஞர் வலியுறுத்துவதை காண்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"அன்புச் சரக்கு**

**அழியாத சரக்கு**

**தின்றாலும் எக்காலும்**

**தித்திக்கும் சரக்கு.."** இவ்வரிகள் அன்பின் முக்கியத்துவத்தை எடுத்துச் சொல்கின்றன. மேலும் போரோ. கோபமோ நிலையற்றவை. அன்பு தான் நிலையானது என்பதை கவிஞர் வலியுறுத்துகிறார். இதனை

**"காமனை எரித்த ருத்ரன்**

**கண் சிமிட்டில் தணிந்து போவான்**

**அன்பே சிவமாவான்**

**மங்கலமாய் மலர் தருவான்"** என்ற வரிகள் வெளிப்படுத்துகின்றன.

# மீண்டும் தொடங்கும் மிடுக்கு

**மஹாகவி (1927-1971)**

**த**மிழ்க்கவிதைப் போக்கை இன்னொரு தளத்திற்கு இட்டுச் சென்றவர் என்று தமிழ்நாட்டிலே பாரதியைப் போற்றுவர். இதே போன்று ஈழநாட்டில் போற்றப்படுபவர் மஹாகவி து.உருத்திரமூர்த்தி. யாழ்ப்பாணம் அளவெட்டியில் பிறந்தவர். கவிதை, காவியம், நாடகம், மொழிபெயர்ப்பு எனப் பல்வேறு துறைகளில் தடம்பதித்தவர். காட்சிப்படுத்தல் , பேச்சோசை, எளிமைப்படுத்தப்பட்ட யாப்பு போன்றன இவர் கவிதையின் சிறப்பம்சங்கள். ஈழத்து கவிதை இலக்கியத்துறையில் புதியதொரு பரம்பரையை உருவாக்கிய பெருமையும் இவருக்குண்டு.

மப்பன்றிக் காலமழை காணா மண்ணிலே
சப்பாத்தி முள்ளும் சரியாய் விளையாது
ஏர் ஏறாது
காளை இழுக்காது
எனினும் அந்தப்
பாறை பிளந்து பயன் விளைப்பான்
என் ஊரான்.
ஆழத்து நீருக் ககழ்வான் அவன்
நாற்று
வாழத்தன் ஆவி வழங்குவான். ஆதலால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொங்கி வளர்ந்து பொலிந்தது பார்
நன்னெல்லு.

தங்க நகைகள் தலைக்கணிந்த பெண்களே
கூடிக் குனிந்து கும்மி கொட்டுவதும்
காதினிக்கப்
பாடிக்கவலை பறக்கச் செய்கின்றதும் போல்
முற்றி, மனிதன் முயற்சிக்கு
இறைகொடுக்கும்
பொற்காசாம் நெல்லுப்பொதி சுமந்து
கூத்தாடும்
அந்தப்பயிரின் அழகை அளந்தெழுத
எந்தச்சொல் உண்டாம் எமக்கு?

அவ்வுழைப்பாளி
உள்ளம் நெகிழ்ந்தான்
ஒரு கதிரைக்கொத்தாகக்
கிள்ளி முகர்ந்தான்
கிறுகிறுத்துப் போகின்றான்.

வாடும் வயலுக்கு வார்க்காமுகில், கதிர்கள்
சூடும் சிறுபயிர்மேல்
'சோ' வென்று நள்ளிரவிற்
கொட்டும், உடன்கூடும்
கொலைக்காற்றும் தானுமாய்
எட்டுத்திசையும் நடுங்க முழங்கி எழும்.

ஆட்டத்து மங்கையர் போல்
அங்கு மொய்த்து நின்ற பயிர்
பாட்டத்தில் வீழ்ந்தழிந்து பாழாகிப் போய்விடவே
கொள்ளைபோல் வந்து கொடுமை விளைவித்து
வெள்ளம் வயலை விழுங்கிற்று..
பின்னர் அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வற்றியதும், ஓயா வலக்கரத்தில் மண்வெட்டி
பற்றி, அதோபார், பழையபடி கிண்டுகிறான்
சேர்த்தவற்றை
முற்றும் சிதறவைக்கும் வானத்தைப்
பார்த்தயர்ந்து நிற்கும் பழக்கமற்றோன்
வாழி, அவன்
ஈண்டு முதலில் இருந்தும் முன்னேறுதற்கு
மீண்டும் தொடங்கும் மிடுக்கு!

i) **"மீண்டும் தொடங்கும் மிடுக்கு" எனும் கவிதையினூடாக உழைப்பாளியின் கடினமுயற்சிகள் கூறப்படுமாற்றை விளக்குக.**

மீண்டும் தொடங்கும் மிடுக்கு எனத் தொடங்கும் இக்கவிதையானது உழைப்பாளியின் கடினமுயற்சியை எடுத்துக்காட்டுகிறது. கால மழை பொய்த்த மண்ணிலே சப்பாத்தி முள்ளு கூட சரியாக முளையாத தரையிலே ஏர் ஏறாத, காளை இழக்காத பாறை போன்ற மண்ணிலே பயன் பெறுவதிலிருந்து உழவனுடைய கடின உழைப்பை அல்லது முயற்சியை கண்டு கொள்கிறோம்.

**"ஆழத்து நீருக்கு அகழ்வான் அவன்**
**நாற்று**
**வாழத்தன் ஆவி வழங்குவான்"**

என்ற தொடர் எவ்வளவு அர்ப்பணிப்போடு உழவன் முயற்சியில் ஈடுபட்டான் என்பதை கண்டு கொள்கிறோம்.

ii) **உழவனின் கடினமுயற்சிக்கு கிடைத்த பயன்.**

உழவனின் கடினமுயற்சிக்கு கிடைத்த பயனையும் எடுத்துக்காட்டுகிறது இக்கவிதை. பாறை போன்ற நிலத்தைப் பண்படுத்தி தன் உயிரைக் கொடுத்து பயிர் வளர்ப்பதற்காக எடுத்த முயற்சி வீண் போகவில்லை. பொங்கி வளர்ந்து பொலிவோடு காட்சியளிக்கிறது நெல். இதனை

**"பொங்கி வளர்ந்து பொலிந்தது பார்**
**நன்னெல்லு"**

என்ற தொடரினூடாக கண்டு கொள்ளலாம். நெற்பயிர் செழித்து வளர்ந்து தங்கநகை தலைக்கணிந்த பெண்கள் கும்மியடிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது இருக்கிற அழகும் அந்த அழகு எம் கவலைகளைப் போக்குவதும் போல காட்சியளிக்கின்றன.

**"மனிதன் முயற்சிக்கு**
**இறை கொடுக்கும்**
**பொற்காசாம் நெல்லுப் பொதி சுமந்து**
**கூத்தாடும்**
**அந்தப் பயரின் அழகை அளந்தெழும**
**எந்தச் சொல் உண்டாம் எமக்கு?** என்று பாடுகின்றார் மஹாகவி.

iii) **நெற்கதிர்கள் பற்றிய வர்ணனையும் பெறுமதியும்.**

நெற்கதிர்களுடைய தோற்றப்பொலிவை மிக அற்புதமாக பாடுகின்றார் கவிஞர். தங்க நகையினால் தலையினை அலங்கரித்துக் கொண்டு பெண்கள் கும்மியடிக்கின்ற போது இருக்கின்ற அழகு போல நெல்லுப்பொதி சுமந்து கதிர்கள் கூத்தாடுவதாக கவிஞர் பாடுகிறார்.

மேலும் பெண்கள் அலங்காரம் செய்து கும்மியடிக்கும் போது அது எமது கண்ணையும் செவியையும் கவர்ந்து எம் உள்ளத்திற்கு இன்பம் பயக்கிறது. அது போல நெற்பயிர்களை கண்டபொழுது உழவனின் உள்ளம் பரவசம் அடைந்தது என்பதையும் இவ்வர்ணனை மூலம் கவிஞர் வெளிப்படுத்துகின்றார்.

**"பொற்காசாம் நெல்லுப்பொதி.."** என்ற தொடரினூடாக நெற்கதிர்களினுடைய பெறுமதியையும் கவிஞர் வெளிப்படுத்துகின்றார். **"தங்க நகைகள் தலைக்கணிந்த பெண்களே கூழக்குனிந்து கும்மி கொட்டுவதும், காதினிக்கப் பாடி கவலை பறக்கச் செய்கிறதும் போல முற்றி மனித முயற்சிக்கு இறை கொடுக்கும். "பொற்காசாம் நெல்லுப்பொதி சுமந்து கூத்தாடும் அந்தப் பயிரின் அழகை அளந்தெழுத எந்தச் சொல் உண்டாம் எமக்கு?...."**

iv) **நில வர்ணனை.**

உழவனின் கடின உழைப்பையும் துயர் கண்டு சோராத அவனது மன உறுதியையும் வெளிப்படுத்தப் போந்த கவிஞன் அவன் உழவுத் தொழிலை மேற்கொள்ளும் நிலத்தினுடைய இயல்பு பற்றிப் பாடுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"மப்பன்றிக் காலமழை காணா மண்ணிலே**
**சப்பாத்தி முள்ளும் சரியாய் விளையாது**
**ஏர்**
**ஏறாது காளை இழக்காது...."**

இதனாற் தான் சுருக்கமாக மஹாகவி பாறை என்று நிலத்தைப் பாடுகிறார்.

**v) இயற்கையின் கொடுந்தன்மை.**

இக்கவிதையினூடாக கவிஞர் இயற்கையின் கொடுமைத்தன்மையை எடுத்துக் காட்டுகின்றார். பாறை போன்றிருந்த தரையை ஈரலிப்பானதாக ஆக்காத மழை, ஆழத்து நீரை அகழ்ந்து பயிர்களுக்கு ஊற்றிய போது பெய்யாத மழை, வாடியிருந்த பயிர்களுக்கு நீர் கொடுக்காத மழை பயிர் செழித்து அதனை அறுவடை செய்ய காத்திருக்கும் போது பெய்கிறது. இங்கே தான் இயற்கையின் கொடுமையை தரிசிக்கிறோம். 'சோ' என்ற ஓசையோடு பெய்கின்ற மழை, கொலைக்காற்றோடு சேர்ந்து கொட்டுகிறது. முழக்கமும் முழங்குகிறது. இயற்கையின் கொடுமையை கவிஞர் பின்வருமாறு வெளிப்படுத்துகின்றார்.

**"கொள்ளை போல் வந்து கொடுமை விளைவித்து**
**வெள்ளம் வயலை விழுங்கிற்று..."**

**vi) மழையால் நெற்பயிர்கள் அழிந்ததற்கு பின்னர் கவிஞர் அவற்றை வர்ணிக்கும் விதம்.**

தங்க நகைகள் தலைக்கணிந்த பெண்கள் குனிந்து கும்மி கொட்டுகின்ற போது இருந்த அழகினைப் போல நெற்பயிர்கள் காட்சியளித்தன. என்று பாடிய கவிஞன் காற்றினாலும் வெள்ளத்தினாலும் பாட்டத்திலே விழுந்த பயிர்களை நடனமாடுகின்ற பெண்கள் தரையிலே விழுந்ததைப் போல வீழ்ந்தன என்கிறார்.

**"ஆட்டத்து மங்கையர் போல்**
**அங்குமொய்த்து நின்ற பயிர்**
**பாட்டத்தில் வீழ்ந்தழிந்து பாழாகிப் போய்விடவே.."**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

vii) **உழவனின் துயர் / ஏமாற்றம்.**

உழவனது கடின உழைப்பினை, மன உறுதியை எடுத்துக்கூறும் இக்கவிதையானது இன்னொரு புறம் உழவனது துயரத்தை ஏமாற்றத்தை எடுத்துச் சொல்கிறது.

**"பொற்காசாம் நெல்லுப்பொதி சுமந்து**
**கூத்தாடும்..."**

பயிரின் அழகைக் கண்டு உழவன் மகிழ்கிறான். அந்த மகிழ்ச்சி நீடிக்கவில்லை. ஏமாற்றத்தைத்தான் அவனால் சந்திக்க முடிகிறது.

காற்றும் மழையும் சேர்ந்து ஆட்டத்து மங்கை போல் நின்ற பயிரை பாட்டத்தே வீழ்த்தி விடுகிறது. எனவே எதிர்பார்ப்புக்கள் ஏமாற்றத்தோடு முடிவதையும் மகிழ்ச்சி நீடிக்காத துயர் நிலையையும் இங்கு காண்கிறோம்.

viii) **கவிஞர் கூற விழைந்த விடயங்கள்.**

மீண்டும் தொடங்கும் மிடுக்கு என்ற கவிதையின் தலைப்பே கவிஞன் கூற வந்த விடயம் என்ன என்பதை வெளிப்படுத்துகிறது. முயற்சியின் விளைவுகள் அற்றுப்போன ஒரு நிலையிலே கூட தளர்ந்து போகாத மனவுறுதியை இக்கவிதையிலே காண்கிறோம். பாறை போன்றிருந்த கடின நிலத்தினை பண்படுத்தி பயிர் செய்கிறான் உழவன். பயிரும் விளைந்து வருகிறது. வெள்ளமும் காற்றும் பயிரை அழிக்கிறது. இது கண்டு உழவன் சோரவில்லை. இதனைக் கவிதையின் நிறைவிலே வலியுறுத்துகிறார் மஹாகவி.

**"ஓயா வலக்கரத்தில் மண்வெட்டி**
**பற்றி, அதோ பார் பழையபடி கிண்டுகிறான்**
**சேர்த்தவற்றை முற்றும் சிதறவைக்கும்**
**வானத்தைப்**
**பார்த்தயர்ந்து நிற்கும் பழக்க மற்றோன்"**

கவிஞன் தான் கூற வந்த விடயத்தை வலியுறுத்த பின்வரும் விடயங்களை எடுத்துக் கூறுகின்றான்.

**உழவனின் கடின முயற்சி**
**கடின முயற்சிக்கு கிடைத்த பயன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயற்கையின் கொடுந்தன்மை
## உழவனின் ஏமாற்றமும் துன்பமும்

ix) **வெளிப்படுத்தப்படும் உணர்வுகள்.**

மஹாகவியின் இக்கவிதையானது பல்வேறு உணர்வுகளையும் வெளிப்படுத்தி நிற்கிறது.

**அ) இரக்கம்**

நெற்பயிர்கள் செழித்து காட்சியளிக்கின்றன. இந்நிலையிலே மழையும் காற்றும் பயிர்களை அழிக்கின்றன. பாடுபட்ட உழவன் பெற வேண்டிய பயன்கள் எல்லாம் இல்லாமற் போகின்றன. இந்நிலையில் உழவன் மீது கற்போர்களாகிய எமக்கு இரக்க உணர்வு ஏற்படுகிறது.

**ஆ) கோப உணர்வு**

பாறை போன்றிருந்த நிலத்தை உழவன் பண்படுத்திய போது வானம் அவனுக்கு துணை செய்யவில்லை. அவனது கடின உழைப்பால் பயிர் வளர்ந்து செழித்ததற்கு பின்பு கொலைக்காற்றும் மழையுமாய் பயிர்களை அழிக்கின்றது. இவ்விடத்தில் இயற்கை மீது கோப உணர்வு உண்டாகிறது

**"வாடும் வயலுக்கு வார்க்கா முகில்...**
**கொள்ளை போல் வந்து கொடுமை விளைவித்து**
**வெள்ளம் வயலை விழுங்கிற்று..."** என்ற வரிகளினூடாக கோபஉணர்வு வெளிப்படுகிறது.

**இ) உள்ளக்கிளர்ச்சி / மகிழ்ச்சி / குதூகலம்.**

நெற்பயிரினுடைய செழிப்பினை அழகினைக் கவிஞர் பாடுமிடத்தும் நெற்பயிரினைக் கண்டு உழவன் அடையும் மகிழ்ச்சியைக் கூறுமிடத்தும் மேலே குறிப்பிட்ட உணர்வினை நாம் கண்டுகொள்கிறோம்.

**ஈ) விரக்தி.**

உழவனது கடின உழைப்பினால் நெற்பயிர் செழித்து வளர்கின்றது. ஆனால் காற்றும் மழையும் சேர்ந்து பயிர்களை அழிக்கிறது. முயற்சியின் பயன் இதுதானோ? என்ற வினா எம் உள்ளத்தில் எழுந்து விரக்தி உணர்வினை தோற்றுவிக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

x) உழவனின் பண்புகள் /பாத்திர உருவாக்கம்.

கடின உழைப்பாளி / கடும் முயற்சியாளன்

துயர் கண்டு சோராத உள்ளத்தைக் கொண்டவன்

துன்பங்கள் வந்தாலும் அது கண்டு அஞ்சாது மீண்டும் கடின முயற்சியில் ஈடுபடுகின்றான்.

**"பாறை பிளந்து பயன் விளைப்பான்**
**என் ஊரான்.."**
**ஆழத்து நீருக்கு அகழ்வான் அவன்**
**நாற்று**
**வாழத்தன் ஆவி வழங்குவான்"**

**"ஓயா வலக்கரம்.."**
**"பழையபடி கிண்டுகிறான்..."**

**"சேர்த்தவற்றை முற்றும் சிதறவைக்கும்**
**வானத்தைப்**
**பார்த்தயர்ந்து நிற்கும் பழக்கமற்றோன்.."**

ஆகிய தொடர்கள் உழவனைப்பற்றி வாசகர்களுக்கு தெளிவாக விளக்குகின்றன.

xi) அணிகள்

**அ) உருவக அணி**

**"அந்தப் பாறை பிளந்து பயன் விளைப்பான்"** இங்கு நிலத்தைப் பாறையாக உருவகிக்கிறார் மஹாகவி. இது உருவக அணி.

**பொற்காசாம் நெல்லுப்பொதி.."** எனும் இடத்திலும் உருவக அணிப்பிரயோகத்தை காண்கிறோம்.

**ஆ) உவமை அணி**

➢ பெண்கள் தங்க நகைகளை தலைக்கு அணிந்து கொண்டு கூத்தாடுவதை போல நெற்கதிர்கள் காட்சியளித்தன என்கிறார். இது உவமை அணி ஆகும்.

➢ **"ஆட்டத்து மங்கையர் போல்**
**அங்கு மொய்த்து நின்ற பயிர்**
**பாட்டத்தில் வீழ்ந்தழிந்து"** இதுவும் உவமையணி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கொள்ளை போல வந்து கொடுமை விளைவித்து வெள்ளம் வயலை அழிக்கின்றது. இதுவும் உவமையணி ஆகும்.

  "கொள்ளை போல் வந்து கொடுமை விளைவித்து
  வெள்ளம் வயலை விழுங்கிற்று.."

xii) **கவிதையில் கவிஞர் கையாண்ட உத்தி.**

காட்சிப்படுத்தல் உத்தியை கவிஞர் கையாண்டுள்ளார். சில காட்சிகளை கற்பவர்களின் மனக்கண் முன் கொண்டு வந்து தான் கூற வந்த கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளார்.

**பயிர் செழித்து நின்ற காட்சி**
**காற்றாலும் வெள்ளத்தாலும் பயிர்கள் அழிந்த காட்சி.**

- அணிப்பிரயோகம்
- வர்ணனை
- பாத்திர உருவாக்கம்
- மொழிநடை

**அ) பேச்சோசைப் பண்பாடு கூடிய மொழிநடை.**

"சப்பாத்தி முள்ளும் சரியாய் விளையாது
ஏர்
ஏறாது காளை இழக்காது"

**ஆ) கற்போரின் உள்ளத்தில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய மொழிநடை.**

"நாற்று
வாழத்தன் ஆவி வழங்குவான்...
கொள்ளை போல் வந்து கொடுமை விளைவித்து
வெள்ளம் வயலை விழுங்கிற்று.."

**இ) விபரண நடை.**

"மப்பன்றிக் காலமழை காணா மண்ணிலே
சப்பாத்தி முள்ளும் சரியாய் விளையாது..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈ) சொற்களினூடாக காட்சிகளை வெளிப்படுத்தல்.

"அவ் உழைப்பாளி
உள்ளம் நெகிழ்ந்தான்
ஒரு கதிரைக் கொத்தாகக்
கிள்ளி முகர்ந்தான்
கிறுகிறுத்துப் போகின்றான்"

உ) எளிமையான சொற்களை பயன்படுத்தி எல்லோர்க்கும் விளங்கக்கூடிய வகையில் வெண்பா யாப்பில் பாடியமை.

ஊ) பொருத்தமான உவமை, உருவகப்பிரயோகம்.

# இன்று உனக்கும் சம்பளமா?

**நீலாவணன் (1931-1975)**

ஈழத்தின் முக்கியமான கவிஞர்களில் ஒருவர் நீலாவணன். கிழக்கிலங்கை பெரிய நீலாவணையில் பிறந்தவர். இயற்பெயர் சின்னத்துரை. சிறுகதை, கவிதை, நாடகம், கட்டுரை எனப்பல்துறை ஆற்றல் மிக்கவர். இயற்கை, தமிழ் உணர்வு, ஆத்மிக உணர்வு, மனித உறவுகளின் மனப்போக்கு எனப்பலவற்றைக் கவிதைகளினூடாக வெளிப்படுத்தியவர். காட்சிப்படுத்தல், பேச்சோசை, ஓசைச்சிறப்பு, எளிமைப்படுத்தப்பட்ட யாப்பு, கேலியும் கிண்டலும் சேர்ந்த மொழிநடை போன்றவற்றை இவரது கவிதைகளில் காணலாம்.

ஏன் கடலே இரைகின்றாய்? இன்றுனக்கும்
சம்பளமா? ஏழை வீட்டில்
தான் நீயும் பிறந்தனையா? தமிழா நீ
கற்றதுவும் தகாதவார்த்தை!
தேன் கடலாய் ஓடுமெங்கள் திருநாட்டில்
பிறந்த பயன் தெரிகின்றாயோ?
வான் தந்த வளமிலையோ? வயல் தந்த
நிதி இலையோ? வாடா தேநீ...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காற்செருப்புக் கழன்றதுவா? கட்டுதற்கும்
இடமிலையா? கால்நூற் றாண்டாய்த்
தோற்பொருத்தித் தோற்பொருத்தித்துணையாக
உழைத்த அவை தொழிலில் ஓய்ந்தால்
போற்றுதற்கோர் பொதுக்கூட்டம் போட்டதிலே
பாற்சோறும் பட்சணமும் படைப்பதற்கு
நின்னிடத்தே பணமா இல்லை?

'இபோசா' பஸ்களிலே ஏறுகையில்
வியர்வையினால், ஏழைதோழன்
யப்பானார் இறக்குகிற புறமார்க்கு
மல்வேட்டி அடடா 'டப்டப்'
'சப்' பென்று மூச்சுவிட்டு சல்லடையாய்
மாறிற்றோ? சனத்துக்குள்ளே
இப்படியும் அவமானம் ஏதேனும்
வந்ததுவா? இரைகின்றாய் நீ!

சட்டம்பி ஆனவன்ற சந்தையிலே
வாங்கிவந்து, சலியா தின்று
பொட்டுதிப்போனாலும் புழுதிமிகப்
படிந்தாலும், போன மாதம்
கட்டறுந்த குடையினை எம் கந்தோருக்
கெடுத்துப்போய், கவனமின்றிப்
பட்டணத்துக் கடைஎதிலும் பறிகொடுத்து
விட்டனையோ? பதறுகின்றாய்!

கல்லூரி மாணவிஉன் மகள் கமலா
ஏதேனும் காசா கேட்டாள்?
அல்லாஹ்போல், அனுதினமும் சில்லறைக்குக்
கடன்தந்த அலியார் நானா
பொல்லாத வார்த்தை எதும் புகன்றாரோ?
பொருமுகிறாய்! போன ஆண்டு
நில்வைக்கு வரிசையிலே நின்படலை
மட்டும் அங்கார் நிற்கின்றாரோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்திபட்டும் இருசாமம் ஆச்சுதினிக்
கடன்காரர் ஆரும் அங்கே
இந்தவரை நில்லார்கள்; என் மனையாள்
மட்டுமங்கே இருப்பாள் ஏங்கி
நொந்தென்ன கண்டோம் யாம்? இல்லாமை
யாம் கொடிய நோயைப்போக்க
விந்தைமருந் தறியாமல் விதியென்று
பேசுகிறோம்! வீடு செல்வோம்.

i) **இக்கவிதையின் மையக்கருத்து யாது?**

இன்று உனக்கும் சம்பளமா? என்ற நீலாவணனின் இந்தக் கவிதையானது ஏழை ஆசிரியர் ஒருவரது பல்வேறு நிலைப்பாடுகளையும் பேசுகிறது. அடிப்படைத் தேவைகளைக் கூடப் பூர்த்தி செய்ய முடியாத வறுமை நிலையினை பேசும் இக்கவிதையானது அவரது உள்ளக்குமுறல்களை, உணர்வுகளை அற்புதமாக சொல்கிறது.

கூடவே ஆசிரியரது ஏக்கங்கள், பிரச்சனைகள், இயலாமைகள் அவர் பெற்றுக்கொண்ட அனுபவங்கள் எனப்பல்வேறு விடயங்களையும் சொல்கிறது. விதியின் விளைவுதான் வறுமை என்று எண்ணி வாடலில் அர்த்தம் இல்லை என்பதையும் கவிதை வலியுறுத்தத் தவறவில்லை.

ii) **இக்கவிதையில் வரும் ஆசிரியரின் வறுமைநிலை.**

இன்று உனக்கும் சம்பளமா? என்ற கவிதை ஆசிரியர் ஒருவரின் வறுமை நிலையை எடுத்துச் சொல்கிறது. எல்லோருக்கும் மகிழ்வைத் தருகின்ற சம்பள நாள் வறுமை காரணமாக இவ் ஆசிரியருக்கு துயர்நிறைந்ததாக காணப்படுகிறது. தனது வறுமை நிலையினை கடலில் ஏற்றி வெளிப்படுத்துகின்றார்.

**“ஏழை வீட்டில் தான் நீயும் பிறந்தனையா?”** என்ற தொடர் தான் ஏழை வீட்டில் பிறந்ததனால் வறுமை காரணமாக சம்பளநாள் துயர் மிகுந்ததாக அமைந்து விட்டது என்பதைக் குறிப்பால் வெளிப்படுத்துகின்றது.

இருபத்தைந்து ஆண்டுகளாக ஒரு தோற்செருப்பை ஆசிரியர் பயன்படுத்துகிறார். அறுந்தறுந்து கட்டியதால் இப்பொழுது கட்டுவதற்கு கூட இடமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கட்டுதற்கும் இடமிலையா? கால் நூற்றாண்டாய்
தோற்பொருத்தி தோற்பொருத்தி துணையாக உழைத்த அவை.." ஆகிய வரிகள் ஆசிரியர் பாவித்த செருப்பினூடாக அவரது வறுமை நிலையினை எடுத்துச் சொல்கின்றன.

சமூக அந்தஸ்துமிக்க ஆசிரியத்தொழில் இவருக்கு கிடைத்த போதும் ஏழைகளுக்கான புறாமார்க்கு வேட்டியையே அணிகின்றார். பல தடவை இந்த வேட்டியை துவைத்து அணிந்ததினால் பேரூந்தில் ஒரு நாள் வெடித்தும் போகிறது. எனவே ஆசிரியர் பயன்படுத்திய உடை வாயிலாகவும், அவரது வறுமைநிலை வெளிப்படுத்தப்படுகிறது.

ஆசிரியத் தொழில் கிடைத்த அன்று ஒரு குடை வாங்குகின்றார்.
**"பொட்டூதிப் போனாலும் புழுதிமிகப் படிந்தாலும்.."** கட்டறுந்த நிலைக்கு வந்து விட்டது. புதியதொரு குடையைக்கூட வாங்க முடியாத ஆசிரியரது வறுமை நிலை இங்கு வெளிப்படுகின்றது.

கல்வி கற்கின்ற மகளுக்கு கல்வித் தேவைக்கு பணம் கொடுக்க முடியாத நிலை, கடன் கொடுத்தவர்களின் தொல்லையால் வீட்டிற்கே செல்ல முடியாத நிலை என ஆசிரியரின் வறுமை நிலையினை அடுக்கிக் கொண்டே போகின்றார் கவிஞர்.

iii) **நடுச்சாமம் ஆம் வரைக்கும் ஆசிரியர் வீடு செல்லாமைக்கான காரணங்கள்?**

சம்பள நாளிலன்று ஆசிரியர் அந்திபட்டு இருசாமம் ஆகும் வரையும் வீட்டிற்குச் செல்லவில்லை. தன்னுடைய சம்பள நாள் இன்று என்பதை அறிந்து தனக்கு கடன் கொடுத்தவர்கள் வீட்டிற்கு வந்துவிடுவார்கள் தான் வீடு சென்றால் கடன் கேட்டுத்தொல்லைப்படுத்துவார்கள். கடனைக் கொடுப்பதற்கு பணம் இல்லை. எனவே மேற்கூறிய காரணங்களினால் அந்திபட்டு இருசாமம் ஆகும் வரை ஆசிரியர் வீடு செல்லவில்லை.

iv) **நடுச்சாமம் ஆனதற்கு பின்பு ஆசிரியர் வீடு செல்வதற்கு கூறும் நியாயங்கள்.**

சம்பள நாளன்று தனக்கு கடன் கொடுத்தவர்கள் வீட்டிற்கு வந்து கடன் கேட்டுத் தொல்லைப்படுத்துவார்கள் என்ற காரணத்தினால் நடுச்சாமம் ஆகும் வரைக்கும் வீடு செல்லத் தயங்குகின்ற ஆசிரியர் அதன் பின்னர் வீடு செல்லத் துணிகிறார். கடன் கொடுத்தவர்கள் நடுச்சாமம் ஆனதற்கு பிறகு வீட்டிலே நிற்க மாட்டார்கள் என்பதனாலும் மனைவி தனித்தவள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக இவர் வரவிற்கு ஏங்கிக் கொண்டிருப்பாள் என்பதற்காகவும் வீடு செல்லத் துணிகின்றார்.

**"நில்வைக்கு வரிசையிலே நின்படலை மட்டுமங்கார்**
**நிற்கின்றாரோ?**
**அந்திபட்டும் இருசாமம் ஆச்சுதினிக் கடன்காரர்**
**ஆரும் அங்கே**
**இந்தவரை நில்லார்கள் என்மனையாள் மட்டுமங்கே**
**இருப்பாள் ஏங்கி....**
**வீடு செல்வோம்"**

v) **இக்கவிதையில் "வான் தந்த வளமிலையோ? வயல் தந்த நிதியிலையோ வாடாதே நீ" என்ற அடிகள் பெறும் முக்கியத்துவம்.**

தான் ஏழை வீட்டில் பிறந்ததனாலும் தமிழைக் கற்றதனாலும் இந்த நாட்டிலே பிறந்ததனாலும் தனக்கு வறுமை உண்டாயிற்று என்று எண்ணுகின்றார் ஆசிரியர். இந்நிலையிலேயே கவிஞரால் மேற்குறிப்பிட்ட அடிகள் பயன்படுத்தப்படுகின்றன. எனவே இந்த அடிகள் வானம் தருகின்ற மழை இருக்கிறது. வயல் தருகின்ற செல்வம் இருக்கின்றது நீ கவலைப்படாதே! என்று தெம்பூட்டுவனவாக இருக்கின்றன என்று கூறலாம். ஒட்டுமொத்தமாக இவ்வரிகள் ஆசிரியனுக்கு நம்பிக்கை ஊட்டுவன என்று கூற முடியாது.

ஏழை வீட்டில் பிறந்தவரிடம் வயல் தந்த நிதி இருப்பதற்கான சாத்தியம் இல்லை. கூடவே வானம் தருகின்ற மழையும் பொய்த்து விட்டது. வயலும் கிடையாது. வயல் தருகின்ற செல்வமும் கிடையாது. என்று ஆசிரியருடைய வறுமையை இவ்வடிகள் எடுத்துச்சொல்கின்றன. எனவே கிண்டல் அல்லது கேலியினூடாக ஆசிரியரது இயலாமையை தான் இவ்வடிகளும் வெளிப்படுத்துகின்றன என்று துணியலாம்.

vi) **இக்கவிதையில் வெளிப்படும் தமிழ் – முஸ்லீம் ஐக்கியம்.**

நீலாவணன் கிழக்கிலங்கையைச் சேர்ந்த கவிஞர். குறிப்பாக பெரிய நீலாவணையில் பிறந்தவர். முஸ்லீம்களும் தமிழர்களும் சேர்ந்து வாழ்கின்ற பிரதேசத்திலே பிறந்து வளர்ந்த கவிஞர். ஆதலால் இக்கவிதையில் ஓரிடத்திலே தமிழ் முஸ்லீம் ஐக்கியம் பற்றிப் பேசுகின்றார்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"அல்லாஹ் போல் அனுதினமும் சில்லறைக்கு கடன் தந்த
அலியார் நானா**

**பொல்லாத வார்த்தையெதும் புகன்றாரோ?** என்ற வரி இதனை மெய்ப்பிக்கின்றது.

அல்லாஹ் இல்லையெனாது அருளைச் சொரிகின்றதைப் போல அலியார் நானாவும் பேதமின்றி கேட்பவர்களுக்கு கடன் கொடுத்தார் என்பதிலிருந்து இதனைக் கண்டு கொள்கிறோம்.

## vii) கவிதைக்கும் தலைப்பிற்கும் இடையிலான பொருத்தப்பாடு.

நல்ல படைப்புக்கள் தலைப்பினூடாகவே தாம் கூறவந்த விடயங்களை வெளிப்படுத்துகின்றன. "இன்று உனக்கும் சம்பளமா?" என்ற இக்கவித்தலைப்பு கவிஞனின் பாடுபொருளுக்கு பொருத்தமாக அமைந்து அதனை விளக்கம் பெறச்செய்வதாகக் காணப்படுகிறது. இன்று உனக்கும் சம்பளமா? இரைகின்ற கடலைப்பார்த்து ஆசிரியன் கேட்கின்றான். இத்தலைப்போடு ஒட்டிக்கொள்கின்ற 'உம்' இடைச்சொல் எச்சப்பொருளை உணர்த்துகிறது. இரைகிற கடலைப்பார்த்து இன்று உனக்கும் சம்பளமா? எனக்கேட்கிற போது எனக்கு இன்று சம்பளம் என்பதை ஆசிரியன் சொல்லாமற் சொல்வதாக அமைந்து விடுகிறது. கவித்துவம் மிக்கதாக தலைப்பு அமைந்து கருப்பொருளை விளக்குவது சால நயத்திற்குரியதாகும்.

சம்பள நாளிலன்று ஆசிரியன் தான் அடைகின்ற அவலங்களை, உள்ளடக்கிடக்கைகளை, இயலாமைகளை கடலிலே ஏற்றி வெளிப்படுத்துகின்றான். எனவே தனது துன்பத்தை கடலில் ஏற்றி வெளிப்படுத்துகின்ற இக்கவிதைக்கு "இன்று உனக்கும் சம்பளமா?" எனத் தலைப்பிட்டது மிகவும் பொருத்தப்பாடுடையதாகும்.

## viii) எடுத்துரைப்பு முறைகள் / உத்திகள்.

- நீலாவணன் தான் சொல்ல வந்த விடயத்தை வாசகர்களுக்கு வெளிப்படுத்துவதற்காக பல்வேறு உத்திகளை கையாண்டிருக்கக் காணக்கிறோம். கவிதையின் கருப்பொருளுக்கு ஏற்ப தலைப்பிட்டமை ஓர் உத்தியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இக்கவிதையினூடாக சில காட்சிகளை வெளிப்படுத்தி தான் சொல்ல வந்த விடயங்களை வாசகர்களின் உள்ளத்திலே தொற்ற வைத்தமை இன்னொரு கவித்துவமாகும்.

**செருப்பு அறுதல்**
**குடையின் நிலையும், குடை தொலைதலும்**
**பேரூந்திலே வேட்டி கிழிதல்.**

- தான் கூறவந்த விடயத்தை கவிஞர் கடலிலே ஏற்றி வெளிப்படுத்திய மையும் மிகச்சிறந்த உத்தியாகும்.
- உரையாடற்பாங்கிலே தான் கூற வந்த விடயங்களை வெளிப்படுத்தி யுள்ளமை சிறந்த எடுத்துரைப்பு முறையாகும்.

**ஆசிரியருக்கும் கடலுக்கும் இடையிலான உரையாடல்.**

- மொழிநடை
வாசகர்களுக்கு இலகுவில் விளங்கக்கூடிய எளிமையான மொழி நடையைக் கையாண்டுள்ளமை.

**"கல்லூரி மாணவி உன் மகள் கமலா ஏதேனும்**
**காசா கேட்டாள்?"**

- நீலாவணனுடைய கவிதைகளில் நாம் காணக்கூடிய இன்னொரு பண்பு பேச்சோசைச் சொற்களைப் பயன்படுத்தி இருக்கின்றமை.

**சனத்துக்குள்ளே**
**சட்டம்பி ஆன அன்றே**
**கந்தோருக்கு**
**எடுத்துப்போய்**
**ஆச்சுதினி**

- கேலியும் கிண்டலும் சேர்ந்த மொழிநடையை நீலாவணன் தன்னுடைய கவிதைகளில் அனேகமான இடங்களில் பயன்படுத்தியுள்ளமையை நாம் அறியலாம்.

இக்கவிதையிலும் கேலியும் கிண்டலும் கலந்த மொழிநடை வருகிறது. அது நமக்கு நகைச்சுவை உணர்வை ஊட்டுகின்றன. சமூக விமர்சனமாவும் அவை அமைந்து விடுகின்றன.

**காற்செருப்பு கழன்றதுவா? கட்டுதற்கும் இடமிலையா**
**கால் நூற்றாண்டாய்**
**தோற்பொருத்தித் தோற்பொருத்தி துணையாக உழைத்த அவை**
**தொழிலில் ஓய்ந்தால்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**போற்றுதற்கோர் பொதுக்கூட்டம் போட்டதிலே பொன்னாடை**
**போர்த்து மேலும்**
**பாற்சோறும் பட்சணமும் படைப்பதற்கு நின்னிடத்தே**
**பணமா இல்லை?**

- வினாக்களை எழுப்பி வாசகர்களின் சிந்தனையைத் தூண்டி கருப்பொருளை விளங்க வைத்திருக்கின்றமையும் ஓர் உத்தியாகும்.
- தான் கூற வந்த கருத்தை வெளிப்படுத்துவதற்கு சமூக யதார்த்தங்களை கையாண்டிருக்கின்றமையும் சிறந்த எடுத்துரைப்பு முறை என்று கூறலாம்.
- நீலாவணன் தான் கூற வந்த கருத்தை வெளிப்படுத்த பாத்திர உருவாக்கத்தை கையாண்டுள்ளார்.

**அலியார் நானா**
**மகள் கமலா**

- இக்கவிதையினுடைய முடிவு சிந்தனைக்குரியது. சம்பள நாளன்று பல்வேறு காரணங்களால் நடுச்சாமம் ஆம் மட்டும் ஆசிரியர் வீட்டிற்குச் செல்லவில்லை. கவிஞரும் தீர்வு கூறவில்லை. வறுமையைப் போக்க வழியில்லாமல் நிற்கிறோம். விதி என்று பேசுகிறோம். வீட்டிற்கு போவோம் என்கிறார். வறுமையைப் போக்க கவிஞர் வழியைச் சொல்லாது வாசகர்களாகிய எம்மையே தீர்வு காணுமாறு விட்டிருப்பது சிறந்த உத்தியாகும்.

அ) அணிப்பிரயோகம்.

- உருவக அணி.

  **தேன்கடல் – இங்கு தேன் கடலாக உருவகிக்கப்பட்டுள்ளது.**

- உவமை அணி

  **அல்லாஹ் போல் அனுதினமும் சில்லறைக்கு கடன் தந்த அலியார் நானா.."**

ix) **இக்கவிதையினுடாக ஆசிரியர் மனதைத் தேற்றும் விதம்.**

இக்கவிதையானது ஓர் ஏழை ஆசிரியனுடைய அவலங்களுக்கு தீர்வு சொல்வதாக அமையவில்லை எவ்வளவு தூரம் அவனது மனதைத் தேற்றுகிறது என்பது கேள்வி தான்.

**"நொந்தென்ன கண்டோம் யாம் இல்லாமையாம் கொடிய**
**நோயைப் போக்க**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விந்தை மருந்தறியாமல் விதியென்று பேசுகிறோம்!**
**வீடு செல்வோம்."**

என்று தான் கவிதை முடிகிறது. கவலைப் படுவதனால் எந்தப்பயனும் இல்லை என்று கூறுமிடத்து தேற்றும் தன்மையைத் தரிசிக்கின்றோம். எம் துயரங்களுக்கு எல்லாம் காரணம் விதியென்று கூறுவதில் பயனில்லை என்று கூறுகின்றார் கவிஞர். இங்கும் மனித மனங்களைத் தேற்றுகிறார். துயரைப் போக்குவதற்கு உரிய விந்தை மருந்தை எம்மைக் கண்டறியுமாறு சொல்கிறார்.

x) **இயற்கைக் காட்சிகள்.**

- கடல் ஆரவாரித்தல்
- தேனாகிய கடல் ஓடுதல்
- வான் தந்த வளமாகிய மழையைப் பற்றியும் வயலைப்பற்றியும் பேசுதல்
- மாலை, சாமம் பற்றிப் பாடுதல்

xi) **வாழ்வியல் அம்சங்கள்.**

- ஆசிரியத் தொழிலும் சம்பளமும்
- பேரூந்தில் வேட்டி கிழிந்ததினால் ஏற்பட்ட அவலமும் அவமானமும்
- செருப்பு அறுந்ததனால் குடை தொலைந்ததனால் ஏற்பட்ட அவலம்.
- கடன் தொல்லையால் மறைந்து வாழுதல்
- கணவனுடைய வருகைக்காக மனைவி காத்திருத்தல்.

xii) **"தமிழா? நீ கற்றதுவும் தகாத வார்த்தை" என்ற வரிகள் பெறும் முக்கியத்துவம்.**

கவிஞர் தான் வாழ்ந்த காலத்திலே தமிழைக் கற்றவர்களை ஆகாதவர்கள் என்று நோக்கிய மனப்பாங்கினை இவ்வரிகளினூடாக வெளிப்படுத்துகின்றார். மேலும் இவர் வாழ்ந்த காலத்திலே ஆங்கில மோகம், சிங்கள மொழியின் ஆதிக்கம், தமிழ் சமூகங்களுக்கிடையே காணப்பட்டன. இதனால் தமிழ்மொழி இன்னல்களை, நெருக்கீடுகளை சந்தித்திருக்கிறது. இவ் உண்மைகளையும் கவிஞர் மறைமுகமாக வெளிப்படுத்தி உள்ளார். இவ் ஆசிரியன் என்ன பாடத்தைக் கற்பிக்கின்றான் என்பதைக் கவிஞன் நேரடியாகச் சொல்லவில்லை. தமிழா நீ கற்றதுவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கடலைப் பார்த்து கேட்கிறார் ஆசிரியர். இதனால் இவன் தமிழ் ஆசிரியரோ என்று ஊகிக்கலாம். தமிழ் ஆசிரியராக இருந்தது தான் வறுமைக்கு காரணம் என இவ்வரிகளினூடாக எம்மால் ஊகிக்க முடிகிறது.

xiii) **ஏழை ஆசிரியருடைய வறுமையை கவிஞர் வெளிப்படுத்தும் முறை.**

- கடலில் ஏற்றி வெளிப்படுத்தல்
- ஆசிரியருடைய பாவனைப்பொருட்களின் நிலையினூடாக வெளிப் படுத்தல்
- பாத்திர உருவாக்கம்

i) அலியார் நானாவின் கடன் தொல்லை

ii) மகள் கமலா

# என் இறைவன்

**புரட்சிக்கமால் (1928-1996)**

கிழக்கிலங்கை ஏறாவூரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இயற்பெயர் ஜனாப் மர்ஹூம் எம்.முஹம்மது சாலிஹ் என்பதாகும். ஈழத்து தமிழ் கவிதை மரபை நவீனமாக்குவதற்கு உழைத்தவர்களில் இவரும் ஒருவர். புரட்சிக்கமால் கவிதைகள் (1963), புதியதொனி (1995) ஆகியன இவரது கவிதைப் படைப்புக்கள். நம்பிக்கை, சமத்துவம், சகோதரத்துவம், தியாகம் போன்ற உயர்ந்த விழுமியங்களை இவர் கவிதைகள் வலியுறுத்தி நிற்கின்றன.

அருளின் முதலோன், அன்புடையோன்!
அகிலம் புரக்கும் எங்கோமான்
திருவார் மாந்தர் திருநாவில்
தேனாம் இனிய மொழி வைத்தோன்!
உரவோன், அன்னான் திருநாமம்
உன்னி, இதனை ஓதுகிறேன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்ய கருணைச் செழுஞ்சோதி
சிந்தை நீறி உழல்வாரும்
உய்ய அருளும்! உள்நொந்தார்
உருக அருளும்! ஒரு குரலில்
வையம் கொள்ள பேரரசும்
வழுத்தி இரக்கும் ஒரு சீமான்!
ஐய! கருணையங் கடலில்
ஆடா தானின் பாடென்னே?

தன்னில் தானாம் நிலையுடையான்!
தனியோர் ஆட்சி வலியுடையான்!
தன்னை உணர்வார் அருகமைவான்!
தனக்கே உரியார் துயர் களைவான்!
அன்னோன் ஆற்றல் ஆழத்தை
அளந்தார் யாரே? ஆளப்பாரே!
ஒன்று மற்ற தொன்றாலே
உலகைச்செய்தான் என் இறையே!

திரையின் பின்னால் நோக்குகின்றான்!
தீங்கின் பாலே திளைப்பார்க்குத்
துரும்பைக்கொண்டே பெரும் துன்பம்
தொடரச்செய்யும் மாவல்லோன்!
இருமை உலகும் அவனறிவில்
இரண்டு துளிகள் எனலாமே!
அருமை இறைவன் புகழுங்கி
அறிவாம் கைக்கு வசமாமோ?

i) **என் இறைவன் என்ற கவிதையினூடாக புரட்சிக்கமால் கூற விழைந்தவை யாவை?**

புரட்சிக்கமால் இக்கவிதையினூடாக இறைவனது அதாவது அல்லாவினுடைய பெருமைகளை, ஆற்றல்களை வெளிப்படுத்தியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ii) **இக்கவிதையினூடாக இறைவனது அருளாட்சியை எடுத்துக்காட்டுக.**

- அருளினுடைய முதல்வனாக விளங்குகின்றவன்.
- எங்கள் எல்லோரிடத்திலும் அன்பைச் சொரிகின்றவன்.
- இந்த உலகத்தைப் படைத்துக் காக்கின்றவன்.
- கருணையைச் சொரிகின்ற செழுமையான ஒளிவடிவினன்
- உள்ளம் உடைந்து துன்புறுவோர்க்கு எல்லாம் அவர்களது துயரத்தைப் போக்குகின்றவன்.

iii) **இறைவனது ஆற்றல்களைப் பட்டியற்படுத்துக.**

- உலகைப் படைத்தவன்.
- மனிதர்களுடைய நாவில் இனிய மொழிகளை வைத்துப் பேசுகின்ற ஆற்றலைப் படைத்தவன்.
- தன்னுடைய அன்பர்களினதும் துயருறுகின்றவர்களினதும் துயரங்களைப் போக்குபவன்.
- மிக்க வலிமையுடையவன்.
- ஒரு சொல்லினால் இவ்வுலகம் முழுவதையும் ஆட்சி செய்யக்கூடிய பேற்றை அளிக்கக்கூடியவன்.
- தன்னில் தானே தங்கி தனியானதோர் ஆட்சி செய்கின்றவர்.
- ஒன்றை வைத்துக் கொண்டு இன்னொன்றைப் படைக்கும் ஆற்றல் கொண்டவன்.
- இம்மை, மறுமை என்னும் இரண்டும் இறைவனுக்கு இரண்டு துளிகள்.
- மனிதர்களுடைய அறிவுக்கு எட்டாத வகையில் புகழாகிய உலகத்தைக் கொண்டவன்.

iii) **இறைவனது பெருமைகள் / மாட்சிமைகள் / சிறப்புக்கள்.**

- அருளைச் சொரிகின்றவன்.
- அன்புடையவன்.
- பேசும் ஆற்றலைத் தந்தவன்.
- வலிமை மிக்கவன்.
- ஆயிரம் திருநாமங்களை உடையவன்.
- தனியான ஆட்சி கொண்டவன்.
- அளவிட்டுச் சொல்ல முடியாத ஆற்றலையுடையவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மக்களது துன்பங்களைப் போக்குகின்றவன்.
- எம் அறிவுக்கு எட்டாத புகழை உடையவன்.

v) **மனிதர்கள் தவறிழைக்கக்கூடாது என்பது இக்கவிதையில் எவ்வாறு எடுத்துக் கூறப்பட்டுள்ளது? தீங்கான பாதையில் செல்பவர்களைக் கடவுள் எவ்வாறு தண்டிக்கிறான்?**

**"திரையின் பின்னால் நோக்குகின்றான்"** என்ற தொடரினூடாகக் கடவுள் எங்களது எல்லா செயற்பாடுகளையும் அவதானிக்கிறான் என்பதை வலியுறுத்துகிறார்.

**"தீங்கின் பாலே திளைப்பார்க்குத்**
**துரும்பைக் கொண்டே பெருந்துன்பம்**
**தொடரச் செய்யும் மாவல்லோன்!"** என்ற தொடரினூடாக தவறிழைப்பவர்களை கடவுள் தண்டிப்பார் என்பதை வலியுறுத்துகின்றார்.

vi) **உத்தி / சொல்லும் விதம்.**

- இறைவனை முன்னிலைப்படுத்தித் தான் கூற வந்த கருத்தை வெளிப்படுத்தல்.

  **"செய்ய கருணைச் செழுஞ் சோதீ....."**

- இறைவனது பெருமைகளைச் சொல்வதற்கு அதற்கு ஏற்ற சொல்லாட்சிகளைப் பயன்படுத்தி உள்ளமை.

  **"அருளின் முதலோன்"**
  **"அன்புடையோன்"**
  **"உரவோன்"**

- உருவக அணிப்பிரயோகம்.

  i) கருணையை ஒளியாக உருவகித்தல் - கருணைச் செழுந்சோதி
  ii) புகழூங்கி
  iii) தேனாம் இனியமொழி

- வினாக்களை எழுப்பிக் கற்போரின் சிந்தனையைத் தூண்டி தனது கருத்தை வலியுறுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கவர்ச்சியான மொழிநடை.

**"தன்னில் தானாம் நிலையுடையான்!**
**தனியோர் ஆட்சி வலியுடையான்!**
**"இருமை உலகும் அவனறிவில்**
**இரண்டு துளிகள் எனலாமே?**

- எல்லாச் சமயத்தவர்களும் தங்கள் தங்கள் இறைவனைக் காணக் கூடியதாய் இக்கவிதையினை அமைத்திருத்தல்.

**மத அடையாளம் கிடையாது, உலகைப்படைத்தல், அருளைச்சொரிதல், பலதிருநாமங்களைக் கொண்டிருத்தல், அளவிட்டுக் கூற முடியாத ஆற்றல்களைக் கொண்டிருத்தல், துன்பம் களைதல் போன்றன எல்லாத் தெய்வங்களுக்கும் பொதுவானவை.**

# பாரதிதாசன் கவிதைகள்
# (1891 – 1964)

நவீன தமிழ்க் கவிதையைப் பொறுத்தவரை பாரதிக்கு அடுத்ததாகப் பேசப்படுகின்ற கவிஞன் பாரதிதாசன். புதுச்சேரியில் கனகசபை முதலியாருக்கும் இலக்குமியம்மாளுக்கும் மகனாகப் பிறந்தார். சுப்புரத்தினம் என்பது இவரது இயற்பெயர். பாரதி மீது கொண்ட ஈடுபாட்டினால் பாரதிதாசன் எனத் தன்பெயரை மாற்றிக்கொண்டவர். பாரதியிடம் "எழுககவிஞனே" என்று பாராட்டுப்பெற்றவர். மொழியுணர்வும், இசையுணர்வும், மனஉறுதியும் கவிதா வேகமும் மிக்கவர்.

## பாரதி உள்ளம்

பாரதி புதுச்சேரியில் வாழ்ந்தபோது அவருக்கு அறிமுகமானவர் பாரதிதாசன். பாரதியைக் குருவாகக் கொண்டவர். ஏறத்தாழ பத்து ஆண்டுகள் புதுவையில் பாரதியோடு நெருங்கிப்பழகி அவரை நன்கு புரிந்துகொண்டவர். பாரதியின் இலட்சியங்களை உள்ளத்திலே சுமந்தவர். இதன்வெளிப்பாடு தான் பாரதி உள்ளம் என்ற இக்கவிதை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதி ஒழித்திடல் ஒன்று - நல்ல
தமிழ் வளர்த்தல் மற்றொன்று
பாதியை நாடு மறந்தால் - மற்றப்
பாதி துலங்குவதில்லை
சாதி களைந்திட்ட ஏரி - நல்ல
தண்டமிழ் நீரினை ஏற்கும்
சாதிப்பிணிப்பற்றதோளே - நல்ல
தண்டமிழ் வாளினைத்தூக்கும்.

என்றுரைப்பார் என்னிடத்தில் - அந்த
இன்ப உரைகளென் காதில்
இன்னும் மறைந்திடவில்லை - நான்
இன்றும் இருப்பதனாலே
பன்னும் நம் பாரதியாரின் - நல்ல
பச்சை அன் புள்ளத்தி னின்று
நன்று பிறந்தஇப் பேச்சு - நம்
நற்றமிழர்க்கெழில் மூச்சு.

மேலவர் கீழவர் இல்லை - இதை
மேலுக்குச் சொல்லிடவில்லை
நாலுதெருக்களின் கூட்டில் - மக்கள்
நாலாயிரத்தவர் காணத்
தோலினில் தாழ்ந்தவர் என்று - சொல்லும்
தோழர் சமைத்ததை உண்பார்.
மேலும் அப்பாரதி சொல்வார் - சாதி
வேரைப் பொசுக்குங்கள் என்றே.

செந்தமிழ் நாட்டினிற் பற்றும் - அதன்
சீருக்கு நல்லதோர் தொண்டும்
நிந்தை இலாதவை அன்றோ - எந்த
நேரமும் பாரதி நெஞ்சம்
கந்தையை எண்ணுவதில்லை - கையிற்
காசை நினைப்பதும் இல்லை.
செந்தமிழ் வாழிய! வாழி - நல்ல
செந்தமிழ் நாடென்று வாழ்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**i) இக்கவிதையினூடாக வெளிப்படுத்தப்படும் பாரதியின் உள்ளத்தை இனங்கண்டு எழுதுக.**

பாரதிதாசனின் இக்கவிதையானது பாரதியின் உள்ளம் எத்தகையது என்பதைப் படம்பிடித்துக் காட்டுகிறது. சாதி ஒழிப்பதைப் பற்றியும், தமிழ் வளர்ப்பதைப் பற்றியும் அவனது உள்ளமானது அவாவி நின்றது. சாதிப் பாகுபாடுகளை ஒழிப்பதன் மூலமே தமிழை வளர்க்கலாம் என்று நம்பியது.

பாரதியினுடைய உள்ளமானது தூய்மையானதாகவும் அவனது செயல்களோடு ஒன்றித்ததாகவும் காணப்பட்டது.

**நாலு தெருக்களின் சுவட்டில் – மக்கள்**
**நாலா யிரத்தவர் காணத்**
**தோலினில் தாழ்ந்தவர் என்று சொல்லும்**
**தோழர் சமைத்ததை உண்பார்**

என்ற வரிகளினூடாக மேலே கூறிய உண்மையினை நாம் கண்டு கொள்ளலாம்.

நல்ல ஆடையைப்பற்றி எண்ணிப்பாராது காசைப்பற்றி எண்ணிப்பாராது தமிழ் வாழ வேண்டும், தமிழ் நாடு வாழ வேண்டும் என்று எண்ணிய உயர்ந்த உள்ளம் பாரதியின் உள்ளம்.

**ii) இக்கவிதையினூடாகப் பாரதி வாழ்ந்த காலச் சமுதாயநிலையை எடுத்துக்காட்டுக.**

பாரதி வாழ்ந்த காலச்சமுதாயத்திலே சாதிப்பாகுபாடு நிறைந்து காணப்பட்டது. மேலவர், கீழவர் என்ற பேதங்கள் காணப்பட்டன. தாழ்ந்தவர்களிடையே உயர்சாதியினர் உணவு வாங்கி உண்ணவில்லை.

பாரதி வாழ்ந்த காலச்சமுதாயத்திலே தமிழ் மொழிக்கான இன்னல்கள், இக்கட்டுகள் காணப்பட்டன. இதனாற்தான் பாரதி தமிழ் வாழ வேண்டும் என்று பாடுபட்டான்.

**iii) இக்கவிதையினூடாக பாரதிக்கும் பாரதி தாசனுக்கும் இடையிலான தொடர்பினை எடுத்துக்காட்டுக.**

பாரதி மீது மிகுந்த ஈடுபாடு கொண்டவன் பாரதிதாசன். இதனால் தான் தன்னுடைய பெயரைப் பாரதிதாசன் என்று மாற்றிக் கொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கவிதையினூடாகவும் இருவருக்கும் இடையிலான தொடர்பு/ உறவுநிலை வெளிப்படுத்தப்படுகிறது. தான் பாரதியோடு உரையாடிய தாகவும் அவர் சொன்னவற்றையே தான் சொன்னதாகவும் பாரதிதாசன் வெளிப்படுத்துகிறான். "என்றுரைப்பார் என்னிடத்தில்.." என்ற தொடரினூடாக இதைக் கண்டு கொள்ளலாம்.

பாரதியை நேரிலே கண்டு உரையாடியதுக்கு அப்பால் பாரதியினுடைய இலட்சியங்களைச் சுமந்தவன் என்ற வகையிலே பாரதியோடு தொடர்புபடுகின்றான் இவன்.

**"இன்ப உரைகளென் காதில்**
**இன்றும் மறைந்திடவில்லை..."** என்ற வரிகளினூடாக இதனைக் கண்டுகொள்கிறோம்.

ஆடையைப் பணத்தை எண்ணிப்பாராத பாரதியினுடைய உள்ளத்தையும் சிந்தனையையும் செயலையும் பாரதிதாசன் கூறுமிடத்தும் இருவருக்கும் இடையிலான தொடர்பினைக் கண்டு கொள்கின்றோம்.

**iv) இக்கவிதையினூடாக வெளிப்படுத்தப்படும் பாரதிதாசனுக்கு பாரதி மீது இருந்த ஈடுபாடு.**

**v) பாரதிதாசனுக்கு பாரதி மீது ஈடுபாடு இருந்தமைக்கான காரணங்கள்?**

பாரதியின் அடிமை நான் என்று கூறி தமிழ் இலக்கிய தளத்திலே நின்று நிலைத்தவன் பாரதிதாசன். பாரதியினுடைய கவிதையிலே, இவனுடைய கவித்துவத்திலே, இருந்த மதிப்பு பாரதிதாசனை பாரதி மீது ஈடுபாடு கொள்ள வைக்கிறது. சிந்தனையும், செயலும், சொல்லும் ஒன்றாக இருந்த பாரதி மீது ஈடுபாடு தோன்றியமை இயல்பே ஆகும்.

சாதிப்பாகுபாடுகளைக் களைய வேண்டும். தமிழை வளர்க்க வேண்டும், தமிழ்நாட்டை முன்னேற்ற வேண்டும் என்று எண்ணி அதற்காகக் கவிதையை ஆயுதமாக பயன்படுத்தியவன் பாரதிதாசன். தன் கொள்கைகளோடு ஒத்திருந்த பாரதி மீது கொள்கை அடிப்படையிலும் ஈடுபாடு ஏற்படலாயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

vi) **இக்கவிதையில் வெளிப்படுத்தப்படும் சமூக ஏற்றத்தாழ்வுகளை எடுத்துக்காட்டுக.**

vii) **இக்கவிதையில் பாரதியினுடைய மொழிப்பற்று கூறப்படுமாற்றை எடுத்துக்காட்டுக.**

பாரதியினுடைய மொழிப்பற்று இக்கவிதையினூடாக வெளிப்படுகிறது. அவன் உள்ளத்தினுடைய பாதி சாதிப்பாகுபாட்டை ஒழிப்பதைப்பற்றியும் மீதி தமிழ் வளர்வதைப் பற்றியும் எண்ணியது என்று கூறுவதிலிருந்து பாரதியின் தமிழ்ப்பற்றை கண்டு கொள்கிறோம். சாதிப்பாகுபாட்டை ஒழிப்பதற்காக பாரதி போராடியதற்கான காரணமே தமிழ் வளரவேண்டும் என்பதே என்று கூறும்போது இவனது தமிழ்ப்பற்றை நாம் தரிசிக்கிறோம்.

கந்தையைப் பற்றி எண்ணாது காசைப்பற்றி எண்ணாது தமிழ் வாழ வேண்டும் என்று வாழ்ந்தவன் பாரதி என்று எமக்குச் சொல்கிறான் பாரதிதாசன். இதிலிருந்து பாரதியின் மொழிப்பற்றை நாம் கண்டு கொள்கிறோம்.

viii) **பாரதியினுடைய நாட்டுப்பற்றை எடுத்துக்காட்டுக.**

பாரதியினுடைய இறுதி இலக்கு தனது தாய் நாட்டினுடைய மேம்பாடு. சாதிப்பாகுபாடுகள் களைய வேண்டும் என்று எண்ணியமையும் தமிழ் வாழ வேண்டும் என்று எண்ணியமையும் நாட்டின் மீது கொண்ட பற்றினாலேயே ஆகும். நாட்டினுடைய உயர்வுக்காகப் பாடுபடுகின்றமை பழிக்குரிய விடயம் அன்று என்று கூறிக் காசையோ ஆடையையோ எண்ணாது தமிழ்நாட்டின் உயர்வே என்று வாழ்ந்தவன் பாரதி.

**"செந்தமிழ் நாட்டினில் பற்றும் – அதன்**
**சீருக்கு நல்லதோர் தொண்டும்**
**நிந்தை இலாதவை அன்றோ – எந்த**
**நேரமும் பாரதி நெஞ்சம்**
**கந்தையை எண்ணுவ தில்லை – கையில்**
**காசை நினைப்பதும் இல்லை**
**செந்தமிழ் வாழிய! வாழி – நல்ல**
**செந்தமிழ் நாடென்று வாழ்ந்தார்"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ix) **பாரதிதாசன் தான் கூற வந்த விடயத்தை வெளிப்படுத்திய விதம்.**

பாரதி கூறியவற்றையே தான் கூறுவதாகச் சொல்லி கற்பவர்களுக்கு நம்பிக்கையூட்டல்.

**"என்றுரைப்பார் என்னிடத்தில் – அந்த**
**இன்ப உரைகளென் காதில்**
**இன்றும் மறைந்திட வில்லை – நான்**
**இன்றும் இருப்பதனாலே"**

பாரதியினுடைய உள்ளமும் சொல்லும் ஒன்று என்பதற்கு கவிதையிலே ஆதாரம் காட்டி நிறுவுதல்.

**"மேலவர் கீழவர் இல்லை – இதை**
**மேலுக்குச் சொல்லிட வில்லை**
**நாலு தெருக்களின் கூட்டில் – மக்கள்**
**நாலா யிரத்தவர் காணத்**
**தோலினில் தாழ்ந்தவர் என்று – சொல்லும்**
**தோழர் சமைத்ததை உண்பார்"**

தன் கவிதையின் இடையிலே பாரதியின் கூற்றைக் கொண்டு வந்து இணைத்தல்.

**மேலும் அப்பாரதி சொல்வார் – "சாதி**
**வேரைப் பொசுக்குங்கள் என்றே"**

**உருவக அணிப்பிரயோகம்.**

**தமிழை நீராக வாளாக உருவகித்தல்.**
**தமிழ் நாட்டினை ஏரியாக உருவகித்தல்.**

**"சாதி களைந்திட்ட ஏரி – நல்ல**
**தண்டமிழ் நீரினை ஏற்கும்**
**சாதிப் பிணிப்பற்ற தோளே – நல்ல**
**தண்டமிழ் வாளினைத் தூக்கும்"**

- சாதியை நோயாக உருவகித்தல்.
- ஆழக்கருத்தை வெளிப்படுத்தும் அற்புதமான சொல்லாட்சி.

**சாதி களைந்திட்ட ஏரி**
**சாதிப்பிணிப்பற்ற தோள்**
**தண்டமிழ் வாளினைத் தூக்கும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢ ஓசைச்சிறப்பு

**"நன்று பிறந்த இப்பேச்சு –நம்**
**நற்றமிழர்க்கு எழில் மூச்சு"**

X) இக்கவிதையில் பாரதிதாசன் கையாண்டுள்ள அணியினை எடுத்துக்காட்டி விளக்குக.

XI) பாரதியின் சமூகத்தொண்டுகளாக அல்லது தமிழ் நாட்டின் மேம்பாட்டிற்காக அவன் மேற்கொண்ட செயற்பாடுகளாக பாரதிதாசன் கூறியவற்றை பட்டியற்படுத்துக.

XII) பாரதியிடத்துப் பல்வேறு விடயங்களைக் கற்றுக்கொண்ட பாரதிதாசன் அவற்றைத் தன் வாழ்வில் இலட்சியமாகவும் கொண்டான். இக்கூற்று இக்கவிதையில் வெளிப்படுமாற்றை எடுத்துக்காட்டுக.

# பத்திரிகை

**வெ**குசனத்தொடர்பு சாதனங்களிலொன்றாகிய பத்திரிகையினுடைய சிறப்பை, அதன் உள்ளடக்கத்தை, பண்புகளை, பயன்பாடுகளை பாரதிதாசன் இக்கவிதையில் வெளிப்படுத்துகின்றார். பத்திரிகையைப் பெண்ணாக உருவகப்படுத்திப் பாடியுள்ளமை சிறப்புக்குரிய விடயமாகும். எல்லோரும் படித்து இன்புறத்தக்க வகையில் இக்கவிதையைப் படைத்துள்ளார்.

காரிருள் அகத்தில் நல்ல
கதிரொளி நீதான்! இந்தப்
பாரிடைத்துயில்வோர் கண்ணிற்
பாய்ந்திடும் எழுச்சி நீதான்!
ஊரினை நாட்ட இந்த
உலகினை ஒன்று சேர்க்கப்
பேரறிவாளர் நெஞ்சிற்
பிறந்த பத்திரிகைப் பெண்ணே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிஞர் தம் இதயஓடை
ஆழ நீர் தன்னை மொண்டு
செறிதரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றிக்
குறுகிய செயல்கள் தீர்த்துக்
குவலயம் ஓங்கச்செய்வாய்!
நறுமண இதழ்பெண்ணே உன்
நலம் காணார் ஞாலம் காணார்.

கடும்புதர் விலக்கிச்சென்று
களாப்பழம் சேர்ப்பார் போலே
நெடும்புவி மக்கட்கான
நினைப்பினிற் சென்று நெஞ்சிற்
படும்பல நுணுக்கம் சேர்ப்பார்.
படித்தவர் அவற்றையெல்லாம்
'கொடும்' என அள்ளி உன் தாள்
கொண்டார்க்குக் கொண்டு போவாய்.

வானிடை நிகழும் கோடி
மாயங்கள், மாநிலத்தில்
ஊனிடை உயிரில் வாழ்வின்
உட்புறம் வெளிப்புறத்தே
ஆன நற்கொள்கை, அன்பின்
அற்புதம் இயற்கைக்கூத்துத்
தேனிதழ் தன்னிற் சேர்த்துத்
தித்திக்கத் தருவாய் நித்தம்.

சிறுகதை ஒன்று சொல்லிப்
பெருமதி யூட்டும் தாளே!
அறைதனில் நடந்தவற்றை
அம்பலத்திழுத்துப்போட்டுக்
கறையுளம் தூய்மை செய்வாய்!
களைப்பிலே ஊக்கம் பெய்வாய்!
நிறைபொருள் ஆவாய் ஏழை
நீட்டிய வெறுங்கரத்தே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓவியம் தருவாய்! சிற்பம்
உணர்விப்பாய்! கவிதையூட்டக்
காவியம் தருவாய் மக்கள்
கலகலவெனச் சிரிப்பு
மேவிடும் விகடம் சொல்வாய்!
மின்னிடும் காதல் தந்து
கூவுவாய்! வீரப்பேச்சுக்
கொட்டுவாய் கோலத்தாளே!

தெருப்பெருக்கிடுவோருக்கும்
செகம் காக்கும் பெரியோர்க்கும், கை
இருப்பிற் பத்திரிகை நாளும்
இருந்திடல் வேண்டும்! மண்ணிற்
கருப்பெற் றுருப்பெற் றிளநடை
பெற்றுப்பின்னர் ஐந்தே ஆண்டு
வரப்பெற்றார், பத்திரிகை நாளும்
உண்டென்றால் வாழ்க்கை பெற்றார்.

i) **கவிஞர் கூற வந்த விடயம்.**

பத்திரிகை என்ற கவிதையினூடாக பாரதிதாசன் பத்திரிகையினுடைய முக்கியத்துவத்தை எடுத்துச் சொல்கிறார். அதாவது பத்திரிகையின் சிறப்புக்கள் அதன் பணிகள் அவை சமூகத்தில் பெறும் முக்கியத்துவம் என்பவற்றை எடுத்துக் கூறுகின்றார்.

ii) **பத்திரிகையின் சிறப்புக்கள்.**

அறியாமை பொருந்திய உள்ளங்களினது அறிவொளி பத்திரிகை. உலகிலே உறங்குகின்றவர்களை எழுச்சியுறச் செய்வது பத்திரிகை. ஊரின் பெருமைகளைச் சொல்ல உலகத்தை ஒன்று சேர்க்கப் பேரறிவாளரது உள்ளங்களில் பிறந்தது பத்திரிகை. இயற்கை, அன்பு, காதல், அறிவியல், சிறுகதை, ஓவியம், சிற்பம், நகைச்சுவை எனப்பல்வேறு விடயங்களையும் எடுத்துச்சொல்லி உலகை உய்விப்பது பத்திரிகை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iii) **பத்திரிகையின் முக்கியத்துவம்.**

**"நறுமண இதழ்ப்பெண்ணே உன்**
**நலம் காணார் ஞாலம் காணார்"**

என்று பத்திரிகையைப் படிக்காதவர்கள் உலகை அறியாதவர்கள் என்கிறார் பாரதிதாசன். இதிலிருந்து பத்திரிகையின் முக்கியத்துவத்தை நாம் கண்டு கொள்கிறோம்.

தெருவைப் பெருக்குகின்றவர்கள் கையிலும் இவ்வுலகத்தை காக்கின்றவர்கள் கையிலும் பத்திரிகை இருக்க வேண்டும் என்று பாரதிதாசன் கூறுவதிலிருந்து பத்திரிகையின் முக்கியத்துவத்தைக் கண்டு கொள்கிறோம்.

**"தெருப் பெருக்கிடு வோருக்கும்**
**செகம் காக்கும் பெரியோருக்கும் கை**
**இருப்பில் பத்திரிகை நாளும்**
**இருந்திடல் வேண்டும்"**

ஐந்து வயது வாய்க்கப்பெற்ற குழந்தையின் கையில் பத்திரிகை இருக்குமென்றால் அவர் வாழ்கை பெறுவார் என்று கூறுவதிலிருந்து பத்திரிகையின் முக்கியத்துவத்தை நாம் கண்டு கொள்கிறோம்.

iv) **பத்திரிகையின் உள்ளடக்கம்.**

பத்திரிகையானது என்னென்ன விடயங்களை உள்ளடக்கி நிற்கிறது என்பதைக் கவிஞர் இக்கவிதையிலே எடுத்துக்கூறுகின்றார். வானில் நிகழுகின்ற மாற்றங்கள், உடம்பு, உயிர், வாழ்க்கை என்பவற்றின் உட்புறம், வெளிப்புறம் இவற்றினூடாக வெளிப்படுத்துகின்ற கொள்கைகள், அன்பின் அற்புதம், இயற்கைக்கூத்து, சிறுகதை, ஓவியம், சிற்பம், கவிதை, காவியம், விகடம், காதல்.

v) **பத்திரிகையின் பணிகள்.**

- உள்ளங்களில் இருக்கின்ற அறியாமையைப் போக்கி அறிவினை ஊட்டுதல்.
- அறிஞர்களினது உள்ளங்களிலே பிறக்கின்ற அற்புதமான கருத்துக்களை மக்களிடத்தில் கொண்டு செல்லல்.
- உலகினை ஒன்றுபடச் செய்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இழி செயல்களை நீக்கி உலகை ஏற்றமுறச் செய்தல்.
- மிக்க கடினப்பட்டு படித்தவர்கள் கண்டு சொல்லுகின்ற விடயங்களை எல்லாம் அள்ளி அள்ளி மக்களுக்கு கொடுத்தல்.
- பல்வேறு விடயங்களையும் உள்ளடக்கியதாக வெளிவந்து மக்களை மேம்பாடடையச் செய்தல்.
- அறையில் நடந்தவற்றை அம்பலத்திற்கு கொண்டு வருதல்.
- கறை களைந்து தூய்மை செய்தல்.
- உழைப்பினால் சேர்ந்தவர்களை உற்சாகப்படுத்தல்.

**vi) பத்திரிகையை கவிஞர் விளிக்கும் முறை.**

**"காரிருள் அகத்தில் நல்ல கதிரொளி"**
**"பாரிடைத் துயில்வோர் கண்ணில் பாய்ந்திடும் எழுச்சி"**
**"பேரறிவாளர் நெஞ்சில் பிறந்த பத்திரிகைப் பெண்ணே"**
**"நறுமண இதழ் பெண்ணே"**
**"பெருமதி ஊட்டும் தாளே"**
**"கோலத் தாளே"**

**vii) பத்திரிகை வாசிப்பதனால் அடையும் நன்மைகள்.**

- எம் உள்ளத்தின்கண் இருக்கும் அறியாமை அகன்று போகும்.
- இவ்வுலகத்தை நன்கு உணர்ந்து கொள்ள முடியும்.
- உலகில் நடக்கின்ற அனைத்து விடயங்களையும் அறிந்து கொள்ள முடியும்.
- வாழ்வில் அர்த்தம் பெற முடியும்.

**viii) பத்திரிகை வாசிக்காமையால் அடையும் தீமைகள்.**

- உள்ளத்தின்கண் அறியாமையோடு வாழ நேரிடும்.
- இவ்வுலகத்தை உணர்ந்து கொள்ள முடியாது.
- உலக மாற்றங்களை அறிய முடியாது.
- வாழ்க்கை பெற முடியாது

**ix) பத்திரிகையின் பிறப்பு.**

பத்திரிகையின் பிறப்பு பற்றி கூற வந்த பாரதிதாசன் பேரறிவாளர் நெஞ்சில் பிறந்த பத்திரிகைப்பெண்ணே என்கின்றார். மிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவுள்ளவர்களின் உள்ளங்களில் பிறந்தது பத்திரிகை எனக் குறிப்பிடுகின்றார். அறிஞர்களின் இதயமாகிய ஓடையிலே உள்ள ஆழ நீரை உண்டு அதைக் கொண்டு வந்து மக்களின் எண்ணம் செழிக்க பத்திரிகை ஊற்றுகிறது என்கிறார். இதிலிருந்து பத்திரிகையினுடைய பிறப்பு / உருவாக்கம்,பேரறிவாளர் நெஞ்சு, அறிஞர் தம் இதயஓடை என்பதைக் கண்டு கொள்கிறோம்.

X) **அணிப்பிரயோகம்**

**அ) உருவக அணி**

- காரிருள் அகம் - கரிய இருளாகிய அகம்
- கதிரொளி - கதிராகிய ஒளி
- பத்திரிகைப் பெண்ணே - பத்திரிகையாகிய பெண்ணே
- இதய ஓடை - இதயமாகிய ஓடை

**ஆ) உவமை அணி**

"கடும்புதர் விலக்கிச் சென்று களாப்பழம் சேர்ப்பார் போலே நெடும்புவி மக்கட்கான நினைப்பினில் சென்று நெஞ்சில் படும்பல நுணுக்கம் சேர்ப்பார்"

XI) **உத்தி / எடுத்துரைப்பு முறை.**

- பத்திரிகையைப் பெண்ணாக உருவகித்தல் /காணல்.
- அணிப்பிரயோகம்.
- கற்போர் விளங்கக்கூடிய மொழிநடை.
- ஆழக்கருத்தை வெளிப்படுத்தும் அற்புதமான மொழியாட்சி.

  "நலம் காணார் ஞாலம் காணார்"

  "பேரறிவாளர் நெஞ்சில் பிறந்த பத்திரிகைப் பெண்ணே"

  "வீரப்பேச்சு கொட்டுவாய்க் கோலத்தாளே"

- பத்திரிகையின் உருவாக்கம், நோக்கம், முக்கியத்துவம், பயன், பணி, உள்ளடக்கம் என யாவற்றையும் திட்டமிட்டு வெளிப்படுத்தியுள்ளமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிமணி தேசியவிநாயகம்பிள்ளை கவிதை (1876 – 1954)

சிவதானுப்பிள்ளைக்கும் ஆதி இலட்சுமி அம்மைக்கும் மகனாகத்தேரூரில் பிறந்தார். சென்னை மாகாணத்தமிழ்ச்சங்கத்தினால் 1840 ஆம் ஆண்டு கவிமணி என்ற பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். "மலரும் மாலையும்", "ஆசியஜோதி", "இளம்தென்றல்", "தேவியின் கவிக்கனிகள்", "காதல் பிறந்தகதை", "நான்சில் நாட்டு மருமக்கள் வழி மான்மீயம்", "கவிமணியின் உரைமணிகள்" எனப்பல நூல்களைத் தமிழுக்குத்தந்தவர்.

# சூரிய காந்தி

எளிமையான முறையில் கவிதைகளைப்பாடித் தமிழ் மனங்களுக்கு விருந்தளித்தவர் கவிமணி. சூரியகாந்திப்பூவினுடைய அழகையும் சிறப்பையும், எல்லோரும் படித்து இன்புறத்தக்க வகையில் பாடியுள்ளார். இக்கவிதையில் கவிமணி கையாண்டுள்ள தற்குறிப்பேற்ற அணிகள் சால நயத்திற்குரியவை. சூரியகாந்திப்பூவினுடைய செயற்பாடுகளினூடாகக் காதல் வயப்பட்ட பெண்ணினுடைய மனநிலையினை வெளிப்படுத்தியுள்ளமையை இக் கவிதையில் காண்கிறோம்.

ஆகாய வீதியுலாவி வருமிந்த
ஆதித் தனோ உன தன்பனடி
வேகாமல் வெந்து வெயிலில் உலர்ந்து நீ
விண்ணிலே கண்ணாக நிற்பதேனோ?

பொன்னிறமுண்டு, பொலிவுண்டு, கண்டுனைப்
போற்ற இனிய வடிவுமுண்டு;
என்ன அரிய வரம்பெற, இன்னும் நீ,
இத்தவம் செய்வது, பூமகளே!

காயும் கதிரவன் மேனியை நோக்க உன்
கண்களும் கூசிக்கலங்காவோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேயம்மிகுந்தவர் காய வருத்தம்
நினைப்பதும் இல்லையோ? சொல். அடியே!

காலையி லேகதிர் வீசிவர - நிதம்
கண்டு களித்து மகிழ்ந்திடும் நீ.
மாலையிலே முகம் வாடித்தளர்ந்திட
வந்தவருத்தமும் ஏதடியோ?

செங்கதிர் செல்லும் திசையது நோக்கி - உன்
செல்வமுகமும் திரும்புவதேன்?
மங்கையே உன்மண வாளனாகில் - அவன்
வார்த்தையொன்று சொல்லிப்போகானோ?

ஆசை நிறைந்த உன் அண்ணலை நோக்கிட
ஆயிரங் கண்களும் வேண்டுமோடி?
பேசவும் நாவெழவில்லையோடி? - கொஞ்சம்
பீத்தற் பெருமையும் வந்ததோடி?

மஞ்சள் குளித்து முகமினுக்கி - இந்த
மாயப்பொடி வீசி நிற்கும் நிலை
கஞ்ச மகள்வந்து காணிற் சிரிக்குமோ?
கண்ணீர் உகுக்குமோ? யாரறிவார்.

உன்பெயர் சூரிய காந்தியென்றார் - அதன்
உண்மையும் இன்றே அறிந்துகொண்டேன்!
இன்பம் அளித்திடும் பூவுலகத்துனக்கு
யாரும் இணையில்லை. இல்லையம்மா!

i) சூரியகாந்திப்பூவின் தோற்றப்பொலிவு.

பொன் போன்ற நிறம், பொலிந்த தோற்றம், காண்கின்றவர்கள் போற்றத்தக்க இனிய வடிவம்.

"பொன்னிறம் உண்டு, பொலிவுண்டு கண்டுனைப்
போற்ற இனிய வடிவுமுண்டு" மேலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மஞ்சள் குளித்து முக மினுக்கி இந்த மாயப்பொடி
வீசி நிற்கும் நிலை"

என்ற வரிகளும் சூரியகாந்திப் பூவினது தோற்றத்தையே எடுத்துக் காட்டுகின்றது.

ii) **சூரியகாந்திப்பூவின் செயற்பாடுகள்.**

- வெயிலில் வேகாமல் வெந்து வாடி விண்ணையே நோக்கிய வண்ணம் நிற்றல்.
- எந்நேரமும் சூரியனையே நினைத்த வண்ணம் தவமிருத்தல்.
- காலையில் வருகின்ற சூரியனைக்கண்டு மகிழ்ச்சியடைதல்.
- மாலையில் சூரியன் செல்லுகின்ற போது அதைக்கண்டு வாடித் தளர்வுறுதல்.
- மஞ்சள் குளித்து முகமினுக்கி மாயப்பொடி வீசி நிற்றல்.

iii) **சூரியகாந்திப்பூவின் சிறப்பு.**

- பொன் போன்ற நிறத்தினைக் கொண்டிருத்தல்.
- பொலிந்த தோற்றத்தினைக் கொண்டிருத்தல்.
- காண்பவர்கள் போற்றுகின்ற வடிவத்தைக் கொண்டிருத்தல்.
- மஞ்சள் குளித்து முகம் மினுக்கி மாயப்பொடி வீசி நிற்றல்.
- இவ்வுலகத்திலே தனக்கு இணையான ஒரு மலரின்றிக் காணப்படுதல்.

iv) **சூரியகாந்திப்பூவிற்கும் சூரியனுக்கும் இடையிலான தொடர்பு.**

கவிமணி இக்கவிதையிலே சூரியகாந்திப் பூவிற்கும் சூரியனுக்கும் இடையிலான தொடர்பினை மிக அற்புதமாகவெளிப்படுத்துகின்றார். சூரியனைக் காதலனாகவும் சூரியகாந்தியைக் காதலியாகவும் காட்டுகின்றார். வெயிலைக்கூடப் பொருட்படுத்தாமல் சூரியன் வரவிற்காக விண்ணோடு கண்ணாக சூரியகாந்தி இருப்பதாகச் சொல்கின்றார். மேலும் சூரியனை நோக்கித் தவம் இயற்றுவதாகவும் குறிப்பிடுகின்றார். சூரியன் காலையில் வருகின்ற போது சூரியகாந்தி மகிழ்ச்சியடைவதாகவும் மாலை அவன் செல்லுகின்ற போது மனம் வருந்துவதாகவும் குறிப்பிடுகின்றார். சூரியன் செல்லுகின்ற திசையை நோக்கிச் சூரியகாந்தி முகத்தைத் திருப்புவதாகவும் குறிப்பிடுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

V) **சூரியனின் சிறப்புக்களும் தாமரைப்பூ பெறும் முக்கியத்துவமும்.**

- சூரியகாந்தியினதும் தாமரையினதும் காதலனாகக் காட்டுதல்.

  **" ஆசை நிறைந்த உன் அண்ணலை நோக்கிட**

  **ஆயிரம் கண்களும் வேண்டுமோடி?..."** என்ற அடிகளினூடாக சூரியனது சிறப்பினை நாம் கண்டு கொள்கிறோம்.

- சூரியகாந்திப் பூவின் சிறப்புக்களைச் சொல்லும் கவிமணி அதன் பீத்தற் பெருமையையும் சொல்லத் தலைப்படுகின்றார். இதற்காகத் தாமரைப் பூவினைப் பயன்படுத்துகிறார். இதுமட்டுமன்றி மானிட வாழ்வியலை சொல்லுவதற்கும் கவிமணிக்குத் தாமரைப்பூ உதவுகிறது.
- சூரியனின் காதலி தாமரை என்று சொல்லுவார்கள்.
- மஞ்சள் குளித்து முகம் மினுக்கி மாயப்பொடி வீசி நிற்கும் சூரியகாந்தியைக் கண்டால் என் காதலன் மீது இவள் அன்பு செய்யத்தலைப்படுகின்றாளே என்று சூரியகாந்தி மீது தாமரைக்குக் கோபம் வருமா? அல்லது தன் காதலன் மீது அன்பு செய்யத்துணியும் சூரியகாந்தியின் அறியாமையை அல்லது இழிபுத்தியை கண்டு தாமரை சிரிக்குமோ? என்று கவிதையை அமைத்திருக்கின்றார்.

எனவே தாமரைப்பூவினூடாக ஒருபுறம் சூரியகாந்தியின் பீத்தற்பெருமையையும் இன்னொருபுறம் மானிட வாழ்வியலையும் சித்தரிக்கின்றார்.

VI) **காதல் வயப்பட்ட பெண்ணின் நிலை.**

- தன் காதலன் வரவிற்காக அவன் வரும் திசை நோக்கிக் கண்ணாக இருத்தல்.
- தலைவனுடைய வரவிற்காகத் தவம் கிடத்தல்.
- தனக்குக் கிடைக்கக்கூடிய துன்பங்களை எல்லாம் பொருட்படுத்தாமல் தலைவன் வரவிற்காய் ஏங்குதல்.
- தலைவனைக் காண்கின்ற போது மிக்க மகிழ்ச்சியடைதல்.
- தலைவன் பிரிந்து செல்லும் போது வேதனைப்படுதல்.
- தலைவனைப் பார்த்த வண்ணமே இருத்தல்.
- தலைவன் பெருமைகண்டு பெருமிதம் கொள்ளுதல்.
- தனக்கும் தலைவனுக்கும் இடையிலான பெயரில் உள்ள தொடர்பை எண்ணி மகிழ்ச்சியடைதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

vii) சூரியகாந்தியில் அகத்திணைக் கூறுகள்.

viii) அணிப்பிரயோகம்.

**தன்மைநவிற்சி அணி**

- பொன்னிறமுண்டு
- பொலிவுண்டு
- கண்டு உனைப் போற்ற இனிய வடிவமுண்டு

**உயர்வு நவிற்சி அணி**

- "இன்பம் அழித்திடும் பூ உலகத்து உனக்கு
யாரும் இணை இல்லை, இல்லையம்மா!"

**தற்குறிப்பேற்ற அணி**

- மஞ்சள் குளித்து முகம் மினுக்கி - இந்த
மாயப் பொடி வீசி நிற்கும் நிலை"

xi) கவிஞர் கூற வந்த விடயம்.

சூரியகாந்திப் பூவின் செயற்பாடுகளினூடாகக் காதல் வயப்பட்ட பெண்ணின் மனநிலையை கூறல்.

x) எடுத்துரைப்பு முறை.

- சூரியனைக் காதலனாகவும் சூரியகாந்தியைக் காதலியாகவும் உருவ -கித்தல்.
- சூரியகாந்திப்பூவின் அழகு, செயற்பாடுகள் என்பவற்றினூடாகக் காதல் வயப்பட்ட பெண்ணின் ஆழமான அன்பை வெளிப்படுத்தல்.
- அணிப்பிரயோகம்
- நகைச்சுவை உணர்வு
- சூரியகாந்தி, சூரியன், தாமரை என்பவற்றினூடாக மனித நடத்தை களை எடுத்துக் கூறுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டவன் நீதான்

**சுபத்திரன் (1935-1979)**

மட்டக்களப்பில் கந்தையா தெய்வானைப் பிள்ளைக்கு மகனாக 1935ஆம் ஆண்டு சுபத்திரன் பிறந்தார். இவரது இயற்பெயர் தங்கவடிவேல். இலங்கை முற்போக்கு அணியின் பாசறையில் வளர்ந்தவர்களில் இவர் முக்கியமானவர். பாட்டாளிகளின் கூட்டாளி. மாக்சிச கண்ணோட்டத்தில் பல கவிதைகளைப் படைத்தவர். இரத்தக்கடல் (1969), சுபத்திரன் கவிதைகள் (1997) ஆகியன இவரது கவிதைப் படைப்புக்களாகும்.

ஆளப்பிறந்த விவசாயி - இங்கு
அடங்கிக்கிடந்தானொரு நாளில்
கூழைப்பிசைந்தான் குடிசையிலே - அவன்
குறுகிக் கிடந்தான் கொள்கையிலே

நிலத்தையுழுவான் நிலத்தினிலே - தன்
நினைவு இழந்து சாகுமட்டும்
கலப்பையிழுக்கும் மாட்டுடனே - அவன்
காலங்கழித்தான் கண் கலங்கி

உண்பது முடுப்பதும் வயல்தனிலே - அவன்
உறங்கிக் கிடப்பதும் வயல்தனிலே
விண்தான் தனது கூரையென - ஐயோ
வியர்வை தன்னில் குளித்திடுவான்.

உழுபவருக்கு நிலமெல்லாம் - இங்கு
உருத்தா யாக்கிடச்சட்டங்கள்
நலிவு இன்றிச் செய்திடுவோம் - இந்
நல்லவர் தம்மை உயர்த்திடுவோம்

பண்ணை முறையில் பலநூறு - வயல்
பரப்பை உழுது உழைக்கட்டும்
திண்ணை தூங்கித்திரிபவர்கள் - அதைத்
தின்ன நினைத்தால் செருப்படிதான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டை வெட்டி களமாக்கி - அதைக்
கதிர்கள் கொட்டும் தலமாக்கும்
நாட்டின் இறைவன் விவசாயி - ஏன்
நன்றி மறந்தாய் முதலாளி

அன்னை நாட்டை காப்பவனே - அதைப்
பசியில் நின்று மீட்பவனே
அனைத்தும் நீதான் அமுதூட்டும் - எம்
ஆண்டவன் நீதான் நீ வாழ்க.

i) **கவிஞர் கூற வந்த விடயம்.**

உழவர்களினுடைய இன்றியமையாமையை அல்லது பெருமைகளை எடுத்துக்கூறுதலே இக்கவிதையின் உயிராகும். நாட்டின் இறைவன் என்றும் ஆண்டவன் நீ தான் என்றும் உழவர்களினுடைய பெருமையைச் சொல்கின்றார் கவிஞர். அதே நேரம் இக்கவிதையினூடாக உழவர்களினுடைய வறுமை நிலை, முதலாளிகளினுடைய சுரண்டல் தன்மை, பொதுவுடமைக் கருத்துக்கள் எனத் துணைக்கருத்துக்கள் இக்கவிதையில் வலியுறுத்தப்படுகின்றன.

ii) **விவசாயியின் பெருமைகள்.**

இக்கவிதையினூடாக சுபத்திரன் விவசாயிகளினுடைய பெருமைகளை அல்லது மாட்சிமைகளை எடுத்துச் சொல்கிறார். இந்த உலகத்தை ஆளப்பிறந்தவன் விவசாயி என்கிறார். மேனியானது வியர்வையில் குளிக்கும்படி பாடுபட்டு உழைக்கும் கடின உழைப்பாளியாக விவசாயியினைச் சொல்கிறார். விவசாயியினைப் பாடும் பொழுது நல்லவர் என்று குறிப்பிடுகின்றார்.

**"நல்லவர் தம்மை உயர்த்திடுவோம்..."** என்ற தொடரினூடாகக் கண்டு கொள்கிறோம்.

உழவனை காடுகளை எல்லாம் கதிர்கள் நிறைந்த வயல்களாகிய கோயில்கள் ஆக்குகின்ற தெய்வங்கள் ஆக்குகின்றார் சுபத்திரன்.

"காட்டைவெட்டி களமாக்கி - அதைக்
கதிர்கள் கொட்டும் தலமாக்கும்
நாட்டின் இறைவன் விவசாயி"

தாய்நாட்டைக் காப்பவனாகவும் பசியிலிருந்து மக்களை மீட்பவனாகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோருக்கும் அமுதை ஊட்டுகின்ற தெய்வமாகவும் உழவனைப்பாடுகின்றார் கவிஞர்.

**"அன்னை நாட்டை காப்பவனே – அதைப்**
**பசியில் நின்று மீட்பவனே**
**அனைத்தும் நீதான் அமுதூட்டும் – எம்**
**ஆண்டவன் நீ தான் நீ வாழ்க"**

iii) **கவிஞர் விவசாயிக்கு தெய்வநிலையைக் கொடுத்தமைக்கான காரணம்.**

➢ விவசாயியினுடைய உழைப்பினது பெறுமானத்தை அவர்களினது இன்றியமையாமையை கற்போருக்கு உணர்த்துவதற்காகவே தெய்வ நிலையைக் கொடுத்துப் பாடியுள்ளார்.

**"காட்டை வெட்டி களமாக்கி – அதைக்**
**கதிர்கள் கொட்டும் தலமாக்கும்**
**நாட்டின் இறைவன் விவசாயி"**

➢ இங்கு விவசாயியினுடைய கடின உழைப்பை, அவனுடைய அர்ப்பணிப்பை, மக்கள் மீது கொண்ட அவன் நேயத்தை வெளிப்படுத்துவதற்காக நாட்டின் இறைவன் என்கிறார் விவசாயி.

➢ உலக மக்களினுடைய பசியைப் போக்குகின்றவன் விவசாயி. விண்ணுலகத்தில் இருந்து தேவர்கள் எம்மைக் காப்பதைப் போல மண்ணுலகத்தில் இருந்து எங்களைக் காக்கின்றவன் விவசாயி. இதனை வெளிப்படுத்தவே எம் ஆண்டவன் நீ தான் நீ வாழ்க என்று பாடினார்.

iv) **விவசாயியினுடைய கடின உழைப்பு.**

இக்கவிதையினூடாகக் கவிஞர் விவசாயியினுடைய கடின உழைப்பை வெளிப்படுத்துகின்றார். தன்னுடைய நினைவுகள் இழந்து சாகும் வரையும் வயலிலும், மாடுகளோடும் அவன் வாழ்க்கை கழிந்தது என்று சொல்லும் பொழுது கடின உழைப்பை அல்லது அர்ப்பணிப்பை நாம் கண்டுகொள்கிறோம்.

**"நிலத்தை உழுவான் நிலத்தினிலே – தன்**
**நினைவு இழந்து சாகுமட்டும்**
**கலப்பை இழுக்கும் மாட்டுடனே – அவன்**
**காலம் கழித்தான் கண் கலங்கி"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் உண்பதோ, உடுப்பதோ, உறங்குவதோ வயலில் தான் என்கிறார் கவிஞர். இதனூடாக அவனது கடின உழைப்பை நாம் கண்டு கொள்கிறோம்.

**"வியர்வை தன்னில் குளித்திடுவான்"** என்ற தொடரினூடாக விவசாயியினுடைய கடின உழைப்பை அற்புதமாகச் சொல்கிறார் சுபத்திரன். தன்னுடைய கடின உழைப்பினால் காடுகளை எல்லாம் வெட்டிக் கதிர்கள் கொலிக்கின்ற கோயில்கள் ஆக்குகிறான்.

**v) விவசாயியினுடைய வறுமை நிலை.**

விவசாயியினுடைய பெருமைகளை, கடின உழைப்பினை எடுத்துக்கூறும் கவிஞர் இன்னொரு புறம் அவனது வறுமை நிலையையும் கூறத்தவறவில்லை.

**"அடங்கிக்கிடந்தான் ஒரு நாளில்**
**கூழைப் பிசைந்தான் குடிசையிலே – அவன்**
**குறுகிக் கிடந்தான் கொள்கையிலே"**

போன்ற தொடர்கள் அவனது வறுமையை, இயலாமையை வெளிப்படுத்துகின்றன. அவன் வாழ்ந்த இடத்தை குடிசை என்றும், உண்ட உணவைக் கூழ் என்றும் கவிஞர் கூறும் போது அவனது வறுமை நிலையை நாம் கண்டு கொள்கிறோம்.

உழுவதற்கு சொந்த நிலமின்றிக் காணப்பட்டிருக்கின்றான். முதலாளிகளால் சுரண்டப்பட்டிருக்கின்றான். கலப்பை இழக்கும் மாட்டோடு கண்கலங்கி அவன் காலம் கழிந்திருக்கிறது, என்றெல்லாம் கவிஞர் சொல்லும் போது விவசாயியினுடைய வறுமைநிலை மறைமுகமாக வெளிப்படுத்தப்படுகிறது.

**vi) முதலாளி வர்க்கத்திற்கெதிரான குரல்.**

முதலாளிகளை கவிஞர் நன்றி மறந்தவர்களாகக் காட்டுகின்றார்.

**"நாட்டின் இறைவன் விவசாயி – ஏன்**
**நன்றி மறந்தாய் முதலாளி"**

முதலாளிகளை சோம்பேறிகளாகவும் தொழிலாளிகளை சுரண்டிப் பிழைப்பவர்களாகவும் முதலாளிக்கு எதிராகப் போராட மக்கள் எழ வேண்டும் என்றும் வலியுறுத்துகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"திண்ணை தூங்கித் திரிபவர்கள் – அதைத்**
**தின்ன நினைத்தால் செருப்படி தான்.."**

**"உழுபவருக்கு நிலமெல்லாம் – இங்கு**
**உறுத்தாய் ஆக்கிடச் சட்டங்கள்**
**நலிவு இன்றிச் செய்திடுவோம் – இந்த**
**நல்லவர் தம்மை உயர்த்திடுவோம்"**

என்ற வரிகளும் முதலாளிகளுக் கெதிரான குரலாகவே அமைந்திருப்பதைக் காணலாம்.

vii) **விவசாயியின் வாழ்வை மேம்படுத்த கவிஞர் காட்டும் வழிவகைகள்.**

➢ உழுபவர்களுக்கே நிலம் எல்லாம் சொந்தம் என்ற சட்டத்தைக் கொண்டு வருதல்.

➢ கூட்டுப்பண்ணை முறையில் விவசாயத்தை மேற்கொள்வதற்கான வழிவகைகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.

➢ தொழிலாளர்களைச் சுரண்டிப்பிழைக்கின்ற முதலாளிகளுக்கு எதிரான போராட்டங்களில் ஈடுபட்டு உரிமைகளை வென்றெடுத்தல்.

viii) **விவசாயிகள் சமூகத்தில் எப்படி வாழவேண்டும் எனக் கவிஞர் வலியுறுத்து கின்றார்?**

➢ விவசாயிகள் இந்த உலகத்தை ஆழ வேண்டும்.

➢ நிலங்களுக்கு எல்லாம் சொந்தக்காரர்களாக விவசாயிகள் இருக்க வேண்டும். முதலாளிகளுக்கு அடிமைப்படாத, அவர்களை எதிர்த்து நிற்கக்கூடிய துணிதிறன் கொண்டவர்களாக இருக்கவேண்டும்.

➢ உயர்ந்த கொள்கைகளோடும் நல்ல வசதிகளோடும் அவர்கள் வாழ வேண்டும்.

➢ உழவர்களின் மாண்பினை உணர்ந்து எல்லோரும் அவர்களைப் போற்ற வேண்டும்.

ix) **கவிஞர் கையாண்டுள்ள உத்திகள் / எடுத்துரைப்பு முறைகள்.**

விவசாயிகளின் துயரம், கடின உழைப்பு, துயரைப் போக்குவதற்கான வழிவகைகள், பெருமைகள் என அனைத்தையும் திட்டமிட்டு ஒழுங்குமுறையில் வெளிப்படுத்தியுள்ளமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பவர்களுக்கு விளங்கக்கூடிய எளிமையான மொழிநடையைப் பயன்படுத்தி இருக்கும் அதே நேரம் உணர்ச்சி பூர்வமானவையாகவும் அமைந்திருத்தல்.

**"திண்ணை தூங்கித்திரிபவர்கள் – அதைத்**
**தின்ன நினைத்தால் செருப்படிதான்"**

ஓசைநயம்,

**"காட்டை வெட்டி களமாக்கி – அதைக்**
**கதிர்கள் கொட்டும் தலமாக்கும்**
**நாட்டின் இறைவன் விவசாயி – ஏன்**
**நன்றி மறந்தாய் முதலாளி"**

சில சொற்பதங்களினூடாக ஆழமான கருத்துக்களை வெளிப்படுத்தி நிற்றல்.

**திண்ணை தூங்கித் திரிபவர்கள்**
**கதிர்கள் கொட்டும் தலம்**
**நாட்டின் இறைவன்**

கவிதையைப் படிப்படியாக வளர்த்தெடுத்து உச்சநிலையிலே கொண்டு சென்று முடித்தமை.

# சம்பள நாள்

## குறிஞ்சித்தென்னவன் (1934-1998)

மலையகத்தில் ஹற்றன் நோர்வூட் பிரதேசத்தில் குறிஞ்சித்தென்னவன் பிறந்தார். பாடசாலைக்கல்வி ஐந்தாம் தரம் ஆயினும் பல்கலைக்கழக பேராசிரியர்கள் போற்றுமளவிற்கு கவிதைத் துறையில் நின்று நிலைத்தவர். 1977ல் இவரது முதல் கவிதைத் தொகுதி வெளிவந்தது. கவிச்சுடர், தமிழ்மணி, கலாபூஷணம் ஆகிய விருதுகளைப் பெற்றுள்ளார். மலையக மக்களின் வாழ்வியலே இவர் கவிதைகளின் உயிர். அந்த மக்களின் விடிவே இவர் இலட்சியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்தாந் திகதியில் சம்பளமாம், சின்னப்
        பையனுக்கோ, பெருங்கொண்டாட்டம்!
"மொத்தமாகச் சம்பளம் வாங்கிடுவா, அம்மா
        முழுசா ஒரு ரூபா தந்திடுவா என
சித்தம் நிரம்பிய ஆசையிலே, தன்
        தோழர் பலருக்கும் சொல்லி வைத்தான்!
முத்தம்மா சம்பளம் வாங்கி வந்தாள் - அவன்
        முதுகுல நாலு கொடுத்து வச்சாள்.

"வாழைப்பழம்... மிட்டாய் முறுக்கு.. வடை!
        வாங்குங்க! வாங்குங்க"! என்று இந்த
ஏழைங்க காசைப் பிடுங்கிட வேவந்த
        வியாபாரிகள் இடும் கூச்சல்களும்
ஊளை ஒழுக வாய் எச்சில்வடிய, தன்
        உள்ளத்திலேபெரும் ஆசையுடன் - அம்மா
சேலைமுந் தானையைப் பற்றிக்கொண்டேவரும்
        செந்தாமரையோ சிணுங்கிடுவாள்.

"சீவி முடிச்சி, சிரிக்கலைன்னா? நல்ல
        சிங்காரம் பண்ணி தளுக்கலைன்னா?
பாவிப் பயஅரைப் பேருபோட்டான்? அவன்
        பாடையிலேபோக, மாடாக என்
ஆவி துடிக்கச் சுமந்துவந்தும், தினம்
        அரைப்பேரு போட்டுல்ல வச்சிருக்கான்!
கேவி யழுது புலம்பிக்கொண்டேவரும்
        குப்பாயி நெஞ்சில் பெருநெருப்பு.

"காமாச்சிக்கு எம்பத் தஞ்சிரூவா அவ
        கையில வாங்கிட்டா பாத்தியாடி? சுத்த
சோமாறி வேலைக்குப்போகமாட்டா, போனா
        சொத்தவேலை, துப்புப் பட்டிடுவா!
ஏமாளி கந்தன் அவபுருசன் - அவ
        இழுத்த இழுப்புக்கு வளையுறானே! என
ரோமஞ் சிலிர்க்க வசைபாடும் சின்ன
        ருக்கு மணிக்கோ, வயித்தெரிச்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீட்டுப்பணத்த நான் கட்டுவேனா? பட்ட
சில்லறக்கடன அடைப்பேனா? அந்தச்
சேட்டுப்பய மலை போல வந்து பெருந்
தொல்லை கொடுப்பான் கடன்கேட்டு.
ஈட்டுக்கடையில் வச்ச நகையினை
இந்த மாசம் திருப்பலன்னா, ஏலம்
போட்டுடு வானாம், என்னசெய் வே னென
புலம்பும் வள்ளியொரு பக்கத்திலே.

"பள்ளிக்குடம் போகும் சின்ன மகளுக்கு
பாவாடை ரவிக்கை தைக்கவேணும்
வள்ளி, மகளின் சடங்குக்கு அஞ்சிரு
வா, வாச்சும் மொய்யா எழுதிடணும்
கொள்ளைக்கா ரப்பயலுத்த கடைக்கும்
கொடுத்திட னும் போன மாசக்கடன்"
உள்ளத்தில் எண்ணி அடுப்பருகில் சும்மா
உட்கார்ந் திருக்கிறாள் பாப்பாத்தி.

"நாட்டுக்குப் போயி குடிச்சிப்புட்டு, சில
நாதாறிப் பசங்களக்கூட்டிவந்து, கரு
வாட்டுக்கறிவேணும் என்று, என்னையிந்த
மனுசன் புடுங்கியே தின்னப்போறான்
வீட்டுல என்ன சொகத்தைக் கண்டேன்? இந்த
வெத்து மனுசனக் கட்டிக்கிட்டு?" என
நீட்டி முழக்கி வசை பாடும் சின்ன
நீலா வதிக்கோ பெருங் கோவம்.

சம்பள நாளிது வீட்டிலிருக்கிற
சந்தோஷமெல்லாம் பறந்திடும் நாள்!
வம்பும் தும்பும் பேசிடும் நாள்! இவர்
மண்டை யுடைந்திடும் நாளிதடா!
கம்புத்தடிகளைத் தூக்கிடும் நாள், பொலிஸ்
கச்சேரி, கோர்ட்டுக்குப்போயிடும் நாள்!
வெம்பியழுதிடும் பெண்களின் குரல்கள்
வீடுகளில் கேட்கும் நாளிதடா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

i) **இக்கவிதையினுடைய மையக்கருத்தை எடுத்துக்காட்டுக.**

மகிழ்வைக் கொடுக்க வேண்டிய சம்பள நாள் மலையக மக்களினுடைய வாழ்விலே எத்தகைய வேதனையைக் கொடுக்கிறது என்பதை இக்கவிதை வெளிப்படுத்துகின்றது. அதாவது சம்பள நாளிலன்று மலையக மக்களினுடைய எதிர்பார்ப்புக்கள், ஏமாற்றங்கள், உள்ளக் குமுறல்கள், உணர்வுகளையும் இக்கவிதை வெளிப்படுத்துகின்றது. கூடவே இக்கவிதை தோட்டங்களில் நிலவுகின்ற முறைகேடுகள், சீர்கேடுகளையும் வெளிப்படுத்தத் தவறவில்லை.

ii) **மலையகச் சிறுவர்களின் எதிர்பார்ப்புக்களும் ஏமாற்றங்களும்.**

மலையகச் சிறுவர்களினுடைய எதிர்பார்ப்புக்களையும் ஏமாற்றங் களையும் இக்கவிதை வெளிப்படுத்துகின்றது. முத்தம்மாவின் மகன் சம்பள நாளிலன்று தன்னுடைய தாய் தனக்கு ஒரு ரூபா தருவாள் என்று எதிர்பார்க்கின்றான். இதனைத் தன்னுடைய நண்பர்களுக்குக் கூடச் சொல்லி வைக்கின்றான். ஆனால் இந்தச் சிறுவனின் எதிர்பார்ப்பு நிறைவேறவில்லை. அது ஏமாற்றத்தில் முடிகிறது. சம்பளத்தைப் பெற்று வந்த முத்தம்மாவால் தங்களுடைய அடிப்படைத் தேவையைக்கூடப் பூர்த்தி செய்ய முடியவில்லை. மகனின் வற்புறுத்தலைத் தாங்க முடியாமல் பிள்ளைக்கு அடிக்கிறாள். பணம் எதிர்பார்த்தவனுக்கு அடி தான் மிஞ்சுகிறது.

சம்பள நாளன்று தாயோடு பட்டினத்திற்கு வருகிறாள் செந்தாமரை. நகரத்து வியாபாரிகளும் வாழைப்பழம், மிட்டாய், முறுக்கு, வடை என்று கத்துகிறார்கள். செந்தாமரையும் நினைக்கிறாள் அம்மா எனக்கு வாங்கித்தருவா என்று பிள்ளையின் எதிர்பார்ப்பு ஏமாற்றத்தில் முடிகிறது. ஏமாற்றத்தில் வீடு போகின்றாள்.

iii) **கவிதைக்கும் தலைப்பிற்கும் இடையிலான பொருத்தப்பாடு.**

குறிஞ்சித்தென்னவன் இக்கவிதைக்குச் சம்பளநாள் என்று தலைப்பிட்டது மிகவும் பொருத்தப்பாடு உடையதாகும். மலையக மக்களின் சம்பள நாளைக் கருப்பொருளாகக் கொண்டே இக்கவிதை எழுதப்பட்டுள்ளது. மலையக மக்களுடைய எதிர்பார்ப்புக்கள் ஏமாற்றங்கள், உள்ளக்குமுறல்கள், உணர்வுகள், அவலங்கள் இக்கவிதையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசப்பட்டுள்ளன. இவ்வகையில் பார்க்கும் போது சம்பளநாள் என்ற தலைப்பு மிகவும் பொருத்தப்பாடுடையதாகக் காணப்படுகின்றது.

**iv) தோட்டங்களில் நிலவிய முறைகேடுகள்.**

சம்பள நாளிலன்று மலையகப் பெண்களினுடைய உள்ளக்குமுறல்களை வெளிப்படுத்தும் இக்கவிதை அவர்களின் உள்ளக்குமுறல்களினூடாகத் தோட்டங்களில் நிலவிய முறைகேடுகளை வெளிப்படுத்துகிறது. சீவி முடிஞ்சும், சிரிச்சும், சிங்காரம் பண்ணியும் கங்காணி, கணக்குப்பிள்ளையின் மனங்களில் இடம்பிடித்தும் ஒரு பெண்கள் கூட்டம் உழைத்திருக்கிறது. இதே நேரம் பாடுபட்டு உழைக்கும் பல மலையகப்பெண்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

**"பாவிப் பயஅரைப் பேரு போட்டான்? அவன்**
**பாடையிலே போக, மாடாக என்**
**ஆவி துடிக்கச் சுமந்து வந்தும், தினம்**
**அரைப் பேரு போட்டுல்ல வச்சிருக்கான்"**

என்ற குப்பாயியின் உள்ளக்குமுறல் தோட்டத்தில் நிலவிய முறைகேட்டை எமக்கு வெளிப்படுத்துகிறது. வேலைக்கு ஒழுங்காகப் போகாத, போனாலும் ஒழுங்காக வேலை செய்யாத காமாச்சி எண்பத்தைந்து ரூபா சம்பளத்தைப் பெறுகிறாள். பாடுபட்டு உழைத்தும் அந்தப்பணம் எமக்கு கிடைக்கவில்லையே என்று தன் வயித்தெரிச்சலைக் கொட்டுகிறாள் ருக்மணி. ஒழுங்கற்ற நடத்தைக் கோலத்தால் சம்பளத்தைப் பெறுகிறாள் காமாச்சி. இங்கேயும் தோட்டத்தில் நிலவுகின்ற முறைகேடு வெளிப்படுத்தப்படுகிறது.

**v) உழைப்புச் சுரண்டல்.**

உழைப்பாளியினது உழைப்பு மதிக்கப்படாதவிடத்து உழைப்புச் சுரண்டப்படுவதாகக் கூறப்படுகிறது. இக்கவிதையிலும் மலையகப் பெண்களினுடைய உழைப்புச் சுரண்டப்படுவதை இனங் காண்கிறோம். உயிர் பதைக்கக் கொழுந்துகளைப் பறித்து தலையிலே சுமந்து கொண்டு வருகின்ற குப்பாயிக்கு அரைப்பேரு போடப்படுகிறது. தோட்டங்களிலே கங்காணிகளுக்கும் கணக்குப்பிள்ளைகளுக்கும் ஒத்து இசைந்து நடப்பவர்களுக்கு நல்ல சம்பளம் கிடைக்கிறது. ஆனால் பாடுபட்டு உழைக்கிற மலையகப்பெண்கள் உழைப்புக்கு ஏற்ற ஊதியமின்றி துன்பப்படுகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

vi) **பிள்ளைகளின் எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்ய முடியாத பெற்றோர்களினுடைய நிலை**

மலையகக் குழந்தைகளினுடைய எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்ய முடியாத பெற்றோர்களினுடைய நிலை இக்கவிதையிலே வெளிப்படுத்தப்படுகின்றது. சம்பள நாளிலன்று அம்மா ஒரு ரூபா தருவாள் என்று முத்தம்மாவின் மகன் எதிர்பார்க்கின்றான். ஆனால் அந்த தாயினால் மகன் எதிர்பார்த்த ஒரு ரூபாயைக் கொடுக்க முடியவில்லை. நகரத்துக்குப் பொருள் வாங்கச் செல்லும் தாயோடு செந்தாமரையும் செல்கிறாள். அம்மா தனக்கு விருப்பமான பொருட்களை வாங்கித்தருவாள் என்று எதிர்பார்க்கிறாள். ஆனால் செந்தாமரை என்ற அந்தச் சிறுமியினுடைய எதிர்பார்ப்புக்களை பெற்ற தாயால் பூர்த்தி செய்ய முடியவில்லை. பள்ளிக்கூடத்துக்குச் செல்கின்ற சின்ன மகளுக்குப் பாவாடை, சட்டை கூட தைத்துக் கொடுக்க முடியாது ஏங்குகிறாள் பாப்பாத்தி என்ற ஒரு தாய். இவ்வாறாக மலையகக் குழந்தைகளினுடைய எதிர்பார்ப்புக்களைப் பூர்த்தி செய்ய முடியாத பெற்றோரின் நிலையை இக்கவிதையில் காண்கிறோம்.

vii) **வியாபாரிகளின் சுரண்டல் தன்மை (கடை முதலாளிகளின் சுரண்டல்).**

சம்பள நாளன்று மலையகப் பெண்கள் படும் அவலங்களைப் பேசுகின்ற இக்கவிதை இன்னொரு புறம் வியாபாரிகளின் அல்லது கடை முதலாளிகளினுடைய சுரண்டல்களினையும் பேசுகிறது. வியாபாரிகள் பற்றி குறிஞ்சித்தென்னவன் பாடும் போது "ஏழைங்க காசை பிடுங்கிடவே வந்த வியாபாரிகள்" என்று கூறுகின்றார். இதிலிருந்து மலையக ஏழை மக்களைச் சுரண்டி இவர்கள் பிழைத்திருக்கிறார்கள் என்பதை நாம் கண்டு கொள்கிறோம்.

மலையகப் பிரதேசத்திலே ஈடு (அடகு/அடைவு) வைக்கும் கடைகள் இன்று கூட அதிகமாகக் காணப்படுகின்றன. இக்கடை முதலாளிகளும் ஏழைகளைச் சுரண்டி இருக்கிறார்கள். ஈடு வைத்துப் பெற்ற கடனைத் திருப்பிக் கொடுக்கவில்லை என்றால் நகையைத் தம் வசப்படுத்திக் கொள்வார்கள். இக்கொடுமையைப் பின்வருமாறு பாடுகின்றார் கவிஞர்.

**"ஈட்டுக்கடையில் வச்ச நகையினை**
**இந்த மாசம் திருப்பலன்னா ஏலம்**
**போட்டுடு வானாம்,...."**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனப் புலம்புகிறாள் வள்ளி. முதலாளிகளின் சுரண்டலை வெளிப்படுத்த வந்த கவிஞர் கடைக்காரர்களைக் கொள்ளைக்காரர்கள் என்கிறார். மக்களைச் சுரண்டிக் களவெடுப்பவர்களாகக் கடைமுதலாளிகளை காட்டுகிறார்.

**"கொள்ளைக்கார பய ஒத்த கடைக்கும்**
**கொடுத்திடனும் போன மாசக்கடன்"**

## viii) மலையக மக்களின் வாழ்வியல் அம்சங்கள்.

மலையக மக்களினுடைய பல்வேறுபட்ட வாழ்வியல் அம்சங்களும் இக்கவிதையினூடாக வெளிப்படுத்தப்படுகின்றது. தோட்டங்களிலே வேலை செய்து வருவாய் பெறுவதும், சீட்டுப்பிடித்து பணத்தைப் பெருக்குதலும் என அவர்களின் பொருளாதார நடவடிக்கைகள் பேசப்பட்டுள்ளன.

மலையக மக்களின் வாழ்க்கையின் ஒரு கூறாகிய அல்லது அவர்களின் வாழ்க்கையோடு இணைந்து கொண்ட வறுமை பற்றியும் வறுமைக்கு எதிரான அவர்களினுடைய போராட்டம் பற்றியும் இக்கவிதை பேசுகிறது.

நகை ஈடுவைத்து பணம் பெறுதல், கடைகளில் கடன் பெறுதல் போன்ற விடயங்கள் பேசப்படுகின்றன.

பண்பாடு சார்ந்த விடயங்களும் இக்கவிதையில் பேசப்பட்டுள்ளன. சிறுமி ஒருத்தி பூப்படையும் போது அதனைச் சடங்காகச் செய்வது இங்கு கூறப்பட்டுள்ளது. சடங்கு வீட்டிற்குச் செல்பவர்கள் பணத்தை அன்பளிப்புச் செய்வது பற்றியும் இக்கவிதை பேசுகிறது.

**"வள்ளி, மகளின் சடங்குக்கு அஞ்சிரு**
**வா, வாச்சும் மொய்யா எழுதிடனும்"**

பாடசாலைக்குச் சிறுமிகள் பாவாடை, ரவிக்கையோடு சென்ற பண்பாட்டு அம்சத்தை இக்கவிதை சொல்கிறது.

**"பள்ளிக் குடம் போகும் சின்ன மகளுக்கு**
**பாவாடை ரவிக்கை தைக்க வேணும்"**

என்ற அடிகள் மூலம் கண்டு கொள்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ix) இக்கவிதையில் மலையகப் பெண்களின் துன்பநிலை.**

சம்பள நாள் என்ற இக்கவிதையானது சம்பள நாளன்று மலையகத் தோட்டப் பெண்கள் படுகின்ற அவலங்களைப் பேசுகிறது. இவ் அவலங்களை நாம் பல்வேறு கோணங்களிலே பார்க்க முடியும்.

**அ) தாம் பெற்ற பிள்ளைகளினுடைய எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்ய முடியாத அவலநிலையை இக்கவிதை பேசுகிறது**

முத்தம்மாவால் தன் மகனுக்கு ஒரு ரூபாவைக் கொடுக்க முடியவில்லை. செந்தாமரைக்கு விருப்பமான பொருட்களை அவள் தாயால் வாங்கிக் கொடுக்க முடியவில்லை. மகளுக்குப் பாவாடை, ரவிக்கை வாங்கிக் கொடுக்க பாப்பாத்தியால் முடியவில்லை. இப்படிப்பட்ட பெண்களின் அவலநிலையை இக்கவிதையில் காண்கிறோம்.

**ஆ) பெற்றுக்கொண்ட சம்பளத்தை வைத்துத் தம்முடைய பல்வேறு தேவைகளையும் பூர்த்தி செய்ய முடியாத அவலநிலையை இக்கவிதை பேசுகிறது.**

கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாமல் ஈடு வைத்த நகையை மீட்க முடியாமல், தங்களது தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாமல் பெண்கள் துன்பப்படுவதை இக்கவிதையில் காண்கிறோம்.

**இ) தம் உழைப்பிற்கேற்ப ஊதியம் கிடைக்கவில்லையே என்று பெண்கள் படும் துன்பத்தையும் இக்கவிதையில் காண்கிறோம்.**

சீவி முடிச்சு, சிரிச்சு, சிங்காரம் பண்ணி சிலர் முழுச்சம்பளத்தைப் பெறுவதாகவும் பாடுபட்டு உழைப்பதற்கேற்ற வருவாய் தமக்குக் கிடைக்கவில்லை என்றும் குப்பாயி, ருக்மணி போன்றவர்கள் துன்பப்படுகிறார்கள்.

**ஈ) கணவனுடைய கொடுமையினாலும் சம்பளநாளன்று குடித்துவிட்டு சண்டைகள் பிடிப்பதனாலும் அதனால் வரும் விபரீதங்களாலும் இவற்றை எல்லாம் நினைத்துத் துன்பப்படு கிறார்கள் மலையகப் பெண்கள். சம்பள நாள் பெண்களின் வாழ்க்கையிலே எவ்வளவு அவலம் நிறைந்தது என்பதைக் கவிதையின் நிறைவிலே கவிஞர் வெளிப்படுத்துகின்றார்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"சம்பள நாள் இது வீட்டில் இருக்கிற**
**சந்தோஷ மெல்லாம் பறந்திடும் நாள்............**
**..........................................................**
**..........................................................**
**வேம்மியழுதிடும் பெண்களின் குரல்கள்**
**வீடுகளில் கேட்கும் நாளிதடா"**

x) **ஆணாதிக்கமும் ஆண்களின் கையாலாகாத்தனமும்.**

சம்பளநாள் என்ற இக்கவிதையானது குடும்பங்களில் ஆண்கள் செலுத்தும் ஆதிக்கத்தை, ஆதிக்கத்தின் காரணமாகச் செய்கின்ற கொடுமைகளை வெளிப்படுத்துகின்றது. நீலாவதியினுடைய கணவன் நாட்டிற்குப் போய்க் குடிக்கிறான். பொறுப்பற்றவர்களையும் வீட்டிற்கு அழைத்துக் கொண்டு வந்து கருவாட்டுக்கறி வேண்டும் என்று கேட்டுத் துன்பப்படுத்தப் போகிறானே என்று மனைவி ஏங்குகிறாள். இங்கே ஆணாதிக்கச் சூழலை நாம் தரிசிக்கிறோம்.

**"வீட்டுல என்ன சொகத்த கண்டேன்? இந்த**
**வெத்து மனுசன கட்டிக்கிட்டு?"** என்று நீலாவதி கூறுமிடத்து ஆணாதிக்கத்தினையும்,

**"ஏமாளி கந்தன் அவ புருசன் – அவ**
**இழுத்த இழுப்புக்கு வளையுறானே..."**

என்று ருக்மணி தன்னுடைய வயித்தெரிச்சலைக் கொட்டு மிடத்து ஆண்களின் கையாலாகத்தன்மையையும், ஏமாளித்தனத்தையும், பொறுப்பற்ற தன்மையையும் நாம் இனங்கண்டு கொள்கிறோம்.

xi) **மலையகப் பெண்களின் உள்ளக்குமுறல்கள்.**

சம்பள நாள் என்ற இக்கவிதையானது மலையகப்பெண்களின் உள்ளக்குமுறலை வெளிப்படுத்துகின்றது. சில பெண்கள் சீவி, முடிச்சு, சிரிச்சு, சிங்காரம் பண்ணி உழைக்கிறார்கள் என்பதையும் தாங்கள் பாடுபட்டு உழைத்தும் தங்களுக்கு உழைப்பிற்கேற்ற வருமானம் கிடைக்கவில்லை என்பதையும் எண்ணிப்பார்க்கின்ற போது மலையகப் பெண்களினுடய உள்ளம் குமுறுகிறது.

**"பாவிப் பயஅரைப் பேரு போட்டான்? அவன்**
**பாடையிலே போக..."**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"ஏமாளி கந்தன் அவ புருசன் – அவ**
**இழுத்த இழுப்புக்கு வளையுறானே..."**

என வரும் வார்த்தைகள் பெண்களின் உள்ளக் குமுறல்களால் விழைந்தவை ஆகும்.

ஒருபுறம் கிடைக்கும் சம்பளத்தை வைத்துக்கொண்டு அவர்களால் தங்கள் தேவைகளைப் பூர்த்தியாக்க முடியவில்லை. இன்னொருபுறம் கணவன்மார்களது கொடுமைகள், இதனால் பிறக்கின்ற உள்ளக் குமுறல்கள் கணவனையே வசை பாட வைக்கிறது.

**"வீட்டுல என்ன சொகத்த கண்டேன்? இந்த**
**வெத்து மனுசன கட்டிக்கிட்டு?"** என்று தனது உள்ளக்குமுறல்களை வெளிப்படுத்துகின்றார்.

## xii) உத்திகள்.

➢ சம்பளநாள் என்ற கவிதை மலையகப் பிரதேசத்தைக் களமாகக் கொண்டது. எனவே கவிஞர் மலையகப் பிரதேசப் பேச்சுவழக்குச் சொற்களைப் பயன்படுத்தி உள்ளார். இது வாசகர்கள் கவிதையை புரிதலுக்குப் பெரிதும் துணை செய்கிறது.

**பாவிப்பய, அரைப்பேரு போட்டான், சோமாறி, சடங்கு, ரவிக்கை, மொய்.**

➢ நடைமுறைச் சம்பவங்களினூடாக அல்லது யதார்த்தத்தினூடாகத் தான் கூறவந்த கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளமையும் ஒரு சிறப்பம்சமாகும்.

➢ காசுகேட்ட மகனுக்கு அடித்தல்

➢ குடித்து விட்டு வந்து கருவாட்டுக்கறி கேட்டல்

➢ சம்பள நாளன்று சண்டைபிடித்து பொலிஸ், கச்சேரி, கோட்டுக்கு போதல்.

➢ தான் கூறவந்த கருத்துக்களை வெளிப்படுத்த பாத்திரங்களைப் படைத்துள்ளமையைக் குறிப்பிடலாம்.

**உ+ம் : செந்தாமரை, குப்பாயி, ருக்மணி, வள்ளி, முத்தம்மா, பாப்பாத்தி, காமாச்சி,** நீலாவதி

➢ இக்கவிதையானது கவிக்கூற்றாக அமையாது பாத்திரங்களினுடைய வெளிப்பாடாக அமைந்திருக்கின்றமையும் ஒரு சிறப்பம்சமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதையின் தலைப்பிற்கேற்ற வகையில் கவிதையின் கருப்பொருள் அமைந்திருக்கின்றமையும் சிறப்பம்சமாகும்.

xiii) **இக்கவிதையினுடைய மொழிநடை.**

- மலையகப் பிரதேச வழக்குச் சொற்கள் பயன்படுத்தப்பட்டமை.
- ஓரளவுக்கு வாசகர்களுக்கு அல்லது கற்பவர்களுக்கு விளங்கக்கூடிய எளிமையான மொழிநடை.
- பாத்திரங்களின் உணர்வுகளை வெளிப்படுத்தும் மொழிநடை.

**"ஏமாளி கந்தன் அவபுருசன் – அவ**
**இழுத்த இழுப்புக்கு வளையுறானே**
**"பாவிப் பய அரைப் பேரு போட்டான்? அவன்**
**பாடையிலே போக"**

xiv) **அநீதிகள்.**

- ஏழைகளுடைய உழைப்பை வியாபாரிகள் சுரண்டுதல்.
- கணக்குப்பிள்ளை, கங்காணி போன்றவர்கள் தமக்கு ஒத்து இசைந்து நடப்பவர்களுக்குச் சலுகைகளை வழங்குதல்.
- பாடுபட்டு உழைப்பவர்களுக்கு அவர்களுடைய உழைப்புக்கு ஏற்ப ஊதியம் கிடைக்காமை.

xv) **மலையகப்பிரதேச பேச்சுவழக்குச் சொற்கள்.**

- பாடை - இறந்த பின் உயிரற்ற சடலத்தை மயானத்திற்குக் கொண்டு செல்லப் பயன்படும் பொருள்.
- சோமாறி - சோம்பேறி
- சேட்டுப்பயல் - வட்டிக்கு பணத்தைக் கொடுத்து அறவிடுவதற்கு வீடுகளுக்கு இவர்கள் வருவார்கள். இவர்களை சேட்டு என்று அழைப்பார்கள். இவர்கள் ஆப்கானிஸ்தான், வட இந்தியா போன்ற இடங்களிலிருந்து வட்டிக்கு பணம் கொடுப்பவர்கள்.
- ஈட்டுக்கடை - அடகு வைக்கும் கடை
- ரவிக்கை - மேற்சட்டை
- சடங்கு - பூப்புனித நீராட்டு விழா
- மொய் - சடங்கு, திருமண வீடுகளுக்கு பணமாக வழங்கப்படும் அன்பளிப்பு
- ஒத்தக்கடை - ஒரு கடை
- நாடு - கிராமப்புறம்/நகர்ப்புறம்
- நாதாரிப்பசங்க - பொறுப்பற்றவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாடு மாடு என்று பல ஏசி...

## முருகையன் (1935 - 2009)

ஈழத்து நவீன கவிதையின் மும்மூர்த்திகளாக மஹாகவி, நீலாவணன், முருகையன் ஆகிய மூவரையும் கொண்டாடுவர். தென்மராட்சி கல்வயலில் பிறந்தவர். தந்தை ராமுப்பிள்ளை தாயார் செல்லம்மா. கவிதை, பா நாடகம், நாடகம், மொழிபெயர்ப்பு எனப் பல்துறைகளிலும் ஆற்றல்மிக்கவர். 1995ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கௌரவ கலாநிதிப்பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது. 2009 ஆம் ஆண்டு இலங்கை அரசின் உயரிய இலக்கிய விருதான சாகித்திய இரத்தினம் என்ற விருது இவருக்கு வழங்கி கௌரவிக்கப்பட்டது.

மாடு மாடு என்று பல ஏசி
திட்டிக்கொட்டித் துரத்தி விரட்டிச்
சாமம் வரைக்கும் சாறு பிழிந்து
சக்கை வாங்குவீர்கள் பொடியனை
வீட்டு வேலைக்காரப் பொடியனை
'மாடுகள்' தங்கள் வாய்நுரைதள்ள
மூசி மூசிக்களைக்காவிட்டால்...
உங்கள் வீட்டில் உலைகள் கொதிக்குமோ?
பொடியனின் தமையனும் தாயும் தந்தையும்
மாமனும் மாமியும் மச்சான் காரனும்
உடம்பைப்பிழிய ஒருப்படாதிருந்தால்
மலைமுகடுகளில், தேயிலை வளருமோ?
வங்கியில் எல்லாம் காசு புரளுமோ?
ஐந்து நட்சத்திரக்ஹோட்டலில் அமர்ந்து
நண்டைக்கடித்து விறண்டி சுவைத்த பின்
புகையினை ஊதும் இளைய மருமகள்
நோன்மதி நாட்களில், திலக்கா எனப்படும்
இளைஞரின் அருகில் இருந்து கொஞ்சவும்
கண்இமை செருகிக்கனவில் ஆழவும்
உச்சக்குரலில் ஓசை புறப்பட
எச்சில் வாயால் இராகம் இழுக்கவும்
மச்சில் வாழவும் வசதிகள் வாய்க்குமோ?
மாடு மாடென ஏசுகிறீர்கள்
மாடும் கயிறுகள் அறுக்கும்
ஆடவர், மகளிர் அது செய்யாரோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**i) இக்கவிதையில் கவிஞர் கூறவந்த விடயம்.**

தொழிலாளர்களுடைய உழைப்பையும் அதேவேளை அவர்களுக்கு இழைக்கப்படுகின்ற அநீதிகளையும் கவிதையிலே வெளிப்படுத்துகிறார் கவிஞர். கூடவே தொழிலாளர்கள் மீது கொண்ட அனுதாபத்தினையும் வெளிப்படுத்துகின்றார். தொழிலாளர்களை அடிமைகளாக எண்ணாது அவர்களை மனிதர்களாக மதிக்க வேண்டும். தொழிலாளர்களின் கடின உழைப்புத்தான் முதலாளிகளின் உல்லாச வாழ்க்கைக்கு ஆதாரம் என்பதை வெளிப்படுத்திய கவிஞர், தொழிலாளர்கள் ஒரு நாள் புரட்சி செய்யக்கூடும் என்பதையும் கூறத்தவறவில்லை.

**"மாடு மாடென ஏசுகிறீர்கள்**
**மாடும் கயிறுகள் அறுக்கும்**
**ஆடவர், மகளிர் அது செய்யாரோ?"**

**ii) தொழிலாளர்களின் கடின உழைப்பு தான் முதலாளிகளின் உல்லாச வாழ்க்கைக்கும் பொருளாதார மேம்பாட்டிற்கும் ஆதாரம். என்பதைக் கவிஞர் வலியுறுத்தும் விதம்.**

வேலைக்காரர்கள் வாய் நுரை தள்ள மூசி மூசிக் களைக்க வேலை செய்யாவிட்டால் முதலாளிகளின் வீட்டிலே உலை கொதிக்குமோ? எனக் கேட்கிறார். தொழிலாளி இல்லை என்றால் முதலாளிக்கு உணவு இல்லை எனக் கவிஞர் கூறுகிறார்.

**"மாடுகள் தங்கள் வாய் நுரை தள்ள**
**மூசி மூசிக் களைக்கா விட்டால்**
**உங்கள் வீட்டில் உலைகள் கொதிக்குமோ?"**

வங்கிகளில் எல்லாம் காசுகள் புரள்வதற்கும் மலைமுகடுகளில் எல்லாம் தேயிலை வளர்வதற்கும் தோட்டத் தொழிலாளர்களின் அர்ப்பணிப்பான உழைப்பே காரணம் என்கிறார் கவிஞர். முதலாளிகள் ஐந்து நட்சத்திரக் கோட்டலில் இன்பக்கடலில் மிதப்பதற்கும் படுக்கையைப் பகிர்ந்து கொள்வதற்கும் ஏழைத் தொழிலாளர்களின் கடின உழைப்புத் தான் காரணம் என்கிறார் முருகையன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iii) **தொழிலாளர்கள் அடிமைகளாக நடத்தப்படல்.**

இக்கவிதையிலே தொழிலாளர்கள் அடிமைகளாக நடத்தப்படும் நிலையினை, முதலாளிகள் தொழிலாளர்களை மாடு மாடு என்று ஏசுவதிலும், திட்டுவதிலும், துரத்துவதிலும், விரட்டுவதிலும் சாமம் வரைக்கும் அவர்களைச் சாறாகப் பிழிந்து வேலை வாங்குவதிலும் இருந்து வெளிப்படுத்துகின்றார் நம் கவிஞர். இது முதலாளி வர்க்கத்தின் அதிகாரச் செருக்கினை வெளிப்படுத்துகின்றது.

**"மாடு மாடு என்று பல ஏசி,**
**திட்டிக் கொட்டித் துரத்தி விரட்டிச்**
**சாமம் வரைக்கும் சாறு பிழிந்து**
**சக்கை வாங்குவீர்கள் பொடியனை"**

iv) **எடுத்துரைப்பு முறை / சொல்லும் விதம்.**

- முருகையன் தான் சொல்ல வந்த விடயத்தை வாசகர்களுக்கு வெளிப் படுத்துவதற்காகப் பல்வேறு உத்திகளைக் கையாண்டிருக்கக் காண்கிறோம்.
- கவிதையின் கருப்பொருளுக்கேற்ப தலைப்பிட்டமை ஒரு உத்தியாகும்.
- கவிதையினூடாக முதலாளி வர்க்கத்தினுடைய ஆதிக்கத்தை வெளிப்படுத்தித் தான் சொல்ல வந்த விடயங்களை வாசகர்களின் உள்ளத்திலே தொற்ற வைத்தமை இன்னொரு கவித்துவமாகும்.

  "மாடு மாடு.."
- ஓசைச்சிறப்பு

  **"உச்சக் குரலில் ஓசை புறப்பட**
  **எச்சில் வாயால் இராகம் இழுக்கவும்**
  **மச்சில் வாழவும் வசதிகள் வாய்க்குமோ?"**
- "மாடும் கயிறுகள் அறுக்கும்" எனப் பொருத்தமான குறியீட்டினைப் பயன்படுத்தியமை சிறந்த உத்தியாகும்.
- தொழிலாளர்கள் மீது வாசகர்களுக்கு அனுதாபத்தை ஏற்படுத்துகின்ற மொழிப்பிரயோகம் மற்றுமொரு உத்தியாகும்.
- முதலாளிகளினுடைய உல்லாச வாழ்க்கையினையும் தொழிலாளர் களுடைய கடின உழைப்பையும் சில காட்சிகளினூடாக வெளிப் படுத்தியமை.
- வாசகர்களுக்கு இலகுவில் விளங்கக்கூடிய எளிமையான மொழிநடை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"திட்டிக் கொட்டி துரத்தி விரட்டி
சாமம் வரைக்கும் சாறு பிழிந்து
சக்கை வாங்குவீர்கள் பொடியனை"

- பிறமொழிச் சொற்கள் கையாளப்பட்டுள்ளமை.
  ஹோட்டல்
  விறண்டி
- தொழிலாளர்கள் புரட்சி செய்யக்கூடும் என உணர்ச்சி பூர்வமாக வலியுறுத்தியுள்ளமை சிறந்த உத்தியாகும்.

  "மாடு மாடு என ஏசுகிறீர்கள்
  மாடும் கயிறுகள் அறுக்கும்
  ஆடவர், மகளிர் அது செய்யாரோ?"
- முதலாளிகளிடம் வினாக்களைத் தொடுப்பதைப் போன்று வினாக்களை எழுப்பி வாசகர்களின் சிந்தைனையைத் தூண்டிக் கருப்பொருளை விளங்க வைத்திருக்கின்றமை ஒரு உத்தியாகும்.

**v) வசதி படைத்தவர்களின் வாழ்வியல் / அலங்கோலங்கள்.**

ஐந்து நட்சத்திரக் ஹோட்டலுக்குச் செல்வதும் அங்கே அமர்ந்து நண்டை உண்பதும், விறண்டி சுவைப்பதும், புகையிலை ஊதுவதும் இவர்கள் தங்கள் பழக்கமாகக் கொண்டிருந்தனர். உதாரணமாகப் பணக்கார வீட்டு மருமகள் இத்தகைய அலங்கோலமான வாழ்க்கையை வாழ்ந்ததோடு மட்டுமன்றி திலக்கா எனப்படும் இளைஞனின் அருகிலிருந்து கொஞ்சுவதும் இருவரது பார்வையும் ஒன்றோடு ஒன்று பின்னும் வண்ணம் இன்பக்கனவில் திளைப்பதும் உச்சக்குரலிலே ஓசை உண்டாகும் படியாகத் தமது வாய்களினால் பாட்டிசைப்பதும் படுக்கையைப் பகர்வதும் என உல்லாச வாழ்க்கை நடத்தினர் என்று வசதி படைத்தவர்களின் வாழ்வியல் அலங்கோலங்களை எடுத்துக்காட்ட விழைகிறார் கவிஞர்.

**vi) இக்கவிதையில் மலையகத் தோட்டத்தொழிலாளர் சமூகத்தின் வாழ்வியல் அம்சங்கள்.**

மலையகத்துத் தோட்ட தொழிலாளர் சமூகத்திலுள்ள குடும்பங்களில் சிறுவன் தொடக்கம் அண்ணனும் தாயும் தந்தையும் மாமனும் மாமியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மச்சானும் என முதலாளிகளிடம் சென்று தம்மை அர்ப்பணித்து வேலை செய்கின்றார்கள். உடலை வருத்தி வேலை புரிகின்றார்கள். மலை முகடுகளிலெல்லாம் தேயிலையைச் செழிப்பாக வளரச் செய்கின்றார்கள். முதலாளி வர்க்கத்தின் வங்கிகளில் எல்லாம் காசுகள் புரள்வதற்கு வழிவகுக்கின்றார்கள். தங்களுடைய வாய் நுரைகள் தள்ளத்தள்ள மூசி மூசி உழைக்கின்றார்கள். முதலாளிகளின் வீடுகளில் உலைகள் கொதிப்பதற்குக் காரணமாகிறார்கள். இத்தனை கருமங்களை ஆற்றுகின்ற தொழிலாளர்கள் அரக்கர் குணம் கொண்ட முதலாளிகளினால் மாடு மாடு என்று பல தீய வார்த்தைகளினால் ஏசப்படுகின்றவர்களாகவும் திட்டிக் கொட்டித் துரத்தி விரட்டி சாமம் வரைக்கும் வேலை செய்கின்ற அவலம் நிறைந்த வாழ்க்கை வாழுகின்றவர்களாகவும் காணப்படுகின்றார்கள். எனத் தொழிலாளர்களுடைய வாழ்வியல் அம்சங்களைப் படம்பிடித்து காட்டுகிறார் முருகையன்.

vii) தொழிலாளர்கள் புரட்சி செய்யக்கூடும் என்பதைக் கவிஞர் வலியுறுத்தும் விதம்.

முதலாளிகளினுடைய ஆதிக்கத்தை எடுத்துக்காட்டி அதற்கூடாகத் தொழிலாளர்கள் நசுக்கப்படுவதை வலியுறுத்திய கவிஞர் இந்நிலை தொடராது தொழிலாளர்கள் ஒரு நாள் புரட்சி செய்வார்கள் என்பதனை பொருத்தமான குறியீட்டு உத்தியினைப் பயன்படுத்தி நிலைநிறுத்து கின்றார். இதனை

**"மாடு மாடு என ஏசுகிறீர்கள்**
**மாடும் கயிறுகள் அறுக்கும்**
**ஆடவர், மகளிர் அது செய்யாரோ"** என்ற அடிகளின் மூலம் வலியுறுத்தி இருக்கக் காண்கிறோம். இத்தொடரே இக்கவிதையின் உயிராகவும் விளங்குகிறது.

முதலாளிகளுடைய கட்டுப்பாடுகள், அடக்குமுறைகள், பணச்செருக்கு கள் எல்லாம் ஒருநாள் முடிவுக்கு வரும். தொழிலாளர்கள் சமூக அந்தஸ்தினைப் பெற்று வாழ்வில் மேன்மையடைவார்கள் என்பதனை "மாடும் கயிறுகள் அறுக்கும்" என்ற மூன்று சொல்லினூடாக நிலைநாட்டியமை கவிஞருடைய கவித்துவம் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்தகால வினாக்கள்

## 2014 கிரகித்தல் வினா

**சாதி ஒழித்திடல் ஒன்று..... (பாரதிதாசன் கவிதை)**

i) சாதி ஒழிப்புக்கும் தமிழ்மொழி வளர்ச்சிக்கும் இடையிலான தொடர்பு குறித்த பாரதியின் நிலைப்பாடு எவ்வாறு காட்டப்படுகின்றது?

ii) சொல்லுக்கும் செயலுக்கும் இடையில் முரண்பாடற்ற பாரதியின் ஆளுமை எவ்வாறு புலப்படுத்தப்படுகிறது?

iii) பாரதிக்கும் பாரதிதாசனுக்கும் இடையிலான நெருங்கிய உறவு எவ்வாறு வெளிப்படுகின்றது?

iv) கையாளப்பட்டுள்ள உருவகங்களின் சிறப்பினை விளக்குக.

## சிறுகுறிப்பு வினா

i) சம்பள நாள் என்ற குறிஞ்சித்தென்னவன் கவிதையில் தோட்டத் தொழிலாளரின் துயரம்.

## 2013 கிரகித்தல் வினா

**மாடு மாடு என்று பல.... (முருகையன் கவிதை)**

i) இக் கவிதையின் பொருளைப் பொறுத்தவரை பின்வரும் மூன்று கூற்றுக்களுள் எது மிகப் பொருத்தமானது என்பதைத் தெரிந்து, அது ஏன் மிகப் பொருத்தமானது என்பதை விளக்குக. இக்கவிதை

   i) உழைப்பின் பெருமை பற்றிப்பேசுவது.

   ii) ஏழைகளின் உழைப்புச் சுரண்டப்படுவதற்கு எதிரானது

   iii) பணக்காரரின் சொகுசான வாழ்க்கை பற்றியது.

ii) ஏழைகளின் உழைப்புக்கும் பணக்காரரின் சொகுசு வாழ்க்கைக்கும் இடையில் உள்ள தொடர்பைக் கவிஞர் எவ்வாறு வெளிப்படுத்துகிறார்?

iii) வேலைக்காரச் சிறுவனின் பிரதேச அடையாளம் இக்கவிதையில் வெளிப்படுமாற்றை விளக்குக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iv) "மாடும் கயிறுகள் அறுக்கும்" என்ற தொடர் மூலம் கவிஞர் வெளிப்படுத்த விரும்பும் கருத்தைத் தெளிவுபடுத்துக.

## சிறுகுறிப்பு வினா

i) தேசிகவிநாயகம்பிள்ளையின் சூரியகாந்தி கவிதையில் வெளிப்படும் கற்பனைச் சிறப்பை விளக்குக.

## 2012 கிரகித்தல் வினா

**கும்மியடி தமிழ் நாடு .... (பாரதியார் கவிதை)**

i) "நம்மைப் பிடித்த பிசாசுகள்" , "விந்தை மனிதர்" ஆகிய சொற்பிரயோகங்கள் இக்கவிதையில் பெறும் முக்கியத்துவத்தை விளக்குக.

ii) பெண்ணடிமைத் தனத்தின் தீவிரத்தை உணர்த்த "மாட்டை அடித்து வசக்கித் தொழுவினில் மாட்டும் வழக்கம்" . "நல்ல விலை கொண்டு நாயை விற்பார்" ஆகிய கூற்றுக்களைப் பாரதி பயன்படுத்தியிருப்பதில் நீர் காணும் சிறப்புக்களை விளக்குக.

iii) ஆண் பெண் சமத்துவம், பெண்களின் ஆற்றல் என்பன பற்றிய பாரதியின் கருத்தைத் தெளிவுபடுத்துக.

iv) "மாதர் அறங்கள்" என்னும் பாரதியின் எண்ணக்கருக்களைக் குறித்துக் கருத்துரை வழங்குக.

## சிறுகுறிப்பு வினா

i) பாரதமாதா திருப்பள்ளி எழுச்சி என்ற பாடலில் பாரதியாரின் விடுதலை வேட்கை வெளிப்படும் விதம்.

ii) இன்று உனக்கும் சம்பளமா? என்ற நீலாவணனின் கவிதையில் ஆசிரியர் ஒருவரின் வறுமைத்துயரை எடுத்துரைப்பதில் கவிஞரின் கவித்திறன் வெளிப்படுமாறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2011 கிரகித்தல் வினா

**மப்பன்றிக் காலமழை காணா.... (து.உருத்திரமூர்த்தி கவிதை)**

i) விவசாயியின் உழைப்பு, அதன் விளைவு, அது அவனுள் ஏற்படுத்தும் உளக்கிளர்ச்சி என்பன இக்கவிதையில் வெளிப்படுத்தப்படுமாற்றை விளக்குக.

ii) திடீர் மழையையும் அது ஏற்படுத்தும் பேரழிவையும் கவிஞர் சித்தரிக்குமாற்றிலுள்ள சிறப்புக்களை எடுத்துக்காட்டுக.

iii) அழிவின் பிறகும் மிடுக்குடன் மீண்டும் தொடங்கும் விவசாயியின் பாத்திர உருவாக்கம் பற்றி மதிப்பிடுக.

iv) கவிஞர் கையாளும் மொழிநடை பற்றிக் கருத்துரை வழங்குக.

## 2011 சிறுகுறிப்பு வினா

i) பாடப் பகுதியில் தரப்பட்டுள்ள உமர்கய்யாம் பாடல்களுக்கான மூன்று மொழி பெயர்ப்புக்களுக்கிடையே காணப்படும் வேறுபாடுகளும் அவற்றுக்கான காரணங்களும்.

ii) பத்திரிகை பற்றிய பாரதிதாசன் பாடலில் பத்திரிகையின் ஆற்றலும் முக்கியத்துவமும்.

*******



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞர் பரா ரதீஸ் இலக்கிய வரலாறுகளையும், இலக்கியப் படைப்புக் களையும் நன்கு பயின்ற ஒருவர். அதனால் அவரிடம் தமிழ்க் கவிதை மரபு பற்றிய உணர்வும், தெளிவும் பொருந்தியுள்ளன என்று கொள்வதற்கு தடையேதுமில்லை. அவர் பழந்தமிழ், இடைக்காலத்தமிழ், நிகழ்காலத்தமிழ் ஆகிய மூன்றினையும் நன்கு பயின்று பழகியவர். இந்த வகையிலே பழ மரபின் செல்வாக்கு அவர் படைத்தளித்த கவிதையின் ஓசைகளிலும் சொல்லாட்சிப் பண்புகளிலும் விரவியுள்ளமையை நாம் இனம் காண்கிறோம்.

கவிஞர் இ.முருகையன்
26.11.2003

(அவன் ஒரு மெழுகுவர்த்தி என்ற கவிதை நூலுக்கான முன்னுரையின் ஒரு பகுதி.

அன்பு ரதீஸ்
ஒரு திறமையாளன்.
நல்ல கவிஞன்.
பாண்டித்தியமிருந்தும்
தளம்பாத தங்கக் குணத்தை
எல்லாம் கண்டேன்
உங்களிடம்.
உங்களுக்கு என் நன்றிகள்.

டாக்டர் ஸ்ரீதர் பிச்சையப்பா
2003.




S.P.M பிறின்ரேர்ஸ், வி.எம்.றோட், பருத்தித்துறை. T.P.No: 0774966997

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org